**ஜனசெவண**

எமது எதிர்காலம்

# ஆண்டறிக்கை 2012

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை

நிர்மாணிப்பு, பொறியியல் சேவைகள்,
வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சு

**உள்ளடக்கம்** **பக்கம்**


| | |
|---|---|
| **அ. பொது** | |
| எமது தொலைநோக்கு, எமது செயற்பணி, எமது குறிக்கோள்கள் | 02 |
| கூட்டிணைத்தல் தகவல்கள் | 03 |
| பணிப்பாளர் சபை | 04 |
| கூட்டிணைத்தல் முகாமைத்துவம் | 05 |
| எமது பிரதானமான செயற்பாடுகள் | 06-07 |
| **ஆ. கூட்டிணைக்கப்பட்ட நிர்வாகம்** | |
| பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் | 08 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் | 08 |
| உள்ளக நிர்வாகம் | 08 |
| நிறைவேற்று முகாமைத்துவம் | 08 |
| இடர் முகாமைத்துவம் | 09-10 |
| சுற்றாடல் பிரச்சினைகள் | 10 |
| **இ. தொழிற்பாட்டு செயலாற்றுகை அறிக்கையிடல்** | |
| வீடமைப்பு அபிவிருத்தி | 11-14 |
| ஆதன முகாமைத்துவமும் சந்தைப்படுத்தலும் | 15-16 |
| காணி ஒப்படைப்புகள் மற்றும் சந்தைப்படுத்தல் | 16-17 |
| பொறியியல் சேவைகள் | 18-20 |
| மனித வள முகாமைத்துவம் | 21-28 |
| சட்டங்கள் | 28-29 |
| திட்டமிடல் மற்றும் முன்னேற்றம் | 30 |
| **ஈ. தொழிற்படுத்தல் பெறுபேறுகளின் மீளாய்வு** | |
| கடன் அறவிடல் செயலாற்றுகை 2012 கிராம வீடமைப்பு | 31 |
| நகர வீடமைப்பு சாப்புகள்/கடன் தவணைகள் மற்றும் வாடகை அறவிடுதல் - 2012 செயலாற்றுகை | 32 |
| தகவல் பிரசாரம் | 32-34 |
| தகவல் தொழில்நுட்பம் | 35-36 |
| ஓசன் வீவ் டிவலொப்மன்ற் கம்பனி | 37-38 |
| **உ. நிதிக் கூற்றுகள்** | |
| ஐந்தொகை | 39 |
| வருமான, செலவு அறிக்கை | 40 |
| கணக்கீட்டுக் கொள்கைகள் | 41-44 |
| நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் | 45-71 |
| **ஊ. மாவட்ட அலுவலகங்களின் அமைவிடம், முகவரிகள்** | 72-74 |
| **எ. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை** | 75-89 |

அ

பொது

## அறிமுகம்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையானது 1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் மூலம் இலங்கையில் வீடமைப்பு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்காகத் தாபிக்கப்பட்டுள்ளது.

இவ்வதிகாரசபையானது அதன் கொழும்பில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்திற்கு மேலதிகமாக 26 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 03 நகர அலுவலகங்கள் மூலம் நாடளாவிய ரீதியில் செயலாற்றி வருகின்றது.

## எமது தொலைநோக்கு

இலங்கையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அடிப்படை வசதிகளுடன் கூடிய பாதுகாப்பான வீடொன்றை உரித்தாக்கிக் கொடுத்தல்.

## எமது செயற்பணி

வீடமைப்பு அபிவிருத்தி தொடர்பிலான “ஜனசெவன” மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தை ஏற்புடைய அனைத்து தரப்பினர்களினதும் பங்களிப்புடன் திட்டமிட்டவாறு செயற்படுத்தல்.

## எமது குறிக்கோள்கள்

- குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு கடன்.ஃ.உதவிகளை வழங்குவதன் ஊடாக புதிய வீடொன்றை நிர்மாணித்துக் கொள்வதற்கும் தர நியமமற்ற வாழ்விடங்களை மேம்படுத்துவதற்கும் உதவியளித்தல்.
- நடுத்தர வருமானம் பெறுவோருக்கு தாங்கிக்கொள்ளக்கூடிய விலையில் தனியார்துறையுடனான கூட்டுமுயற்சியின் ஊடாக வீடுகளை வழங்குதல்.
- நகர வீடமைப்புத் திட்டங்களின் நவீனமயமாக்கல் மற்றும் மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- முழு நாட்டையும் உள்ளடக்குகின்றவாறு குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வீடமைப்பு நிர்மாணிப்புகளுக்கான மதியுரைச் சேவைகளைப் பெற்றுக்கொடுத்தல்.
- வீடமைப்புடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின்போது வெளிவாரி நிறுவனங்களுக்குத் தேவையான மதியுரைச் சேவைகளை வழங்குதல்.
- சிக்கனமான நிர்மாணிப்புத் தொழில்நுட்பத்தை பரப்புதல் மற்றும் தொழில்சார் பயிற்சிகளின் ஊடாக பயிற்றப்பட்ட ஊழியர்களை உருவாக்குதல்.
- குடியிருப்பாளர்களின் ஆதன உரிமையை உறுதி செய்தல்.
- வீடமைப்பு அபிவிருத்தியுடன் தொடர்புடைய அனைத்துத் துறைகளினதும் அலுவல்களை செயற்படுத்தல், மேம்படுத்தல் மற்றும் இணைப்பாக்கம் செய்தல்.
- மேற்படி குறிக்கோள்களில் சிலவற்றை அல்லது அனைத்தையும் நிறைவேற்றிக்கொள்வதற்குத் தேவையானவாறு தகுந்த விதத்தில் செயலாற்றுதல்.

# கூட்டிணைத்தல் தகவல்கள்

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை |
| **சட்ட நிலைமை** | : | 1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டம் |
| **கூட்டிணைக்கப்பட்ட ஆண்டு** | : | 1979 |
| **பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்** | : | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை<br>செயலகம், இல. 34, சேர் சித்தம்பலம் ஏ<br>காடினர் மாவத்தை கொழும்பு 02. |
| **தொலைபேசி இலக்கம்** | : | 2421606, 2431707, 2430410,<br><br>2431722, 2421748, 2380874 |
| **தொலை நகல்** | : | 2434892 |
| **மின் அஞ்சல்** | : | dgmf@nhda.lk |
| **இணையத் தளம்** | : | www.nhda.lk |
| **கணக்காய்வாளர்கள்** | : | கணக்காய்வாளர் தலைமை அதிபதி<br><br>கணக்காய்வாளர் தலைமை அதிபதி<br>திணைக்களம் |
| **மதியுரை சட்டத்தரணிகள்** | : | சட்ட மாஅதிபர்<br>சட்ட மாஅதிபர் திணைக்களம்<br>ஹல்ஸ்டோப்<br>கொழும்பு 12. |
| **வங்கியாளர்கள்** | : | இலங்கை வங்கி<br>தாபனக் கிளை<br>அச்சிலன் சதுக்கம்<br>கொழும்பு 01<br><br>மக்கள் வங்கி<br>தலைமை அலுவலகக் கிளை<br>சேர் சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை<br>கோழும்பு 02 |

## பணிப்பாளர் சபை

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் சபையானது அமைச்சரினால் நியமிக்கப்படுகின்ற 6 அங்கத்தவர்களையும் நிதி அமைச்சின் பிரதிநிதி என்றவாறு மேலுமொரு அங்கத்தவரையும் உள்ளடக்கியுள்ளதோடு, நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களில் ஒருவர் தலைவராக அமைச்சரால் நியமிக்கப்படுவார்.

| பெயரும் முகவரியும் | பதவி | சேவை நிலையம் |
|---|---|---|
| 1. திரு. எஸ்.ஏ. ஜயந்த சமரவீர<br>மாவல தெற்கு<br>வாத்துவை | தலைவர் | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை |
| 2. திரு. ஏ.டபிள்யூ. தயானந்த<br>இல. 639/3/ஏ,<br>குணவர்தன மாவத்தை<br>பங்கலாவ சந்தி,<br>பிட்டகோட்டே,<br>கோட்டே. | உப தலைவர் | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை |
| 3. திரு. பத்ம உதயசாந்த குணசேகர<br>தர்மோதய மாவத்தை<br>பொத்துவில் வீதி<br>மொனராகலை | செயற்பாட்டு பணிப்பாளர் | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை |
| 4. திருமதி சாந்தனீ விஜேவர்தன<br>இல. 13 ஏ, ஜனப்பிரிய மாவத்தை<br>பொருபன வீதி<br>இரத்மலானை | அங்கத்தவர் | அரச நிதிக் கொள்கைகள் திணைக்களம் பொதுத் திறைசேரி |
| 5. மருத்துவர் வசந்த பண்டார<br>இல. 2/270, கொழும்பு வீதி<br>குருணாகல் | அங்கத்தவர் | நிர்மாணிப்பு, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு |
| 6. சட்டத்தரணி ராஜா குணரத்ன<br>இல. 150/05<br>ஹைலெவல் வீதி<br>மஹரகம | அங்கத்தவர் | வீடமைப்பு ஆணையாளர் நிர்மாணிப்பு, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு |
| 7. திரு. வீ. ரஞ்ஜித் வில்வல ஆரச்சி<br>இல. 15<br>4 வது ஒழுங்கை<br>ராஜகிரிய<br>(2012.10.15 ஆம் திகதி முதல்) | அங்கத்தவர் | நிர்மாணிப்பு, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு |
| 8. திரு. சந்தன சேசத் ஜயகொடி<br>இல. 33, யட்டாலதிஸ்ஸ மாவத்தை<br>களனி<br>(2011.05.24 ஆம் திகதி முதல்<br>2012.10.15 ஆம் திகதி வரை) | அங்கத்தவர் | மக்கள் இணைப்புச் செயலாளர் நிர்மாணிப்பு, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு |

## கூட்டிணைத்தல் முகாமைத்துவம்

**பிரிகேடியர் ஏ.எல்.எஸ்.கே. பெரேரா ஆர்.எஸ்.பீ.**
பொதுமுகாமையாளர்
(2012.05.14 ஆம் திகதி வரை)

**பிரிகேடியர் மஹிந்த முதலிகே ஆர்.டபிள்யூ.பீ.ஆர்.எஸ்.பீ.**
பொதுமுகாமையாளர்
(2012.05.14 ஆம் திகதி முதல்)

**திரு. காமினீ பன்னிலவிதான**
பிரதிப் பொதுமுகாமையாளர் (இணைப்பு)
(2012.01.16 ஆம் திகதி முதல்)

**திரு. லலித் எதிரிசிங்க**
பிரதி பொதுமுகாமையாளர் (மனித வள முகாமைத்துவம்)

**திரு. காமினீ பன்னிலவிதான**
பிரதிப் பொதுமுகாமையாளர் (வீடமைப்பு அபிவிருத்தி)
(2012.01.15 ஆம் திகதி வரை)

**திரு. பீ.எம்.எஸ்.கே. பதிராஜ**
பிரதிப் பொதுமுகாமையாளர் (வீடமைப்பு அபிவிருத்தி)
(2012.01.16 ஆம் திகதி முதல்)

**திரு. கே.டபிள்யு.ஏ. தர்ம ஸ்ரீ காரியவசம்**
பிரதிப் பொதுமுகாமையாளர் (தகவல், பிரசாரம்)

**திருமதி எம்.எஸ். வீரசிங்க**
பிரதிப் பொதுமுகாமையாளர் (பொறியியல் சேவைகள் மற்றும் நிர்மாணிப்பு)

**திரு. ஈ.ஏ.டீ.எஸ். எதிரிசிங்க**
பிரதிப் பொதுமுகாமையாளர் (நிதி)

**திரு. டபிள்யு.ஏ.டீ. சரத் குமார**
பிரதிப் பொதுமுகாமையாளர் (ஆதன முகாமைத்துவம் மற்றும் சந்தைப்படுத்தல்)

**திரு. டபிள்யு. தனசந்திர**
உதவிப் பொதுமுகாமையாளர் (திட்டமிடல் மற்றும் முன்னேற்றம்)

**திருமதி ஏ.கே. புஷ்பா ரோஹினீ**
உதவிப் பொதுமுகாமையாளர் (சட்டம்)

**திரு. பீ.எம்.ஆர். மாரசிங்க**
பிரதான உள்ளக கணக்காய்வாளர்

**திரு. மனுஜ கருணாரத்ன**
பணிப்பாளர் சபை செயலாளர்

## எமது பிரதானமான செயற்பாடுகள்

எமது குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு இச்செயற்பாடுகள செயற்படுத்தப்படுகின்றன.

1. **அரசதுறையும் தனியார்துறையும் கூட்டாக வீடமைப்பு நிர்மாணிப்புகளை வளர்ச்சியடையச் செய்தல்**
   பொருத்தமான நிலங்களை இனங்காணல்.
   விருப்பமுள்ள தரப்பினர்களை அழைத்தல்.
   தகுதியான அபிவிருத்தியாளர்களுடன் கலந்துரையாடுதல் மற்றும் முன்மொழிவுகளைப் பெறுதல்.
   முன்மொழிவுகளை மதிப்பீடு செய்தல் மற்றும் அபிவிருத்தியாளர்களை தெரிவு செய்தல்.
   கருத்திட்ட வரைபடங்களை உருவாக்குதல்.
   புரிந்துணர்வு உடன்படிக்கைகளை கைச்சாத்திடல்.
   ஒருங்கிணைந்த கம்பனிகளை உருவாக்குதல்.
   நடைமுறைப்படுத்தல், நிர்வகித்தல் மற்றும் தரச் சான்றுப்படுத்தல்.
   சந்தைப்படுத்தல் மற்றும் வீடுகளை விற்பனை செய்தல்.
   முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை தாபித்தல்.

2. **காணித் துண்டுகளைப் பெற்றுக்கொடுத்தல்**
   பொருத்தமான நிலத்தை இனங்காணல்.
   தகுதியை ஆராய்தல்.
   காணித் துண்டு வரைபடங்களைத் தயாரித்தல்.
   தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல்.
   காணி பெறுனர்களை இனங்காணலும் தெரிவு செய்தலும்.
   தேவைப்படின் கடன் வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளல்.
   தெரிவு செய்யப்பட்ட காணி பெறுனர்களுக்கு காணித் துண்டுகளை ஒப்படைத்தல்.

3. **வீடமைப்பு தொடர்பான மதியுரைச் சேவைகள்**
   மாவட்ட வீடமைப்பு மதியுரைச் சேவை நிலையங்களைத் தாபித்தல்.
   தகைமை அறிக்கைகளைத் தயாரித்தல்.
   தேவையான சந்தர்ப்பங்களில் திட்டவரைபடங்களை வழங்குதல்.
   அளவு.'.பொருட்கள் பட்டியல்.'.செலவு மதிப்பீடுகளைத் தயாரித்தல்.
   திட்டவரைபடங்களுக்கான அங்கீகாரத்தைப் பெறுதல்.
   நிர்மாணிப்புகளின் மேற்பார்வை மற்றும் தரச் சான்றுப்படுத்தல்.
   நிர்மாணிப்புத் தரவுத் தளமொன்றை பேணிவருதல்.

4. **வீடமைப்பு நிர்மாணிப்புகளுக்கான உதவிச் சேவைகளை வழங்கல்**
   வீடமைப்புத் தகுதியை ஆராய்தல்
   சமுதாயத்தை விழிப்புணர்வூட்டல் மற்றும் ஒழுங்கமைத்தல்
   சமுதாய அபிவிருத்தி அமைப்புகளை உருவாக்குதல்
   வீடமைப்பு/குடியமர்த்தல் திட்டங்களைத் தயாரித்தல்
   குறைந்த செலவின நிர்மாணிப்புத் தொழில்நுட்ப முறைகளைப் பற்றிய தகவல்களை பரப்பல்.
   தேவைப்பாட்டின் அடிப்படையில் நிதி உதவிகளை வழங்கல்
   நிர்மாணிப்புகளின் தரம்/இசைவாக்கத்தை சான்றுப்படுத்துவதற்காக மேற்பார்வை செய்தல்.
   உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்/தொடர்பை பேணிவருதல்

5. **நகர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்**
   தகுதியான இடங்களை இனங்காணல்.
   நில அளவைப் பணிகளை மேற்கொள்ளல்.
   நிதிசார்ந்த இயலுமை மட்டத்தை தீர்மானித்தல்.
   திட்டவரைபடங்களைத் தயாரித்தல் மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
   முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களைத் தாபித்தல்.
   உரிமையை ஒப்படைத்தல்.

6. **குறைந்த செலவிலான நிர்மாணிப்புத் தொழில்நுட்ப முறைகளைப் பிரபல்யப்படுத்தல்**

ஏற்புடைய தனியார் மற்றும் அரச நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணிவருதல் மற்றும் தகவல் பொருட்களின் மாதிரிகள் ஆகியவற்றை சேகரித்தல்.

மதியுரை நிலையங்களின் மூலம் புதிய தொழில்நுட்ப முறைகளையும் பொருட்களையும் அறிமுகப்படுத்தல்.

7. **வீடமைப்புத் திட்டங்களின் பொதுப் பிரதேசங்கள், அதன் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகளுடன் கூடியதாக மாகாண மேலாண்மைக்கு ஒப்படைத்தல்**

பொதுப் பிரதேசங்கள்/திறந்த இடங்களின் எல்லைகளை அடையாளமிடல்.

நில அளவையாளர் வரைபடங்களைத் தயாரித்தல்.

மாகாண மேலாண்மையிலிருந்து இணக்கப்பாட்டைப் பெறுதல்.

உறுதியொன்றின் மூலம் ஆதனங்களை ஒப்படைத்தல்.

வீட்டு உரிமையாளர்களுக்கு அறிவித்தல்.

8. **திறன் வளர்ச்சிக்கான பயிற்சியளிப்பு**

தொழில்சார் நிறுவனங்கள் மற்றும் முகவராண்மைகளுடன் கலந்துரையாடி பயிற்சி அமர்வுகளை ஒழுங்குசெய்தல்.

தொழில் பயிற்சி வாய்ப்புகளை அமைத்துக்கொடுத்தல்.

அடிப்படை உபகரண உதவிகளை வழங்குதல்.

செயற்பாட்டைப் பரிசோதித்தல்.

அனுகூலமான தொழில்களின் பொருட்டு உதவியளிப்பதற்காக தரவுத் தளமொன்றைப் பேணிவருதல்.

திறன்களைக் கொண்ட நபர்களின் தகவல்கள் அடங்கிய பெயர்ப் பட்டியலொன்றை பேணிவருதல்.

9. **வீட்டுக் கையிருப்புகள் தொடர்பிலான தரவுகளைப் பேணிவருதல்**

கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுடனான இணைப்பாக்கம் மற்றும் தரவுகளைச் சேகரித்தல்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மதியுரை நிலையங்களுடனான இணைப்பாக்கம் மற்றும் தரவுகளைச் சேகரித்தல்.

மாகாண மேலாண்மைகளுடனான இணைப்பாக்கம் மற்றும் தரவுகளைச் கேரித்தல்.

மாவட்ட வீடமைப்புக் குழுக்களுக்கு தரவுகளைச் சமர்ப்பித்தல்.

குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளை நிரல்படுத்தல்.

தரவுகளை அரை ஆண்டு ரீதியில் தரவுத் தளத்திற்குச் சமர்ப்பித்தல்.

எதிர்காலத் திட்டமிடல்களின் பொருட்டு தரவுகளைப் பயன்படுத்தல்.

நிறுவன ரீதியிலான நிர்வாகத்தின் உயர் மட்டம் வரை செல்வதற்கான தீவிர இடையறா அர்ப்பணிப்பை நாம் கொண்டுள்ளோம். இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம், பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களம், நிதி அமைச்சு ஆகிய நிறுவனங்களின் மூலம் முன்மொழியப்பட்ட மிகப் பொருத்தமான நடவடிக்கைகளைக் கடைப்பிடிப்பதற்கு எப்போதும் முயற்சியெடுக்கப்படுவதோடு எமது வகைப்படுத்தலுக்குரிய எமது அமைச்சினால் வழங்கப்படுகின்ற அளவீடுகளுக்கு இணங்க செயற்பட்டு வருகிறோம்.

### பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்

பணிப்பாளர் சபை ஒவ்வொரு மாதமும் கூடுகின்றது. வரவு செலவுத் திட்டத்திற்கு ஒப்பீட்டளவிலான முன்னேற்றம் ஒவ்வொரு மாதமும் அதன் மூலம் மீளாய்வு செய்யப்படுகின்றது. மாற்றங்களை அடையாளங்கண்டு கொள்கைகளை மாற்றுவதற்குப் பொருத்தமான தீர்வுகள் வழங்கப்படுகின்றன. ஆண்டினுள் 21 கூட்ட அமர்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

### கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

பொதுமுகாமையாளரையும் நிறைவேற்றுத் தரமல்லாத 4 பணிப்பாளர்களையும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உள்ளடக்கியுள்ளது.

2012 ஆம் ஆண்டில் பின்வரும் உத்தியோகத்தர்கள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அங்கத்தவர்களாக சேவையாற்றியுள்ளனர்.

1. திருமதி சாந்தனீ விஜேவர்தன - தலைவர்
2. திரு. ஏ.டபிள்யு. தயானந்த - அங்கத்தவர்
3. சட்டத்தரணி ராஜா குணரத்ன - அங்கத்தவர்
4. திரு. கே.பீ. குணதாச - அங்கத்தவர்
5. திரு. ஈ.கே.கே.எஸ். எதிரிசிங்க - அங்கத்தவர்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் மூலம் கணக்கீட்டு மற்றும் நிதி முகாமைத்துவ முறையின் சிறந்த நிலைத்திருத்தல் உறுதிசெய்யப்படுவதோடு கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்புடையதான சட்ட விதிகளுக்கு இணங்க உள்ளக நிர்வாகத்தின் செயற்பாடு மீளாய்வு செய்யப்படும்.

2012 ஆம் ஆண்டினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு 8 கூட்ட அமர்வுகளை நடத்தியுள்ளது.

### மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்

கௌரவ அமைச்சரின் தலைமையில் தவிசாளர், உப தவிசாளர், செயற்பாட்டுப் பணிப்பாளர், பொது முகாமையாளர், அனைத்து பிரதி பொது முகாமையாளர்கள் மற்றும் மாவட்ட முகாமையாளர்களின் பங்கேற்புடன் மாதாந்தம் நிறுவனத்தின் அலுவல்கள் தொடர்பாக முன்னேற்றம் மீளாய்வு செய்யப்படுகின்றது. 2012 ஆம் ஆண்டினுள் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் 10 நடத்தப்பட்டுள்ளன.

### உள்ளக நிர்வாகம்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தனது நிறுவனத்தின் சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் உச்சப் பயன்பாட்டை உறுதிசெய்யும் பொருட்டு உள்ளக நிர்வாகக் கொள்கைகள் மற்றும் ஒருசில மதியுரைகளை நடைமுறைப்படுத்தியுள்ளது. அதேபோன்று மூலோபாயங்களைத் தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் ஒரு பொறுப்பாகும்.

இதற்கு சமனான விதத்தில் பணிப்பாளர் சபை சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட மாதாந்த அறிக்கையிடல் முறையின் ஊடாக உள்ளக நிர்வாகத்தை உறுதிசெய்வதோடு சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளுக்கு இடையே சமநிலையைப் பேணிவருவதற்குத் தேவையான தீர்மானங்களை மேற்கொள்கின்றது.

வாராந்தம் தவிசாளரின் தலைமையில் முகாமைத்துவக் குழுக் கூட்டமொன்று நடத்தப்படுவதோடு, அனைத்து பிரதிப் பொதுமுகாமையாளர் பிரிவுகளினதும் அலுவல்கள் தொடர்பாக கலந்துரையாடப்படும். விலைக் குழுக்கள், திணைக்கள கொள்வனவு வழங்கல் குழுக்கள், ஆதன துணைக் குழுக்கள் மற்றும் மேன்முறையீட்டுக் குழுக்களை நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### நிறைவேற்று முகாமைத்துவம்

தலைமை அலுவலகத்தின் ஒவ்வொரு பிரிவினதும் தலைமைத்துவத்தை பிரதி பொதுமுகாமையாளர் ஒருவர் ஏற்றுள்ளதோடு, 25 மாவட்ட அலுவலகங்களுடன் 03 நகர அலுவலகங்களின் பொறுப்பு சிரேஷ்ட மாவட்ட முகாமையாளர்.ஃமாவட்ட முகாமையாளர் வசமுள்ளது. பிரதிப் பொதுமுகாமையாளர்கள் மற்றும் சிரேஷ்ட மாவட்ட முகாமையாளர்கள்.ஃமாவட்ட முகாமையாளர்கள் பொதுமுகாமையாளருக்கு அறிக்கையிடுதல் வேண்டுமென்பதோடு, பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரான பொதுமுகாமையாளர் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

## இடர்நேர்வு முகாமைத்துவம்

பெருந்தொகையான சேவை வழங்குனர்களுக்கு அனைத்து வசதிகளுடனும் கூடிய வீடமைப்பு வசதிகளை வழங்குகின்றதும் நாடு முழுவதிலும் பரவியுள்ள 25 பிரதேச அலுவலகங்களைக் கொண்டுள்ளதுமான இலங்கையின் ஒரேயொரு அரச நிறுவனமான தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அதன் பல்வேறான பங்குதாரர்களின் தேவைகளைப் பேணும் பொருட்டு நிதிசார்ந்த மற்றும் நிதிசாரா பல இடர்நேர்வுகளுக்கு முகம்கொடுக்க நேரிடுவதோடு, அதனை முன்கூட்டி முகாமைத்துவம் செய்து வருகின்றது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் இடர்நேர்வு முகாமைத்துவமானது பணிப்பாளர் சபையின் ஊடாகவே ஆரம்பிக்கப்படுகின்றது. அது பல்வேறான செயற்பாடுகளைக் கொண்டதாயுள்ளதோடு பங்குதாரர்களின் தேவைகள் மற்றும் அப்போதைக்குள்ள பொருளாதார மற்றும் தொழில்முயற்சி நிலைமைகளின் கீழ் அது முறைசார்ந்த விதத்தில் மீளாய்வு செய்யப்படுகின்றது. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அனைத்து தொழில்சார் குறிக்கோள்களையும் நிறைவேற்றிக்கொள்வதற்காக, அதன் கூட்டிணைக்கப்பட்ட முகாமைத்துவத்தின் ஆலோசனைகளின் பேரில் கொள்கைகள், வழிமுறைகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவத்தை உறுதிசெய்யும் பொருட்டு தேவையான கட்டமைப்புகளைக் கட்டியெழுப்புதல் பணிப்பாளர் சபையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் மூலம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அனைத்து தொழில்சார் நோக்கங்களும் நிறைவேற்றிக்கொள்ளப்படுகின்றது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை இடர்நேர்வுகளுக்கு உள்ளாதல் தொடர்பில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற செயற்பாடுகள் மற்றும் கட்டுப்படுத்தக் கூடியதான முறைமைகளின் பலவீனங்களை இனங்காணும் பொருட்டு இடர்நேர்வு முகாமைத்துவச் செயற்பாடு அதிகார சபையின் கணக்காய்வுப் பிரிவுடன் இணைந்து செயற்படுகின்றது. வினைத்திறன் மற்றும் கட்டுப்பாட்டு நிலைமைகளின் போதுமாந்தன்மை தொடர்பிலான சுயாதீனமான கருத்துகளை காலக்கிரமத்துடன் முகாமைத்துவத்திற்கு அறிவித்தல் கணக்காய்வுப் பிரிவின் மூலம் நடைபெறுகின்றது.

## திரவத்தன்மை இடர்நேர்வு

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் உடன்படிக்கைகள் தொடர்பிலான கடப்பாடுகளை உரிய காலத்தினுள் நிறைவேற்றுவதற்கு இயலாமற்போகின்றபோது இந்த இடர்நேர்வுக்கு உள்ளாகின்றது. அவற்றின் காலம் கடந்துள்ள சந்தர்ப்பங்களில் நிதிசார்ந்த பொறுப்புகளை நிறைவேற்றும் பொருட்டு நிதியங்கள் இருத்தலும் தேவைகள் எழுகின்றபோது அவற்றின் பயன்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நிதிசார் ஏற்பாடுகள் உள்ளதென்பதை உறுதி செய்தலும் இதில் உள்ளடங்குகின்றது.

திட்டமிடலுக்கான வழிகாட்டல், ஒழுங்குமுறையான தேவைகளின்படி செயலாற்றுதல், உடன்படிக்கைகளின் கடப்பாடுகள் மற்றும் வளர்ச்சி எதிர்பார்ப்புகளுக்கு முகம்கொடுப்பதற்குத் தேவையான போதியளவு திரவத்தன்மை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தாயுள்ளதென்பதை உறுதிசெய்தல் ஆகிய முதன்மையான விடயங்கள் பணிப்பாளர் சபைக்கும் கூட்டிணைக்கப்பட்ட முகாமைத்துவத்தின் அங்கத்தவர்களுக்கும் முகாமைத்துவத்தின் பொருட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட முகாமைத்துவம் அதற்குரிய முதன்மையான நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு,

- பணம் ஈட்டுவதுடன் தொடர்புடைய மாற்று வழிமுறைகளை போதியளவு உறுதி செய்தல்.
- அப்போதைக்குள்ள கடன்கள், முதலீடுகள் மற்றும் பணம் ஈட்டுகின்ற வழிமுறைகளை காலக்கிரமத்தின்படி மீண்டும் ஆராய்தல்.
- அப்போதைக்குள்ள விலைகளை மீளாய்வு செய்கின்ற அதேவேளை, போட்டியாளர்களது விலைகளைப் பற்றிய பகுப்பாய்வொன்றை மேற்கொள்ளல்.
- கூட்டிணைத்தல் அளவீடுகளுக்கு இணங்க திரவத்தன்மை வீதங்களுக்கான வழிகாட்டல்கள்.

அளிப்புகள், உள்ளக ரீதியில் ஈட்டப்படுகின்ற நிதியங்கள் மற்றும் பணமாக மாற்றக்கூடிய குறுகியகால முதலீடுகளை நிர்வகிப்பதன் ஊடாக திரவத்தன்மையைப் பேணிவருவதை நாளாந்தம் மேற்கொள்கின்றது.

### சந்தை இடர்நேர்வு

விலைக் கூருணர்வுடைய சொத்துகள் மற்றும் பொறுப்புகளைப் பேணிவருகின்றபோது எழுகின்ற நட்டங்கள் தொடர்பில் இந்த இடர்நேர்வு உருவாகின்றதோடு, பிரதானமாக வட்டி வீதங்களின் மாற்றங்கள் மற்றும் காலத்தின் போக்கில் கட்டடப் பொருட்களின் விலைகளில் ஏற்படுகின்ற அசைவுகளின் காரணமாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையில் இது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

வீடு தேவைப்படுகின்ற அனைத்து நபர்களுக்கும் வீடொன்றைச் சொந்தமாக்கிக் கொள்வதற்கு அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற பணம் போதியதாயில்லாததன் காரணமாக சந்தை இடர்நேர்வுக்கு முகம்கொடுப்பதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு நேரிடுகின்றது.

கூட்டிணைத்தல் முகாமைத்துவ நோக்கங்களை ஈட்டிக்கொள்வதற்கு பங்களிப்புச் செய்கின்ற ஏனைய பிரதானமான பங்குதார நிறுவனங்களின் தேவைகளை நிறைவு செய்தல் மற்றும் சேவை வழங்குனர்களின் பணத்திற்கு ஏற்ற விதத்திலான சேவைக்கான பெறுமதியைப் பெற்றுக்கொடுத்து வீடமைப்புச் சந்தைக்கு விடுக்கப்படுகின்ற அச்சுறுத்தல்களை உச்சமட்டத்தில் கட்டுப்படுத்துதல் கூட்டிணைப்புச் சபையின் அங்கத்தவர்களால் மேற்கொள்ளப்படுகின்றது.

### தொழிற்பாட்டு இடர்நேர்வு

வெளிவாரிப் போட்டி ரீதியிலான சக்திகளுக்கு முகம்கொடுப்பதற்கு சிரமமாயுள்ள அல்லது செயற்பாடுகளுக்கு தடை ஏற்படுத்துகின்ற உள்ளகப் பலவீனங்களின் காரணமாக போதியதாயில்லாத அல்லது உள்ளக செயற்பாடுகளின் பெறுபேறாக இந்த இடர்நேர்வு உருவாகின்றது.

நிறுவனத்தினுள் சிறந்த முறையிலும் ஒழுங்காகவும் நிர்வகிக்கப்படுகின்ற செயலூக்கம்மிக்க சுற்றாடலொன்றைப் பெற்றுக்கொடுக்கும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ள கட்டமைப்புகள் மற்றும் விரிவான கொள்கைகளுடன் கூடிய முறைமையொன்று இடர்நேர்வுக் கட்டுப்பாட்டின் பொருட்டு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினுள் பேணிவரப்படுகின்றது.

பயனுறுதியான செயலூக்கம்மிக்க இடர்நேர்வு முகாமைத்துவத்தின் பொருட்டு ஒருசில விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- தகவல்களின் பாதுகாப்பைப் பேணிக்காத்து அனைத்து மாவட்ட அலுவலகங்களிலிருந்தும் பெறப்பட்ட காலக்கிரமமான தரவுகளின் திரட்டலை அறிக்கையிடல் மற்றும் தயாரித்தல்.
- தகவல்களைப் பாதுகாக்கின்ற கொள்கைகள் மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள்.
- வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களை தொடர்ச்சியாக மீளாய்வு செய்தல் மற்றும் மேம்படுத்தல்.
- கடனை மீள அறவிடுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களின் செயற்பாடுகள்.

தொழிற்பாட்டு இடர்நேர்வை கட்டுப்படுத்தல் மத்திய முகாமைத்துவத்தின் முதன்மையானதொரு பொறுப்பாகும். கட்டுப்படுத்தப்பட்ட சூழலின் தனித்துவத்தைப் பேணிவரும் பொருட்டு நிதி, கணக்காய்வு மற்றும் ஏனைய உதவிச் சேவைப் பிரிவுகளின் மூலம் பெரும் பணி ஆற்றப்படுகின்றது.

பெறுமதியான பல சொத்துக்கள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமாயுள்ளதால் தகுந்த உபாய வழிமுறைகளைப் பயன்படுத்துதல், தொடர்ச்சியான மீளாய்வுகள் மற்றும் பணியாட்டொகுதியினரின் அர்ப்பணிப்பு ஆகியவற்றின் ஊடாக போட்டி ரீதியிலான சுற்றாடலினுள் வெற்றியடையலாம் என்பதை எதிர்பார்க்கக்கூடியதாயுள்ளது.

### சுற்றாடல் பிரச்சினைகள்

கட்டடங்களை நிர்மாணித்தல் சுற்றாடல் முறைமையினுள் பல விதத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இத்தாக்கத்தை கூட்டாட்சிக் கட்டடங்கள் மற்றும் வீடமைப்புத் திட்டங்களில் மிகத் தெளிவாகக் காணக் கூடியதாயுள்ளது. சுற்றாடல் பாதுகாப்பானது அபிவிருத்திச் செயற்பாடுகளில் முக்கியமானதொரு அம்சமாகும் என்பதைக் குறிப்பிட்டுக் காட்டக்கூடியதாயுள்ளது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மக்களுக்கு பாதுகாப்பானதும் சிறந்ததுமான சுற்றாடலொன்றை பெற்றுக்கொடுக்கின்றது. அதேநேரம், குடிநீர், போதியளவு பிரவேசப் பாதைகள், தொடர்ச்சியான மின்சார வழங்கல், மழை நீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் முறைமைகள், திண்மக் கழிவுப் பொருட்களை அகற்றுதல் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகளும் வழங்கப்படுகின்றன.

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகார சபையின் சட்ட விதிகளின் மூலம் கூட்டாட்சி ஆதனங்களில் வசிப்பவர்களுக்கு மிகச் சிறந்ததொரு சுற்றாடல் உறுதிப்படுத்தப்படுகின்றது.

## வீடமைப்பு அபிவிருத்தி

"மஹிந்த சிந்தனை" எதிர்காலத்திற்கான தொலைநோக்கிற்கமைய "ஜனசெவன" பத்து இலட்சம் வீடுகள் மற்றும் குடியிருப்பு அபிவிருத்தித் தொழிற்பாட்டின் கீழ் இலங்கையின் பல்வேறான பிரதேசங்களிலும் வாழ்கின்ற வீடமைப்புப் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ள குடும்பங்களுக்கு வீடமைப்பு வசதிகளை வழங்கும் நோக்கத்துடன் 2012 ஆம் ஆண்டினுள் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

- வீரர்கள் கிராமம் நிகழ்ச்சித்திட்டம்
- "விசிறி" வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்
- ஜனசெவன உபஹார நிகழ்ச்சித்திட்டம்
- செவன சரண உதவி நிகழ்ச்சித்திட்டம்
- ஆதிவாசிகள் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்
- இந்திய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்
- வெலிஓயா வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

## வீரர்கள் கிராமம் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம்

பத்து இலட்சம் வீடுகளைக் கொண்ட 2012 ஜனசெவன வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்தித் தொழிற்பாட்டின் கீழ் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் வீடுகளை எதிர்பார்த்துள்ள பல்வேறு மக்கள் பிரிவினருக்கும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட வீடமைப்புக் கருத்திட்டங்களை இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மஹிந்த சிந்தனை எதிர்காலத்துக்கான தொலைநோக்குக்கு இணங்குகின்றவாறு நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் கௌரவ அமைச்சரின் வழிகாட்டலின் கீழ் மாவட்ட மட்டத்தில் பிரதேசத்தில் உயிர்த் தியாகம் செய்த படை வீரரொருவரை நினைவுகூர்வதை முன்னிட்டு அப்பெயரில் கருத்திட்டத்தைப் பெயரிட்டு இந்நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

இந்நிகழ்ச்சித் திட்டம் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்படுவதோடு, மிகவும் பொருத்தமான குடியிருப்புகளைத் தெரிவு செய்து அதனைத் திட்டவட்டமானதொரு கால கட்டத்தினுள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். கருத்திட்டங்கள் தெரிவு செய்யப்படுகின்றபோது வீதிகள், நீர் ஆகிய அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை உள்ளடக்கிய பிரதேசமொன்றைத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாண்டினுள் 19 மாவட்டங்களில் 56 கருத்திட்டங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, அதனூடாக 2111 நலன்பெறுனர் குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக்கொள்வதற்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் சார்பில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் ரூபா 428.24 மில்லியன் பணத்தொகை மதிப்பிடப்பட்டுள்ளதோடு இதில் 2012 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 180.047 மில்லியன் பணத் தொகை செலவிடப்பட்டுள்ளது. எஞ்சிய பணத் தொகை 2013 முதலாவது காலாண்டினுள் செலவிடப்பட்டு தொடரறாது பூர்த்தி செய்வதற்கு உத்தேசமாயுள்ளது.

## "விசிறி" வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

மஹிந்த சிந்தனை தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நாடு முழுவதிலும் பரவியுள்ள வீடற்ற ஒவ்வொரு குடும்பத்திற்கும் வீடொன்றைக் கட்டிக்கொள்வதற்கு வாய்ப்பளிக்கும் நோக்கத்துடன் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அளவீடுகளுக்கு இணங்குகின்றவாறு ஒட்டுமொத்தமான கிராம அலுவலர் பிரிவுகள் மட்டத்தில் சமுதாயப் பங்களிப்புடன் தேவையான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

வீடமைப்புத் தேவைகள் உள்ள வீடு பெறுனர்களுக்கு புதிய வீடுகளை நிர்மாணித்தலும், தற்போதுள்ள வீடுகளை மேம்படுத்துவதற்காக வீடமைப்புக் கடன்களை வழங்குதலும் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைபெறுகின்றது. தீவிர வீடமைப்புத் தேவையைக் கொண்ட வீடொன்றை நிர்மாணிப்பதற்கான பொருட்கள் அல்லது பணத்தைச் சேகரித்து வைத்துள்ள நபர்களுக்கு இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முன்னுரிமை வழங்கப்படும். இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2012 ஆம் ஆண்டின் இறுதியளவில் 16209 வீட்டுக் கூறுகளை நிர்மாணிப்பதற்கு பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளதோடு, இதற்கென ரூபா 1638.191 மில் செலவிடப்பட்டுள்ளது. 2011 தொடரறா நிகழ்ச்சித்திட்டத்திற்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 86.127 மில்லியனாகும்.

### ஜனசெவன உபஹார நிகழ்ச்சித் திட்டம்

அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளின் ஊழியர்கள் உள்ளிட்ட நடுத்தர வருமானம் பெறுகின்றவர்களின் வீடமைப்புத் தேவைகளை நிறைவு செய்கின்ற அணுகுமுறையொன்றாக வர்த்தக வங்கிகளின் உதவியுடன் வீடமைப்புக் கடன்களை வழங்குதல் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

இதில் அரச ஊழியர்களுக்கு குறைந்தபட்ச ஆவணங்களை சமர்ப்பிப்பதன் ஊடாக தனிநபர் பிணையின் கீழ் ரூபா 500,000/- வரையிலான கடன் தொகையொன்று வழங்கப்படும். இதன் கீழ் புதியதொரு வீட்டை நிர்மாணிப்பதற்கும் அப்போதைக்குள்ள வீட்டை திருத்துவதற்கும் வீடமைப்புக் கடன் வழங்கப்படும் என்பதோடு, தொடர் மாடி வீடுகளைத் திருத்துவதற்கும் கடன் வழங்கப்படும். ஜனசெவன உபஹார நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2012 ஆம் ஆண்டினுள் 9260 குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்காக கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு, இதற்கென ரூபா 2373.577 மில்லியன் தொகை செலவிடப்பட்டதோடு, 2011 தொடரறா நிகழ்ச்சித்திட்டத்திற்கு ரூபா 307.258 மில் செலவிடப்பட்டது.

### சசுனென் செவன நிகழ்ச்சித்திட்டம்

கிராமத்திலிருந்து பன்சாலைக்கும் பன்சாலையிலிருந்து கிராமத்திற்கும் என்ற தொனிப்பொருளை நிறைவேற்றிக்கொள்வதை நோக்கமாகக் கொண்டு 2600 ஆம் சம்புத்த ஜயந்தி ஆண்டு விழாவை முன்னிட்டும் அதனைக் கொண்டாடும் பொருட்டும் இலங்கையினுள் காணப்படுகின்ற அண்ணளவாக 10250 பன்சாலைகள் மற்றும் புண்ணிய தலங்களைச் சார்ந்து வாழ்கின்ற மிக வறிய குடும்பங்களை இலக்காகக் கொண்டு, ஒரு பன்சாலையின் சார்பில் ஒரு வறிய குடும்பத்திற்கு வீடொன்றைக் கட்டிக் கொடுத்தல் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும்.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நாடு முழுவதிலும் உள்ள 10210 பன்சாலைகளை உள்ளடக்கியதாக 10,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதோடு, முதலாவது கட்டமாக 2012 ஆம் ஆண்டினுள் 500 குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்காக உதவி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் ரூபா 27.165 மில்லியன் தொகை செலவிடப்பட்டது.

வீடமைப்புக் கடன் தொகையொன்றைப் பெற்று மீளச் செலுத்துவதற்கான ஆற்றல் இல்லாத ஆயினும் வீடொன்றைக் கட்டிக்கொள்வதற்கான தேவையுள்ளதும் அதேபோன்று வீடொன்றைக் கட்டிக் கொள்வதற்கான ஆர்வம் உள்ளதுமான மிக வறிய குடும்பங்கள் இதன் பொருட்டு தெரிவு செய்யப்படும். இது தர்மகர்த்தாக்கள் சபையின் முழுமையான மேற்பார்வையின் கீழ் உரிய கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலகங்களின் தலையீட்டின் கீழ் நடைபெறும். வீடொன்றைக் கட்டிக்கொள்வதற்கான தேவை உள்ளதும் காணியொன்றை சொந்தமாகக் கொண்டுள்ளதுமான குடும்பமாயிருத்தல் கட்டாயமாகும். குடும்பத்தைத் தெரிவு செய்கின்ற இறுதி விதப்புரையானது அக் குடும்பம் உரித்தாயுள்ள பன்சாலையின் தலைமைப் பிக்கு உள்ளிட்ட தர்மகர்த்தாக்கள் சபையினால் வழங்கப்படுதல் வேண்டும். இதில் வீடொன்றைக் கட்டிக்கொள்வதற்கான ஆரம்பத் தயார் நிலையைக் கொண்டுள்ள குடும்பங்கள் தொடர்பில் முன்னுரிமையளிக்கப்படும். 2012 ஆம் ஆண்டின் இறுதியில் உதவிபெறுனர்கள் 484 பேருக்கு பணத் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் ரூபா 100,000.:- உதவித் தொகையொன்று வழங்கப்படும். எஞ்சிய நிர்மாணிப்புச் செலவுகளை தர்மகர்த்தாக்கள் சபையின் தலையீட்டில், பிரதேசத்திலுள்ள கொடை வழங்குனர்கள் மற்றும் தொண்டர் அமைப்புகளிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வீடமைப்புத் திட்டவரைபடமொன்று வழங்கப்படும் என்பதோடு, நிர்மாணிப்புத் தொழில்நுட்ப உதவியும் வழங்கப்படும்.

- வீடு நிர்மாணிக்கப்படும் பிரதேசத்தைச் சார்ந்ததாக நிர்மாணிப்புக்குப் பொருத்தமான தொழில்நுட்ப முறையியல்கள் வீடமைப்பு அதிகார சபையினால் வழங்கப்படும் என்பதோடு, நிர்மாணிப்பு மேற்பார்வை நடவடிக்கைகள் ஒழுங்கான முறையில் மேற்கொள்ளப்படும்.
- தர்மகர்த்தாக்கள் குழு, கிராமவாசிகள் மற்றும் நலன்பெறுனர் குடும்பங்களால் பயிற்றப்பட்ட மற்றும் பயிற்றப்படாத தொழில்நுட்ப உதவி பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

### செவன சரண உதவி நிகழ்ச்சித் திட்டம்

வீடமைப்புக் கடன் தொகையொன்றைப் பெற்று மீளச் செலுத்துவதற்கான ஆற்றல் இல்லாத ஆயினும் வீடொன்றைக் கட்டிக்கொள்வதற்கான தேவையுள்ள வறிய குடும்பங்களுக்கு நிரந்தரமான வீடொன்றைக் கட்டிக் கொடுக்கும் நோக்கத்துடன் இந் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதன் கீழ் ஒரு குடும்பத்திற்கு உயர்ந்தபட்சம் ரூபா ஓரிலட்சம் உதவித் தொகை வழங்கப்படும். இந் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக 2012 ஆம் ஆண்டில் 06 குடும்பங்களுக்கு வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

### தயட்ட கிருள நிகழச்சித் திட்டம் - அம்பாறை/ திருகோணமலை/ மட்டக்களப்பு/ பொலனறுவை மாவட்டம்

தயட்ட கிருள 2012 கண்காட்சிக்கும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கும் சமாந்திரமாக அனுராதபுரம் மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமொன்றையும் வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்

திட்டமொன்றையும் நடைமுறைப்படுத்தல் இந் நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். இதன் கீழ் வீடுகளின் மேம்பாட்டுக்கான அல்லது புதிதாக வீடொன்றை நிர்மாணிக்கும் தேவையைக் கொண்ட குடும்பங்களுக்கு வீடமைப்புக் கடன்கள் மற்றும் உதவி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

### இந்திய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 6000 வீடுகளை வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் மாத்திரம் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 355 வீடுகளின் நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, இதற்கென 2012.12.31 ஆம் திகதியளவில் செலவிடப்பட்டுள்ள பணத் தொகை ரூபா 58.100 மில்லியானாகும்.

### வெலிஓயா வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 500 வீடுகளை முல்லைத்தீவு மாவட்டத்தில் மாத்திரம் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதோடு இந்த 500 வீடுகளினதும் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் இவ்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டன.

### உபஹார கடன் நிகழ்ச்சித்திட்டம்

“ஜனசெவன பத்து இலட்சம் வீடுகள் வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்தித் தொழிற்பாட்டின்” உப நிகழ்ச்சித்திட்டமொன்றாக “ஜனசெவன உபஹார கடன் நிகழ்ச்சித்திட்டம்” 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தில் எந்தவொரு வங்கியிலிருந்தும் கடன் தொகையொன்றைப் பெற்றுக்கொள்ள இயலாதுள்ள அரச மற்றும் தனியார் துறை தொழில்களில் ஈடுபடுகின்ற மக்கள் பிரிவினர் உள்ளடங்குகின்றனர்.

2012 ஆம் ஆண்டுக்காகவும் ஜனசெவன உபஹார நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்படுவதோடு இதன் பொருட்டு 04 அரச வங்கிகளின் மூலம் ரூபா 3250 மில்லியன் நிதி ஏற்பாடுகளை வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டு இது செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

| | |
|---|---|
| • மக்கள் வங்கி | ரூபா 1000 மில்லியன் |
| • இலங்கை வங்கி | ரூபா 1000 மில்லியன் |
| • தேசிய சேமிப்பு வங்கி | ரூபா 1000 மில்லியன் |
| • பிரதேச அபிவிருத்தி வங்கி | ரூபா 250 மில்லியன் |

மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக 8681 நலன்பெறுனர் குடும்பங்களுக்கு கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஜனசெவன உபஹார நிகழ்ச்சித்திட்டம் இரண்டு கட்டங்களை உள்ளடக்கியுள்ளது.

#### ஜனசெவன உபஹார கட்டம் 01

இந் நிகழ்ச்சித்திட்டத்திற்கு 03 அரச வங்கிகளால் ரூபா 710 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| • மக்கள் வங்கி | ரூபா 200 மில்லியன் |
| • இலங்கை வங்கி | ரூபா 250 மில்லியன் |
| • தேசிய சேமிப்பு வங்கி | ரூபா 260 மில்லியன் |

மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக 2389 நலன்பெறுனர் குடும்பங்களுக்கு கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

#### ஜனசெவன உபஹார கட்டம் 02

இந் நிகழ்ச்சித்திட்டத்திற்கு 06 அரச வங்கிகளால் ரூபா 1470 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| • மக்கள் வங்கி | ரூபா 300 மில்லியன் |
| • இலங்கை வங்கி | ரூபா 300 மில்லியன் |
| • தேசிய சேமிப்பு வங்கி | ரூபா 300 மில்லியன் |
| • அரச ஈட்டு, முதலீட்டு வங்கி | ரூபா 220 மில்லியன் |
| • பிரதேச அபிவிருத்தி வங்கி | ரூபா 100 மில்லியன் |
| • வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி | ரூபா 250 மில்லியன் |

மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக 4736 நலன்பெறுனர் குடும்பங்களுக்கு கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக 2012 ஆம் ஆண்டில் அனுராதபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற தயட்ட கிருள நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்திரமாக மக்கள் வங்கியுடன் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஒன்றிணைந்து ரூபா 120.0 மில்லியன் கடன் நிகழ்ச்சித்திட்டமொன்றையும் நடைமுறைப்படுத்தியது.

அதேபோன்று, வட மாகாணத்தில் மீள் குடியமர்த்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் பொருட்டு தேசிய சேமிப்பு வங்கியின் நிதி ஏற்பாட்டின் மூலம் 851 வீடமைப்புக் கூறுகளுக்காக ரூபா 345.0 மில்லியன் நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை

ஜனசெவன வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

**2012.12.31 இல் உள்ளவாறு முன்னேற்றம்**

| | "ஜன செவன" வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் | ஆண்டு இலக்கு (திருத்தப்பட்ட) பௌதீக அலகு எண்ணிக்கை | நிதியியல் (ரூபா மில்.) மொத்தம் | திரண்ட நிதியம் | நிறுவன சேர்க்கைகள் | ஏனையவை | செவன | அடைவு பௌதீக (அலகு எண்ணிக்கை) ஆரம்பிக்கப்பட்ட வேலைகள் | பூர்த்தி செய்யப்பட்ட அலகுகள் | செலவு மொத்தம் | திரண்ட நிதியம் | நிறுவன சேர்க்கைகள் | ஏனையவை | செவன | பொதுத் திறைசேரியிலிருந்து கிடைத்த நிதியம (ரூ. மில்.) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **கிராமிய மற்றும் பகுதியளவு நகர நிகழ்ச்சித் திட்டம்** | | | | | | | | | | | | | | 600.00 |
| 1 | ஜன செவன "விரு உபஹார" கருத்திட்டம் | 5,000 | 1000.00 | 600.00 | 78.00 | 322.00 | | 1993 | 321 | 205.60 | 152.63 | 13.99 | 38.98 | | |
| 2 | ஜனசெவன விசிறி வீடமைப்பு | 16,730 | 2509.50 | 400.00 | 609.50 | 1500.00 | | 16205 | 5794 | 1638.19 | 506.96 | 619.54 | 511.69 | | 60.00 |
| 3 | ஜன செவன உபஹார | 12,666 | 3800.00 | | | 3800.00 | | 9198 | 3326 | 2373.58 | | | 2373.58 | | |
| | தொழிற்பாட்டுச் செலவினம் | | 25.00 | 25.00 | | | | | | 10.00 | 10.00 | | | | 10.00 |
| 4 | தயட்ட கிருள வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் - அனுராதபுரம் | 1,138 | 200.00 | 100.00 | | 100.00 | | 520 | 736 | 181.69 | 80.00 | | 82.02 | 19.67 | 80.00 |
| 5 | ஜனசெவன உதவி நிகழ்ச்சித்திட்டம் | | | | | | | | | | | | | | |
| | சசுனென் செவன | 1,000 | 100.00 | | | | 100.00 | 484 | 56 | 27.17 | | | | 27.17 | 44.34 |
| 6 | **சஹஸ்ர லங்கா வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்** | | | | | | | | | | | | | | |
| | 1. நேரடி நிர்மாணிப்புகள் (கேள்விப்பத்திர மதிப்பீடு ரூ. 2530 மில்.) | 593 | 1701.70 | | | 1701.70 | | 94 | 5 | 113.01 | | | 113.01 | | |
| | 2. மீள்தாபிப்பு வீடமைப்பு | | 119.00 | | | 119.00 | | 36 | | 21.74 | | | 21.74 | | |
| 7 | **சஹசவிய நிகழ்ச்சித்திட்டம்** | 1,000 | 100.00 | | | 100.00 | | 437 | 306 | #VALUE! | | | #VALUE! | | |
| | **7.1 வெலிஓயா விசேட நிகழ்ச்சித்திட்டம்** | | | | | | | 500 | 6 | 93.92 | | | 93.92 | | |
| | **7.2 இந்திய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்** | | | | | | | 355 | | 58.10 | | | 58.10 | | |
| 8 | **மீள் குடியமர்த்துகை - 1. விசிறி மற்றும் கருத்திட்டம்** | 1,000 | 200.00 | | | 200.00 | | 550 | 275 | 74.32 | | | 74.32 | | |
| | **11. அரச ஊழியர்களுக்கான வீடமைப்பு** | 290 | 145.00 | | | 145.00 | | 258 | 26 | 80.76 | | | 80.76 | | |
| | **உப மொத்தம்** | **39,417** | **9900.20** | **1125.00** | **687.50** | **7987.70** | **100.00** | **30,630** | **10,851** | **4,904.15** | **749.59** | **633.53** | **3474.20** | **46.83** | **794.34** |
| 9 | **வீடமைப்பு தொடர்பான செயற்பாடுகள்** | | | | | | | | | | | | | | |
| | **9.1 செவன பிம்சவிய நிகழ்ச்சித்திட்டம்** | | | | | | | | | | | | | | |
| | - காணித் துண்டுகளை பகிர்ந்தளித்தல் | 1,000 | | | | | | | 152 | | | | | | |
| | - ஆதன உரிமைகளை உறுதிப்படுத்தல் (உறுதி வழங்கல்) | 3,000 | | | | | | | 3119 | | | | | | |
| | **9.2 நகமு புரவர நிகழ்ச்சித்திட்டம்** | | 161.57 | 161.57 | | | | | 1995 | 175.48 | 157.40 | | 18.08 | | 157.40 |
| 10 | **காணி நட்டஈடு வழங்கல்** | | 50.00 | 50.00 | | | | | | 50.89 | 50.00 | | 0.89 | | 50.00 |
| | **உப மொத்தம்** | **4,000** | **211.57** | **211.57** | | | | | **5,266** | **226.38** | **207.40** | | **18.98** | | **207.40** |
| 11 | **தொடர்ந்துவரும் நிகழ்ச்சித்திட்டங்கள்** | | | | | | | | | | | | | | |
| | 11.1 ஜனசெவன வீரர் கிராமம் | 1,206 | 58.30 | | 58.30 | | | | 1084 | 85.30 | | 85.30 | | | |
| | 11.2 ஜனசெவன சிரமசக்தி | 393 | 16.40 | | 16.40 | | | | 372 | 12.05 | | 12.05 | | | |
| | 11.3 ஜனசெவன விசிறி | 2,581 | 126.80 | | 126.80 | | | | 2450 | 86.13 | | 86.13 | | | |
| | 11.4 ஜனசெவன உபஹார | 3,095 | 391.50 | | | 391.50 | | | 2968 | 307.26 | | | 307.26 | | |
| | 11.5 ஜனசெவன சசுனென் செவன (உதவி) | 391 | 17.50 | | | | 17.50 | | 359 | 15.29 | | | | 15.29 | |
| | 11.6 செவன விசிறி (உதவி) | 32 | 1.50 | | | | 1.50 | | 35 | 0.87 | | | | 0.87 | |
| | 11.7 தோட்ட வீடமைப்பு | 833 | 118.60 | | | 118.60 | | | 329 | 16.51 | | | 16.51 | | |
| | 11.8 தயட்ட கிருள வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் மொனறாகலை | 306 | 6.50 | | | 6.50 | | | 295 | 5.16 | | | 5.16 | | |
| | 11.9 வெள்ளப்பெருக்கு உதவி வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் | 6,353 | 449.40 | | | 449.40 | | | 6007 | 387.41 | | | 387.41 | | |
| | 11.10 வெளிவாரி நிதியம் | 200 | 21.50 | | | 21.50 | | | 184 | 19.02 | | | 19.02 | | |
| | **உப மொத்தம்** | **15,390** | **1208.00** | | **201.50** | **987.50** | **19.00** | | **14,083** | **934.99** | | **183.47** | **735.36** | **16.15** | |
| | நகமு புரவர நிகழ்ச்சித்திட்டம் - தொடர்ச்சி | | **170.00** | | | 170.00 | | | | 143.36 | | | 143.36 | | |
| | **முழு மொத்தம்** | **58,807** | **11489.77** | **1336.57** | **889.00** | **9145.20** | **119.00** | **30,630** | **30,200** | **6208.87** | **956.99** | **817.01** | **4371.89** | **62.98** | **1001.74** |

* **மூ உபஹார 94 குடும்பங்களுக்காக செலவாகிய ரூபா 23.363 மில்லியன் மற்றும் மன்னார், வங்களாய் வீடமைப்பு கருத்திட்டத்தின் 49 வீட்டு அலகுகளுக்காக செலவாகிய ரூபா 4.820 மில்லியன் உள்ளடங்கியது.**

## ஆதன முகாமைத்துவம்

ஆதன முகாமைத்துவம்

2012 ஆம் ஆண்டில் ஆதன முகாமைத்துவப் பிரிவு பின்வரும் துறைகளை உள்ளடக்கியதாக இயங்கியதோடு, எமது கடமை வகைகளின்படி குறித்த ஆண்டினுள் உரிய இலக்குகளை நிறைவேற்றிக்கொள்ள இயலுமாயிருந்தது.

1. ஆதன முகாமைத்துவப் பிரிவு
2. வீடு விற்பனைப் பிரிவு
3. விலை மதிப்பீட்டுப் பிரிவு
4. உறுதிகளைத் தயாரிப்பதற்கான உரிய ஆவணங்களைத் தயாரிக்கின்ற பிரிவு (8/1 வாசகத்திலுள்ள கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெறுதல்)

### ஆதன முகாமைத்துவப் பிரிவு

இதுவரை நிர்மாணிக்கப்பட்டுள்ள அனைத்து வீடமைப்புத் திட்டங்களினதும் ஆதன முகாமைத்துவ நடவடிக்கைகள் 25 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 03 நகர அலுவலகங்களின் இணைப்பாக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, அவை மாவட்ட மட்டத்தில் பிரிவுக்குரிய சிரேஷ்ட முகாமையாளர்களின் மேற்பார்வையின் கீழ் ஏற்புடைய பின்வரும் கடமைகளை நிறைவேற்றியுள்ளன.

01. நாட்டின் அனைத்து மாவட்ட அலுவலகங்ளிலுமுள்ள (28 மாவட்டங்கள்) வீடமைப்புத் திட்டங்களின் காணிப் பிரச்சினைகள், வீதிப் பிரச்சினைகள், பொதுச் சொத்துக்களின் பிரச்சினைகள், உட்கட்டமைப்பு வசதிகளுடன் தொடர்புடைய அலுவல்கள், அத்துமீறிய கைப்பற்றல்கள், அத்துமீறிய குடியமர்தல்கள் தொடர்பில் ஏற்புடைய ஆதனச் சுற்றறிக்கைகளின்படி தீர்வுகளை வழங்குதல்.

02. குறிப்பிட்ட வீடமைப்புத் திட்டங்களின் பொதுச் சொத்துக்களின் பொருட்டு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ஆதனங்களை கையளித்தல், அதற்கான தீர்வுகளை வழங்கல். (ஆதனச் சுற்றறிக்கையின் பிரகாரம்)

03. அதிகாரசபைக்குச் சொந்தமான ஆதனங்கள் (காணிகள், வீடுகள், பொதுச் சொத்துகள்) கையுதிர்க்கப்படுகின்றபோது, சட்டத்தின் 8.‧.1 ஆம் பிரிவின் பிரகாரம் கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெறுகின்ற நடவடிக்கைகள் (ஜனசெவன உறுதிகளை வழங்குகின்ற நிகழ்ச்சித்திட்டம் - 2012) இணைப்பு (1) ஆக இணைக்கப்பட்டுள்ளது.

04. குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த அதிகாரசபையின் ஆதனங்களை (வீடுகள், கடைகள்) அறுதிஉரிமை அடிப்படையில் வழங்குவதற்காக சுற்றறிக்கை அறிவுரைகளை நடைமுறைப்படுத்தல்.

05. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான கொழும்பு நகர வடக்கு மற்றும் தெற்கு அலுவலக ஆளுகைப் பிரதேசங்களில் குறைந்த வருமானக் கருத்திட்டங்களின் வீடுகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு ஏற்புடைய சுற்றறிக்கைகளுக்கு இணங்க தீர்வுகளை வழங்கல்.

06. மேம்படுத்தப்பட்ட நகர வீடமைப்புத் திட்டங்களில் 06 பர்சஸுக்கு குறைவான காணி பெறுனர்களுக்கு அறுதிஉறுதிகளை வழங்குதல்.

07. வீடமைப்புச் செயலகக் கட்டடத்தில் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள வளாகங்களுக்குரிய குத்தகைப் பணத்தை அறவிடுதல்.

### 02. நில அளவைப் பிரிவு

I. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் அனைத்து மாவட்ட அலுவலகங்களிலும் மாவட்ட முகாமையாளர்களின் வேண்டுகோளின் அடிப்படையில் வேண்டப்படுகின்ற வரைபடங்களை வழங்குதல் மற்றும் அவர்கள் நில அளவை நடவடிக்கைகள் தொடர்பாக விசாரிக்கின்றபோது அதற்கு சுற்றறிக்கையின் பிரகாரம் பதிலளித்தல்.

II. இதற்கமைய 2012 ஆம் ஆண்டில், கூட்டாட்சி வரைபடங்களை வழங்கும் பொருட்டு ரூபா 575.00 வீதம் மற்றும் ரூபா 2,856.00 வீதம் 171 பிரதிகளுக்கு ரூபா 139,283.00, சாதாரண வரைபடப் பிரதிகளுக்கு ரூபா 460.00 வீதம் மற்றும் ரூபா 2284.80 வீதம் 203 பிரதிகளுக்கு ரூபா 149,788.80, வரைபடங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிழற் பிரதிகளுக்கு ரூபா 250.00 மற்றும் ரூபா 1142.40 மற்றும் ரூபா 1428.00 வீதம் 46 நிழற் பிரதிகளுக்கு ரூபா 15,198.40 என்றவாறு ரூபா 304,270.20 பணத் தொகை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு வருமானமாக ஈட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது.

### 03 விலை மதிப்பீட்டுப் பிரிவு

3.1 விலை மதிப்பீட்டுப் பிரிவின் கடமைகளுக்கென 02 சிரேஷ்ட முகாமையாளர்கள் உள்ளனர் என்பதோடு, இவர்கள் நாட்டின் 28 மாவட்டங்கள் உள்ளிட்ட வீடமைப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான ஆதனங்களின் விலை மதிப்பீடுகளை மேற்கொள்கின்றனர்.

3.2 இதற்கமைய 2012 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டுள்ள இலக்குகள்.

**I. தற்போதைய விலை மதிப்பீட்டைப் பெறுதல்**

| | |
|---|---|
| வீட்டு ஆதனங்கள் | - 83 |
| அரச நிறுவனங்கள் மற்றும் சாப்புகள் | - 31 |
| காணித் துண்டுகள் | - 530 |
| கூட்டாட்சி ஆதனங்கள் | - 15 |

**II. பெயரளவு பெறுமதிகளை விலை மதிப்பீடு செய்தல்**

| | |
|---|---|
| காணித் துண்டுகள் | - 57 |
| வீடுகள் | - 01 |

**III. வீடுகள் மற்றும் கடைகளுக்கான விலை மதிப்பீட்டைப் பெறுதல்**

| | |
|---|---|
| வீடுகள் மற்றும் கடைகள் | - 89 |

**IV. குத்தகைக் கூலி விலை மதிப்பீட்டைப் பெறுதல்**

| | |
|---|---|
| காணிகள் | - 15 |
| அலுவலகங்கள் | - 02 |
| கடைகள் | - 01 |
| வர்த்தகப் பெயர்ப் பலகைகள் | - 10 |
| வாகன தரிப்பிடங்கள் | - 04 |
| கராஜுகள் | - 02 |
| பொதுச் சொத்துக்கள் | - 01 |

**V. அன்டர்சன் மாடி வீட்டுத் தொகுதி, கூட்டாட்சி ஆவண அதிகாரசபை அலுவலகம் அமைந்திருந்த வளவினுள் காணப்பட்ட**

| | |
|---|---|
| பலா மரங்கள் | - 04 |
| மஹோகனீ மரங்கள் | - 08 |
| ஏனைய மரங்கள் | - 03 |
| விலோ | - 02 |
| | 17 |

**VI. வீடமைப்பு ஆணையாளரால் ஆற்றுப்படுத்தப்பட்ட கடமைகள் வீடமைப்புத் திணைக்களத்தின் உச்சவரம்புச்**

| | |
|---|---|
| சட்டத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்ட ஆதனங்கள் | - 22 |
| விலை மதிப்பிடப்பட்ட மொத்த ஆதனங்கள் | - 880 |

### காணி கொள்ளல் மற்றும் விற்பனைப் பிரிவு

01. காணி கொள்ளல் மற்றும் விற்பனைப் பிரிவின் கடமைப் பொறுப்புகள்:

I. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வீடமைப்பு நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான காணி கொள்ளல் நடவடிக்கைகள்

II. வீடமைப்பு நோக்கங்களுக்காக காணிகளை விற்பனை செய்தல் மற்றும் ஏனைய தேவைகளுக்காக காணிகளைக் குத்தகை அடிப்படையில் கையுதிர்த்தல் மற்றும் பக்கத்திலுள்ள காணிகளை விற்பனை செய்தல் மற்றும் அத்துமீறியவர்களை ஒழுங்குமுறையாக்கல்.

2. கொள்கை ரீதியிலான விடயங்கள்

3. 2012 இலக்குகளும் நிகழ்ச்சித் திட்டங்களும்

I. கொள்ளல் நடவடிக்கைகள் பூர்த்தியடையாதுள்ள காணிகளின் சுவீகரிப்பு நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்தல்.

II. காணி மதிப்பாய்வின் மூலம் இனங்காணப்பட்ட வெற்றுக் காணித்துண்டுகளை விண்ணப்பதாரர்களுக்கு விற்பனை செய்தல்.

III. இனங்காணப்பட்ட பக்கத்திலுள்ள காணிகளை விற்பனை செய்தல்.

IV. இனங்காணப்பட்ட அத்துமீறியவர்களை தற்போதுள்ள சுற்றறிக்கைகளின்படி ஒழுங்குமுறையாக்கல்.

4. இலக்குகளை நிறைவேற்றிக்கொள்ளல்

மூன்று காணிகளின் கொள்ளல் நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய இயலுமாயிருந்தது. திறைசேரியின் நிதி ஏற்பாடுகளாக ரூபா 50 மில்லியன் கிடைத்ததோடு, கீழே குறிப்பிடப்பட்டுள்ள தனியார் காணிகளுக்கு நட்டஈடும் வட்டியும் தவணை அடிப்படையில் செலுத்தப்பட்டதோடு, காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான 02 காணிகளுக்கான முழுத் தொகையையும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. காணி மதிப்பாய்வின் மூலம் இனங்காணப்பட்ட 541 வெற்றுக் காணித் துண்டுகளை விண்ணப்பதாரர்களுக்கு விற்பனை செய்வதற்காக பத்திரிகை அறிவித்தல்களை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு, அதில் 350 காணித் துண்டுகளை அவ்வாண்டினுள் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இனங்காணப்பட்ட 285 அத்துமீறியவர்களில் 105 பேரை ஒழுங்குமுறையாக்குவதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் இவ்வாண்டினுள் பூர்த்தி செய்யப்பட்டன.

5. இலக்குகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாதிருந்தமைக்கான தடைகள்

45 தனியார் காணிகளுக்கான நட்டஈடு மற்றும் வட்டி என்ற வகையில் ரூபா 158,127,473.23 பணத் தொகை 2012.01.01 ஆம் திகதியில் செலுத்த வேண்டியிருந்ததோடு, மேலும் ரூபா 12,52,527.86 பணத் தொகையை நட்டஈடாகவும் வட்டியாகவும் ஆண்டினுள் செலுத்தும்படி பிரதேச செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆண்டினுள் ரூபா 47,912,714.48 நட்டஈடாகவும் வட்டியாகவும் செலுத்தப்பட்டுள்ளது. இதுவரை நட்டஈடு மற்றும் வட்டி அறிவிக்கப்பட்டுள்ள காணிகளுக்கு செலுத்தப்பட வேண்டிய பணத் தொகையில் ஒரு பகுதியைச் செலுத்துவதற்காகவே இப்பணத் தொகை செலுத்தப்பட்டுள்ளதோடு, முழுமையான நட்டஈடு அல்லது வட்டித் தொகையை ஒரே தடவையில் செலுத்துவதற்கு வருடாந்த நிதி ஏற்பாடு போதியதாக இருக்கவில்லை.

காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான 23 காணிகளின் பொருட்டு ரூபா 33,601,067.21 பணத் தொகை செலுத்த வேண்டியிருந்ததோடு, அதில் 02 காணிகளுக்காக அறிவிக்கப்பட்டிருந்த முழுப் பெறுமதியையும் ஆண்டினுள் செலுத்துவதற்கு ரூபா 2,981,911.00 பணத் தொகை செலவிடப்பட்டதோடு, காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டு மேற்படி காணிகளின் ஒப்படைப்பு தொடர்பான எதிர்வரும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளன.

6. ஆண்டினுள் பெறப்பட்ட வெற்றிகள் :

கொள்ளப்பட்ட காணிகளின் எண்ணிக்கை

| நேரடி | தனியார் | காணி சீர்திருத்த ஆணைக்குழு | ஏனைய நிறுவனங்கள் |
|---|---|---|---|
| 01 | - | - | 02 |

பொறியியல் சேவைகள் மற்றும் நிர்மாணிப்புகள்

## பொறியியல் சேவைகள் மற்றும் நிர்மாணிப்புகள்

பொறியியல் சேவைகள் மற்றும் நிர்மாணிப்புப் பிரிவு பின்வரும் பிரிவுகளை உள்ளடக்கியதாக 2012 ஆம் ஆண்டில் குடியிருப்பு அபிவிருத்தியின் பொருட்டு பங்களிப்புச் செய்தது.

1. பொறியியல் பிரிவு
2. கட்டடக் கலைப் பிரிவு
3. தொகை மதிப்புப் பிரிவு
4. திட்டமிடல் பிரிவு
5. மின்சாரப் பிரிவு
6. பராமரிப்புப் பிரிவு

பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் அனைத்து மக்கள் பிரிவினரினதும் வீடமைப்பு நோக்கங்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இயலுமாயிருந்தது.

## மாடி வீடுகளின் மறுசீரமைப்பு (நகமு புரவர)

முப்பது நாற்பது ஆண்டுகள் பழைமைவாய்ந்த மாடி வீடமைப்புத் திட்டமான மாளிகாவத்தை மற்றும் சொய்சாபுர வீடமைப்புத் திட்டங்களின் புனரமைப்பானது அவற்றில் உள்ள சிக்கலான தன்மை மற்றும் அனுமதியற்ற நிர்மாணிப்புகளை அகற்றுகின்ற பிரச்சினைக்குரிய நிலைமையின் காரணமாக 2011 ஆம் ஆண்டில் முடிவுறுத்துவதற்கு இயலாதிருந்ததோடு, 2012 இல் முதலாவது கட்டத்தை மாத்திரம் முடிவுறுத்துவதற்கு இயலுமாயிருந்தது.

- இதற்கமைய, ரூபா 200 மில்லியனுக்கு அண்மித்ததொரு தொகை செலவிடப்பட்டு மாளிகாவத்தை முதலாவது கட்டம் 2012 ஜூலை மாதம் 25 ஆம் திகதி முடிவுறுத்தப்பட்டதோடு, அதிமேதகு சனாதிபதி அவர்களின் அவதானிப்புக்கும் உள்ளாகியது.

  1520 வீடுகளைக் கொண்ட மாளிகாவத்தை வீடமைப்புத் திட்டத்தின் கட்டம் 1 848 வீடுகள்/39 கட்டடங்களை உள்ளடக்கியதாகும். மேலும், 3.0 கிலோ மீற்றர் வீதியை காபட் இட்டு, காண்கள் முறைமையும், சாக்கடைக் குழாய்கள், புதைசாக்கடைகள் மற்றும் நீர் தாங்கியும் மறுசீரமைக்கப்பட்டது. பாரிய வீடமைப்புத் திட்டங்களில் உள்ள மக்களது ஆன்மீக குணநலன்களை மேம்படுத்தி அழகானதொரு குடியேற்றமாக மாற்றுகின்ற நோக்கத்துடன் சிறுவர் விளையாட்டு மைதானங்கள், பூங்கா அலங்கரிப்பு மற்றும் புத்தர் கூடமொன்றை நிர்மாணித்தலும் இந் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு அம்சமாகும். மேலும், பொது வசதிகளுக்கு தடையேற்படுத்துகின்ற குறிப்பாக பொதுப் பராமரிப்பு அலுவல்களுக்கு இடையூறாக காணப்பட்ட அனுமதியற்ற நிர்மாணிப்புகளை உபாய ரீதியில் அகற்றுவதற்கு இயலுமாயிருந்தது.

  2012 இல் மாளிகாவத்தை கட்டம் 11 இன் 692 வீடுகளைக் கொண்ட அனைத்து மாடி வீடுகளும் திருத்தப்பட்டுள்ளதோடு, காண் முறைமை நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. கட்டம் 11 பகுதியின் புதைசாக்கடைகளைத் திருத்துதலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- சொய்சாபுர வீடமைப்புத் திட்டத்தில் ரூபா 70 மில்லியன் செலவிடப்பட்டு மிகப் பழைமையான மாடி வீடமைப்பு அலகுகளான (64 வீடுகளுடன் கூடிய) A,B,C,R,S,M மற்றும் N கட்டடங்கள் திருத்தப்பட்டன. பாரிய செலவு செய்யப்பட்டு அனுமதியற்ற நிர்மாணிப்புகளை அகற்ற நேரிட்டது. வீட்டு உரிமையாளர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப C3, B34 முறையே 8 வீடுகள் மற்றும் 16 வீடுகளைக் கொண்ட 02 மாடி வீடுகளும் திருத்தப்பட்டன. பொது இடங்களான சனசமூக நிலையம், விளையாட்டு அரங்கம், சிறுவர் பூங்கா மற்றும் M,N,A,B மற்றும் C கட்டடங்களுக்கு பக்கத்தில் காண் முறைமைகளும் முழுமையாக அமைக்கப்பட்டன. நீண்ட காலம் இயங்காதிருந்த சாக்கடை குழாய் முறைமையை ரூபா 23 மில்லியன் செலவில் நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், D,E,F,J,K,L மாடி வீடுகளுக்கு பக்கத்தில் அனுமதியற்ற நிர்மாணிப்புகளை அகற்றுகின்ற பிரச்சினையின் மீது இடையில் நிறுத்த வேண்டி நேரிட்டது. எவ்வாறாயினும், 2012 ஆம் ஆண்டினுள் 60% வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதோடு 2013 ஆம் ஆண்டில் அனுமதியற்ற நிர்மாணிப்புகள் அகற்றப்பட்டதன் பின்னர் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு உத்தேசமாயுள்ளது.

## வீடமைப்புத் திட்டங்களின் அடிப்படை அடித்தள வசதிகளை மேம்படுத்தல்

- ரூபா 6 மில்லியன் செலவில் மறுசீரமைக்கப்பட்ட ஜயவடனகம வாவி 2012 மார்ச் மாதம் 19 ஆம் திகதி மக்களுக்கு உரிமை கையளிக்கப்பட்டது.

  ஜயவடனகம வீடமைப்புத் திட்டத்தில் மக்களுக்கு சுகாதார அச்சுறுத்தலாகக் காணப்பட்ட இந்த வாவியை முழுமையாகத் துப்புரவு செய்து, அதனைச் சுற்றிலும் பூங்காவையும் அலங்கரித்து (walk way) நடை பாதையும் உருவாக்கப்பட்டது.

இந்த வாவி வீடமைப்புத் திட்டத்தின் சனசமூக சங்கத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு அழகாகப் பேணிவரப்படுவதோடு பெருமளவு மக்கள் காலை மாலையில் வாவிக்குப் பக்கத்தில் வந்து பொழுதுபோக்கை பெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஜயவடனகம வீடமைப்புத் திட்டத்தின் பிரதானமான சாக்கடை குழாய் முறைமைக்கு உரிய பெருமளவு சிதைவடைந்திருந்த பிரதானமான 03 புதை சாக்கடைகளைத் திருத்துவதற்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு ரூபா 2.2 மில்லியன் 2012.05.01 ஆம் திகதி வழங்கப்பட்டதோடு அது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

பிரதானமான சாக்கடை குழாய்களுக்கு இணைக்கப்படாதிருந்த வீடுகளுக்குரிய சாக்கடைக் குழாய் முறைமை ரூபா 8.0 மில்லியன் செலவில் நவீனமயமாக்கப்பட்டது.

- சிறிமாபுர சன சமூக நிலையம் ரூபா 1.3 மில்லியன் செலவில் அமைக்கப்பட்டு 2012.07.09 ஆம் திகதி மக்களுக்கு உரிமை கையளிக்கப்பட்டது. அதில் நலன்பெறுனர் குடும்பங்களின் எண்ணிக்கை 450 ஆகும்.

### மாவட்ட அலுவலகங்களுடன் தொடர்புடைய நிர்மாணிப்புகள்

- மாத்தறை மாவட்ட அலுவலகததின் முதலாவது மாடியின் நிர்மாணிப்புப் பணிகள் 2012.07.22 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதோடு இதற்கு ரூபா 16.5 மில்லியன் செலவாகின்றது. 2012 திசெம்பர் மாதமளவில் 46% நிர்மாணிப்பு முன்னேற்றத்தைப் பெற்றிருந்தது.
- **கண்டி செயலகம்**

  ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு வேலைத்தலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

  கருத்திட்ட செலவினம் - ரூபா 16.08 மில்லியன்
- அனுராதபுரம் சுற்றுலா விடுதி மறுசீரமைப்பு 2012 மார்ச் மாதம் 24 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. ரூபா 6 மில்லியன் செலவிடப்பட்டு நவீனமயப்படுத்தப்பட்டதோடு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
- மேலும், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைமை அலுவலகத்தின் முதலாவது மாடி, 6,7,8 மற்றும் 9 ஆம் மாடிகள் ரூபா 23 மில்லியன் செலவில் நவீனமயப்படுத்தப்பட்டது.

### கொழும்பைச் சுற்றிலுமுள்ள வீடமைப்புத் திட்டங்களின் அவசர திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள்

கொழும்பு நகர்சார்ந்த பிரதேசங்களில் 10 ஆண்டுகளுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட அநேகமான வீடமைப்புத் திட்டங்களுக்கு சேவை வழங்குதல் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினாலும் கொழும்பு மாநகர சபையினாலும் மேற்கொள்ளப்படுகின்றன. வீடுகள் விற்பனை செய்யப்பட்டு அல்லது வாடகை அடிப்படையில் உள்ள போதிலும் அவ்வீடமைப்பு முறைமையினுள் நீர்க் குழாய் முறைமைகள், சாக்கடை முறைமைகள் மற்றும் புதைசாக்கடைகள், பம்பி நிலையங்களின் பராமரிப்புப் பணிகளும் இன்று வரை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மூலமே மேற்கொள்ளப்படுகின்றன. நீர் வழங்கல் முறைமை தொடர்பில் அடிக்கடி

முறைப்பாடுகள் கிடைப்பதன் காரணமாக, அவசர திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளில் நேரடியாகத் தொடர்புகொள்ளக் கூடியவாறு திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு அலகொன்று தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினுள் தாபிக்கப்பட்டு நாளின் 24 மணித்தியாலமும் இயங்கி வருகின்றது. மேற்படி அலகின் மூலம் மாதத்திற்கு சராசரியாக 100க்கு மேற்பட்ட திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுவதோடு, அதற்கென ரூபா 1.30 மில்லியன் தொகை (அண்ணளவாக) செலவிடப்படுகின்றது. மேலும், சாக்கடை முறைமை மற்றும் சாக்கடைப் பம்பி நிலையம் மற்றும் கழிவகற்றல் ஒப்பந்தகாரர்களைக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. இதன் பொருட்டு 2011 ஆம் ஆண்டினுள் ரூபா 4.2 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளது.

### "சஹஸ்ர லங்கா" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான வீடமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்கள்

சஹஸ்ர லங்கா வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டமானது நடுத்தர வகுப்பு வீடுபெறுனர்களின் வீடமைப்புத் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு தாபிக்கப்பட்ட முறையியல் ரீதியிலானதொரு நிகழ்ச்சித்திட்டமாகும். உள்நாட்டு/வெளிநாட்டு தனியார் முதலீடுகள் மற்றும் முன்கூட்டி விற்பனை செய்யும் அடிப்படையில் இக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

முன்கூட்டி விற்பனை செய்யும் அடிப்படையில் நாராஹேன்பிட்டியில் அமைந்துள்ள எல்விட்டிகல வீடமைப்புத் திட்டத்தின் இறுதி ஐந்து மாடிக் கட்டடம் ரூபா 32 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இது 1300 சதுர அடிகளான 04 வீட்டுக் கூறுகளைக் கொண்டுள்ளது.

லுவிசாவத்தை வீடமைப்புத் திட்டத்தின் கட்டம் 111 இல் பகுதியளவு பூர்த்தி செய்யப்பட்ட 05 வீடுகளின் நிர்மாணிப்பு ரூபா 4 மில்லியன் செலவில் பூர்த்தி செய்யப்பட்டது.

மேற்படி 3 கட்டங்களுக்கும் உரிய புதிய வீடுகளின் எண்ணிக்கை 30 ஆகும். நிர்மாணிப்புகள் 2012 ஜூலை 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இதன் நிர்மாணிப்புச் செலவு ரூபா 76 மில்லியனாகும். பகுதியளவு பூர்த்தி செய்யப்பட்ட 36 வீடுகளை நிர்மாணித்தலும் ரூபா 72 மில்லியன் செலவில் 2012 ஜூலை 11 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

குருணாகல் மாவட்டத்தில் வெலன்கொல்ல வீடமைப்புத் திட்டத்தின் நிர்மாணிப்பு 2012 சனவாரி மாதம் 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. 1900 சதுர அடி மற்றும் 2200 சதுர அடி அளவிலான மாடி வீட்டு வகைகள் இரண்டைக் கொண்டதான இந்த வீடமைப்புத் திட்டத்தின் மொத்த வீடுகளின் எண்ணிக்கை 23 ஆகும். நிர்மாணிப்புச் செலவு ரூபா 180 மில்லியனாகும் என்பதோடு இரண்டு ஒப்பந்தகாரர்கள் நிர்மாணிப்புகளை மேற்கொள்கின்றனர். 2012 திசெம்பர் மாதமளவில் வீடுகளின் நிர்மாணிப்பு பூர்த்தியடைந்த போதிலும் உட்கட்டமைப்பு வசதிகளை நிர்மாணித்துக்கொடுக்க வேண்டியுள்ளது.

புனரமைப்புக் கருத்திட்டங்களின் கீழ் சொய்சாபுர கட்டம் 1 வீடமைப்புக் கருத்திட்டம் மற்றும் சுலோஹிதபுர கட்டம் 11 ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 20 வீடுகளைக் கொண்ட சொய்சாபுர ஐந்து மாடி வீட்டுக்கான நிர்மாணிப்புச் செலவு ரூபா 45 மிலியனாகும். 2012 திசெம்பர் மாதமளவில் 30% முன்னேற்றத்தைப் பெற்றிருந்தது.

சுலோஹிதபுர 11 வது கட்டத்தின் கீழ் 16 வீடுகளைக் கொண்ட நான்கு மாடி கட்டடமொன்று ரூபா 25 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 2012 திசெம்பர் மாதமளவில் 95% முன்னேற்றத்தைப் பெற்றிருந்தது.

## உள்நாட்டு/வெளிநாட்டு முதலீட்டுக் கருத்திட்டங்கள்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான காணிகளில் நேரடி நிர்மாணிப்பு முறையியலின் கீழ் வீடுகளை நிர்மாணிக்கும் பொருட்டு எம்மிடம் நிதி ஏற்பாடுகள் இல்லாததால் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு ஆரம்பத்திலிருந்தே பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டதோடு பத்திரிகை அறிவித்தல்கள் வெளியிடப்பட்டு அதற்கான பதிலிறுப்புகள் பெறப்பட்டன.

இதன் பெறுபேறாக தற்போது வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் 03 கருத்திட்டங்களையும் உள்நாட்டு முதலீட்டாளர்களுடன் 10 கருத்திட்டங்களையும் ஆரம்பிப்பதற்கான திட்டங்களைத் தயாரிக்க இயலுமாயுள்ளது.

வெளிநாட்டு முதலீட்டுக் கருத்திட்டத்தின் கீழ் கிருளபன மிஹிந்துபுர கருத்திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற இயலுமாயிருந்தது. மிஹிந்துபுர கருத்திட்டம் 560 வீடுகளைக் கொண்டுள்ளதோடு, அது அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் உள்ளடக்கியதாகும். நிர்மாணிப்புச் செலவு ரூபா 6.3 பில்லியனாகும்.

கம்பஹா மாவட்டத்தில் யக்கல வெரெல்லவத்தை மற்றும் லங்கா உருக்கு காணியில் 864 வீடுகளும், ஹோமாகம மவுன்ற் கிளிபட் கருத்திட்டத்தில் 1064 மாடி வீடுகளும் திட்டமிடப்பட்டுள்ளது.

உள்நாட்டு முதலீட்டுக் கருத்திட்டத்திற்காக உரிய அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| கருத்திட்டத்தின் பெயர் | வீடுகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1. சியனே உயன, யக்கல | 12 |
| 2. பண்டாரவளை, பத்தன காணி | 16 |
| 3. ஹன்தான பத்தனவத்த, கண்டி | 103 |
| 4. ஜல்தர கட்டம் 11, ஹோமாகம | 135 |
| 5. களுகல காணி, பல்லேகெலே | 21 |
| 6. சித்ரா லேன், நாரஹேன்பிட்ட | 55 |
| 7. கவிரத்ன இடம், பாமன்கடை, கொழும்பு 05 | 28 |
| 8. கல்கடுவ வத்தை, இரத்தினபுரி | 130 |
| 9. ஹன்தான வேலைத்தலம் 3 | 23 |
| 10. ஹன்தான வேலைத்தளம் 4 | 19 |

மனித வளப்
பிரிவு

### மனித வளமுகாமைத்துவம்

தலைமை அலுவலகத்தின் பணியாட்டொகுதியானது, தலைவர்/ உப தலைவர்/ பொது முகாமையாளர்/ செயற்பாட்டுப் பணிப்பாளர் மற்றும் பிரதி பொது முகாமையாளர் பிரிவுகள் 09 இன் கீழ் பிரிக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர 26 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 03 கொழும்பு நகர அலுவலகங்கள் மற்றும் கல்முனையில் உப அலுவலகமொன்றும் தாபிக்கப்பட்டுள்ளன.

மனித வள முகாமைத்துவம் மற்றும் நிர்வாகப் பிரிவு பின்வரும் பிரிவுகளை உள்ளடக்கியதாயுள்ளது.

1. மனித வளப் பிரிவு
2. நிர்வாகப் பிரிவு
3. ஒழுக்காற்றுப் பிரிவு
4. போக்குவரத்துப் பிரிவு
5. வழங்கல் பிரிவு
6. பயிற்சிப் பிரிவு
7. பதவிநிலையினர் வீடமைப்புக் கடன் பிரிவு
8. பாதுகாப்புப் பிரிவு

### 2012 ஆம் ஆண்டினுள் மனித வளப் பிரிவினுள் நடைபெற்ற மாற்றங்கள்

1.1 2012.01.01 முதல் 2012.12.31 வரை பணியாட்டொகுதியின் விபரம் பின்வருமாறு.

| தொடர் இல. | சேவை மட்டம் | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | பௌதீக எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | சிரேஷ்ட முகாமைத்துவ | 114 | 98 |
| 02. | மூனறாம் நிலை முகாமைத்துவ | 157 | 296 |
| 03. | இரண்டாம் நிலை | 899 | 1335 |
| 04. | முதல்நிலை | 205 | 458 |
| | மொத்தம் | 1375 | 2187 |

02. 2012 ஆம் ஆண்டில் 2012.12.31 ஆம் திகதிக்கு பௌதீக பணியாட்டொகுதியினர் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள விதம் பின்வருமாறு.

| தொடர் இல. | பணியாட்டொகுதி விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | நிரந்தர | 1706 |
| 02 | ஓய்வுபெற்ற ஒப்பந்த | 27 |
| 03 | நாளாந்த | 417 |
| 04 | தற்காலிக ஒப்பந்த | 37 |
| | மொத்தம் | 2187 |

03. முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை இல. 30 இன் பிரகாரம் பணியாட்டொகுதி அங்கீகரிக்கப்படுகின்றபோது அங்கீகரிக்கப்பட்டுள்ள பணியாட்டொகுதி 1375 ஆகும்.

04. இப் பணியாட்டொகுதியை அங்கீகரிப்பதற்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்டிருந்த பணியாட்டொகுதி 2493 ஆகும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிரந்தர பணியாட்டொகுதி 1706 மற்றும் ஓய்வுபெற்ற ஒப்பந்த அடிப்படையிலான 27 முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 30 அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்டிருந்த 2493 பணியாட்டொகுதியின் கீழ் ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களாவர்.

05 முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை இல. 30 இன் பிரகாரம் பணியாட்டொகுதியை அங்கீகரிக்கின்றபோது 2010 ஆம் ஆண்டுக்காக 2009 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டமே அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்தது. எனினும், 2010 ஆம் ஆண்டில் அமைச்சு மீள்ஒழுங்கமைக்கப்பட்டதைத் தொடர்ந்து அதற்கு சமாந்திரமாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் நிகழ்ச்சித்திட்டங்களும் விரிவடைந்தன.

06. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் அலுவலகக் கட்டளைகள் 2004/09 இன் கீழ் ஊழியர்களை ஓய்வுபெறச் செய்வதன் அடிப்படையிலும், புதிய ஆட்சேர்ப்புகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதன் மீதும் வெற்றிடமான பதவிகள் காணப்பட்டன. ஆதலால் புதிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உருவாகிய சேவைத் தேவையின் அடிப்படையில் மேற்படி வெற்றிடங்களுக்கு மேலே காட்டப்பட்டுள்ளவாறான நிரந்தர, நாளாந்த மற்றும் தற்காலிக ஒப்பந்த ஊழியர்களை ஆட்சேர்த்தல் நடைபெற்றது.

1.2 2012.12.31 ஆம் திகதி வரை பின்வருமாறு ஆட்சேர்ப்புகள் நடைபெற்றுள்ளன.

| நேரடி ஆட்சேர்ப்பு | | | | ஓய்வு பெற்றதன் பின்னர் மீண்டும் சேவைக்கு ஆட்சேர்த்தல் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| நிரந்தர | | ஒப்பந்த | நாளாந்த | | | |
| நிறைவேற்று | நிறைவேற்றல்லாத | | | நிறைவேற்று | நிறைவேற்றல்லாத | |
| 23 | 84 | 19 | 361 | 21 | 29 | 537 |

1.3 2012.01.01 முதல் 2012.12.31 வரையிலான காலத்தினுள் உள்ளக பதவி உயர்வுகள்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் செயலூக்குவிப்பு செயற்பாட்டை மேம்படுத்தி பின்வருமாறு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

| தொடர் இல. | சேவை மட்டம் | பதவி உயர்வு |
|---|---|---|
| 01. | சிரேஷ்ட முகாமைத்துவம் | 26 |
| 02. | மூன்றாம் நிலை முகாமைத்துவம் | 176 |
| 03. | இரண்டாம் நிலை | 554 |
| 04. | முதல் நிலை | 148 |

1.4 2012.01.01 முதல் 2012.12.31 வரையிலான காலத்தினுள் ஓய்வுபெறச் செய்தல், ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் பதவி விலகிய ஊழியர்களின் எண்ணிக்கை பின்வருமாறு

| தொடர் இல. | சேவை மட்டம் | ஓய்வுபெறச் செய்தல் | ஒப்பந்தம் முடிவுறுத்தல் | பதவி விலகல் |
|---|---|---|---|---|
| 01. | சிரேஷ்ட முகாமைத்துவம் | - | - | 01 |
| 02. | மூன்றாம் நிலை முகாமைத்துவம் | 13 | 02 | 06 |
| 03. | இரண்டாம் நிலை | 63 | 06 | 22 |
| 04. | முதல் நிலை | 24 | 05 | 05 |
| | மொத்தம் | 100 | 13 | 34 |

1.5 இந்த அதிகாரசபையில் சேவையில் ஈடுபட்டிருக்கையில் 2012.01.01 முதல் 2012.12.31 வரையிலான காலத்தினுள் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 04.

1.6 தொழில்நுட்ப பல்கலைக்கழகங்களின் மாணவர்களுக்கு நடைமுறைப் பயிற்சியளித்தல்.

பயிற்சிக்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட எண்ணிக்கை - 61
ஆண்டினுள் பயிற்சியை பூர்த்தி செய்தோர் எண்ணிக்கை - 43

## நிர்வாகப் பிரிவு

2012 ஆம் ஆண்டில் நிர்வாகப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பணிகள்.

1. 2012 ஆம் ஆண்டுக்காக ஊழியர்களுக்கு பணிக்கொடையாக ரூபா 1000/- மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக ரூபா 2000/- செலுத்தப்பட்டது. மருத்துவ நலவுரிமைகளும் செலுத்தப்பட்டுள்ளன.

2. இடர் கடன், உணவுப் படி, லீவு நாட்களுக்கான கொடுப்பனவு, வாகன வாடகைக் கொடுப்பனவு மற்றும் உத்தியோகபூர்வ விடுதிக் கொடுப்பனவு மற்றும் வாடகைக் கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது.

## பதவிநிலையினர் வீடமைப்புக் கடன்கள்

2012 ஆம் ஆண்டுக்காக ரூபா 74.415 மில்லியன் பதவிநிலையினர் வீடமைப்புக் கடனுக்கான நிதி ஏற்பாடாகக் கிடைத்தது. தலைமை அலுவலகத்தின் பொருட்டு ரூபா 20.000 மில்லியனும் மாவட்ட அலுவலகங்களுக்கு ரூபா 54.415 மில்லியனும் என்றவாறாகும்.

02. மேற்படி நிதி ஏற்பாடுகளிலிருந்து பின்வருமாறு வீடமைப்புக் கடன்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

| தரம் | தலைமை அலுவலகம் ரூபா | மாவட்ட அலுவலகம் ரூபா | செலுத்தப்பட்ட மொத்தத் தொகை ரூபா |
|---|---|---|---|
| I - VI | 1,600,000 | 1,900,000 | 3,500,000 |
| VII – VII ஏ | 2,815,000 | 200,000 | 3,015,000 |
| VIII –IX | 1,289,500 | 3,000,000 | 4,289,500 |
| | 5,704,500 | 5,100,000 | 10,804,500 |

03. அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாடு, செலவிடப்பட்ட தொகை மற்றும் எஞ்சிய தொகை பின்வருமாறு.

| அலுவலகம் | அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா | செலவிடப்பட்ட தொகை ரூபா | மீதி ரூபா |
|---|---|---|---|
| தலைமை அலுவலகம் | 20,000,000 | 5,704,500 | 14,295,500 |
| மாவட்ட அலுவலகம் | 54,415,000 | 5,100,000 | 49,315,000 |
| | 74,415,000 | 10,804,500 | 63,610,500 |

| | |
|---|---|
| 2012 ஆம் ஆண்டில் தலைமை அலுவலகத்தில் வீடமைப்புக் கடன் வழங்கப்பட்ட ஊழியர்கள் எண்ணிக்கை | - 12 |
| 2012 ஆம் ஆண்டில் மாவட்ட அலுவலகத்தில் வீடமைப்புக் கடன் வழங்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | - 10 |
| **மொத்தம்** | - 22 |

ஒழுக்காற்று நடவடிக்கைகள்

## ஒழுக்காற்று நடவடிக்கைகள்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பாக செயலாற்றுதல் இப்பிரிவின் கடமைப் பொறுப்பாகும். 2012 ஆம் ஆண்டில் பெரும் தவறுகள் மற்றும் சிறு தவறுகள் தொடர்பாக அறிக்கையிடப்பட்ட சம்பவங்கள் மற்றும் அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு.

### பெரும் தவறான நடத்தைகள்

| தொடர் இல. | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | மொத்த அறிக்கையிடல | |
| | 1.1 2012 சனவரி 01 திகதியில் அறிக்கையிடப்பட்டவை | 23 |
| | 1.2 2012 ஆம் ஆண்டினுள் அறிக்கையிடப்பட்டவை | 17 |
| 02 | 2012.01.01 ஆம் திகதியில் முடிவடையாதிருந்த முறைசார்ந்த ஒழுக்காற்று விசாரணைகள் | |
| | 2.1 2012 ஆம் ஆண்டினுள் முடிவடைந்த முறைசார்ந்த ஒழுங்காற்று நடவடிக்கைகள் | 09 |
| | 2.2 2012.12.31 ஆம் திகதியில் முடிவடையாதிருந்த முறைசார்ந்த ஒழுக்காற்று விசாரணைகள் | 07 |
| 03 | 2012.01.01 திகதியில் வேலை இடைநிறுத்தப்பட்டிருந்தோர் எண்ணிக்கை | 13 |
| 04 | 2012 ஆம் ஆண்டினுள் வேலை இடைநிறுத்தப்பட்டோர் எண்ணிக்கை | 08 |
| 05 | 2012 ஆம் ஆண்டினுள் ஆரம்பிக்கப்பட்ட முறைசார்ந்த ஒழுக்காற்று விசாரணைகள் | |
| | 5.1 2012 ஆம் ஆண்டினுள் முடிவடைந்த முறைசார்ந்த ஒழுங்காற்று நடவடிக்கைகள் | 01 |
| | 5.2 2012.12.31 ஆம் திகதியில் முடிவடையாதிருந்த முறைசார்ந்த ஒழுக்காற்று விசாரணைகள் | 04 |
| 06 | 2012 ஆம் ஆண்டினுள் ஒழுக்காற்றுக் கட்டளைகள் வழங்கப்பட்ட எண்ணிக்கை | 12 |
| 07 | 2012 ஆம் ஆண்டினுள் சேவை நீக்கம் செய்யப்பட்டோர் | 03 |
| 08 | முறைசார்ந்த ஒழுக்காற்று விசாரணைகளின்றி தண்டனைகள் வழங்கப்பட்ட எண்ணிக்கை | - |
| 09 | 2012 ஆம் ஆண்டினுள் விடுவிப்புக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள் / ஒழுக்காற்று விசாரணைகளிலிருந்து விடுதலை பெறுதலின் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்ட எண்ணிக்கை | 04 |
| 10 | 2012 ஆம் ஆண்டினுள் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்ட எண்ணிக்கை | 01 |
| 11 | 2012.12.31 ஆம் திகதியில் முடிவடையாதிருந்த மொத்த ஒழுக்காற்று விடயங்களின் எண்ணிக்கை | 28 |

### சிறு தவறான நடத்தைகள

| தொடர் இல. | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | 2012.01.01 ஆம் திகதியளவில் முடிவடையாதிருந்த எண்ணிக்கை | |
| | 1.1 2012 ஆம் ஆண்டினுள் முடிவடைந்த எண்ணிக்கை | 02 |
| | 1.2 2012 ஆம் ஆண்டினுள் முடிவடையாதிருந்த எண்ணிக்கை | 03 |
| 02 | 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட எண்ணிக்கை | |
| | 2.1 2012 ஆம் ஆண்டினுள் முடிவடைந்த எண்ணிக்கை | 04 |
| | 2.2 2012 ஆம் ஆண்டினுள் முடிவடையாத எண்ணிக்கை | 11 |
| 03 | தண்டனைகளுக்கு உட்படுத்தப்பட்டு ஒழுக்காற்று விடயங்கள் முடிவுறுத்தப்படல் | 04 |
| 04 | விடுவிப்புக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த விடயங்களை ஏற்றுக்கொண்டு ஒழுக்காற்று விடயங்கள் முடிவுறுத்தப்படல் | - |
| 05 | எச்சரிக்கை / கடுமையாக எச்சரிக்கை செய்தல் | 02 |

## பாதுகாப்புச் சேவை

### வகுக்கப்பட்ட இலக்குகள்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பாதுகாப்புப் பிரிவு என்ற வகையில் அதிகார சபைக்குச் சொந்தமான அசையும்/அசையாச் சொத்துக்கள் மற்றும் மனித வளங்களைப் பாதுகாத்தல், நிறுவனத்தின் நற்பெயரையும் ஊழியர்களின் ஒழுக்கத்தையும் பாதுகாத்தலின் பொருட்டு முழுப் பலத்தையும் முறையியல்களையும் பயன்படுத்தி நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**I.** கடந்த ஆண்டினுள் பயங்கரவாதச் செயற்பாடுகள் இல்லாதிருந்த போதிலும், நிறுவன ரீதியில் பாதுகாப்புச் சேவைகளை ஆரம்பத்தில் இருந்த நிலைமையிலேயே பேணிவருவதற்கு நேரிட்டது.

**II.** 2012 சனவரி மாதமளவில் பாதுகாப்புப் பணியாட்டொகுதியின் ஊழியர் எண்ணிக்கை 138 ஆக இருந்ததோடு, 57 வயது பூர்த்தியடைந்தமையினால் ஓய்வு பெறச் செய்யப்பட்டமை மற்றும் இறந்தமையின் காரணமாக பாதுகாப்பு ஆளணியினர் 126 வரை குறைவடைந்ததோடு, இவ்வாறான நிலைமையின் கீழ் கூட பாதுகாப்புச் சேவைகளை தொடர்ந்து பேணிவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**III.** தலைமை அலுவலகம் மற்றும் தலைமை அலுவலகத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற ஒருசில சேவை நிலையங்களில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பல்வேறான பாதுகாப்பு முறைகளை பயன்படுத்தி பாதுகாப்பை உறுதி செய்வதில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்ட சேவை நிலையங்கள் வருமாறு.

I. ஜல்தர அரச ஊழியர்களுக்கான வீடமைப்புத் திட்டம்
II. மாளிகாவத்தை பெரிய / சிறிய பிரதீபா மண்டபம்
III. முகத்துவாரம் / குணசிங்கபுர பிரதீபா மண்டபம்
IV. நாராஹேன்பிட்ட 117 ஆம் தோட்ட வீடமைப்புத் திட்டம்
V. சொய்சாபுர வலய அலுவலகம்
VI. இரத்மலானை நீர்ப்பாசனத் திணைக்களத்திடமிருந்து சுவீகரிக்கப்பட்ட காணி
VII. ஹிம்புட்டு உயன வீடமைப்புத் திட்டம்
VIII. கொழும்பு நகர வடக்கு அலுவலகத்திற்கு சொந்தமான முத்திரையிடப்பட்ட கடைகள்

இலக்குகளை நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் பெறுபேறுகளும்

01. தலைமை அலுவலகம் உள்ளிட்ட வீடமைப்புச் செயலகத்தில் அமைந்துள்ள அலுவலகங்களுக்கு வருகை தருகின்ற அனைத்து வாகனங்கள், நபர்கள் மற்றும் பயணப் பொதிகளை பரிசோதித்தல்.
02. பாதுகாப்புப் பிரிவின் பொறுப்புகள் மற்றும் கடமைகள் தொடர்பில் பாதுகாப்பு ஆளணியினரை விழிப்புணர்வூட்டும் பொருட்டு அறிவுரை வகுப்புகளை நடத்தல் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் உள்ளிட்ட அனைத்து சேவை நிலையங்களுக்கும் தேவையான கடமைசார்ந்த அறிவுரைகளை எழுத்து மூலம் வழங்குதல் மற்றும் அத்தகைய அறிவுரைகள் தொடர்பில் பிரிவுத் தலைவர்கள் மற்றும் மாவட்ட முகாமையாளர்களை விழிப்புணர்வூட்டல்.
03. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் நற்பெயருக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகளைத் தடுத்தல் மற்றும் மோசடிச் செயல்கள் மற்றும் நட்டமேற்படுத்துகின்ற நோக்கத்துடன் நடைபெறுகின்ற செயல்கள் தொடர்பாகக் கண்டறிந்து அறிக்கையிடல் மற்றும் ஒழுக்கத்தைப் பேணிவருவதற்கு உதவியளித்தல்.
04. ஊழியர்கள் கடமைக்கு வருகை தருதல் மற்றும் வெளியேறுதல் தொடர்பான பதிவுகளை பேணிவருதல் மற்றும் அத்தகைய கருவிகளின் பாதுகாப்புக்கு நடவடிக்கை எடுத்தல்.
05. உயர் பாதுகாப்பு வலயங்களில் அமைந்துள்ள நிறுவனங்கள், கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தின் தலைமையில் பேணிவரப்படுகின்ற பாதுகாப்புக் குழுக் கூட்டங்களில் பங்கேற்றல் மற்றும் அதில் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்கள் மற்றும் வழங்கப்படுகின்ற ஆலோசனைகளுக்கு அமைய செயலாற்றுதல், அது தொடர்பில் பாதுகாப்பு ஆளணியினரை விழிப்புணர்வூட்டல்.
06. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நிதி நிலைமைகளைக் கவனத்திற்கொண்டு நிர்வாக மேலாண்மையின் தீர்மானத்தின் பேரில் சேவை நிலையங்களுக்கு பாதுகாப்பு ஆளணியினரை ஈடுபடுத்துவதைக் குறைத்தல், மேலதிக நேர கடமையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
07. வீடமைப்புச் செயலகக் கட்டடத்தின் பாதுகாப்பின் பொருட்டு துப்பாகிகளுடன் கூடிய பாதுகாப்பு உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்தல்.

08. அவசர தீ விபத்துகளுக்கு முகம்கொடுப்பதற்குத் தேவையான அதிசக்திவாய்ந்த தீயணைப்பு நீர்க் குழாய் முறைமையொன்றின் தேவையை மீண்டும், மீண்டும் வலியுறுத்தலும் அதனைச் செயற்படுத்துவதற்கான வேண்டுகோள்களைச் சமர்ப்பித்தலும்.

09. நீதிமன்றக் கட்டளைகளைப் பெற்றுள்ள அத்துமீறிய குடியிருப்பாளர்களை அகற்றுகின்ற நடவடிக்கைகளின் பொருட்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்களைப் பங்கேற்கச் செய்தல் மற்றும் வெற்று உரிமை பொறுப்பேற்கப்பட்ட மேற்படி வீடுகளில் மீண்டும் பிரவேசிப்பதைத் தடுக்கும் பொருட்டு தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தல் மற்றும் செயற்படுத்தல்.

போக்குவரத்துப் பிரிவு

**விசேட விடயங்கள்**

01. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு 2012 ஆம் ஆண்டு தொடக்கம் பயிற்சி நிகழ்சித்திட்டங்களை நடத்துதல்.

02. பல ஆண்டுகளாக நேரடித் துப்பாக்கிப் பயிற்சியை வழங்க இயலாதிருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டு தொடக்கம் அப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

03. பாதுகாப்பு உத்தியோகத்தர் பயிற்சிப் பாடநெறி மற்றும் ஒழுக்க நடைமுறைகள் போன்ற பாடநெறிகளுக்கும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை பங்குபற்றச் செய்வதற்கு பொது முகாமையாளர் (மனித வள முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம்) நடவடிக்கையெடுத்தார். அதேபோன்று மேற்படி பாடநெறிகளைக் கற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வெற்றிகரமாக அப் பாடநெறிகளைக் கற்று தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் நற்பெயரைப் பாதுகாக்கின்ற வகையில் அனைத்துப் பாடங்களிலும் திறமைச் சித்திகளைப் பெற்றுள்ளனர்.

**போக்குவரத்துப் பிரிவு**

**வகுக்கப்பட்ட இலக்குகள்**

01. தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் 134 பேருக்கு மோட்டர் சைக்கிள்கள் வழங்குதல்.

02. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர்களுக்கு டபிள் கெப் வண்டிகளை வழங்குதல்.

03. போக்குவரத்து ஒதுக்கத்தின் கராஜை புதிதாக அமைத்தல்.

04. ஊழியர்களுக்கான நலனோம்புகை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

05. 2012 ஆம் ஆண்டுக்கு எரிபொருள்களுக்காக ரூபா 10,625,000 மதிப்பிடப்பட்டிருந்ததோடு, ரூபா 9,641,981.22 தொகை செலவாகியது. இதற்கமைய 2012 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்டிருந்த பணத் தொகையில் ரூபா 983,018.78 பணத் தொகையை மீதப்படுத்த முடியுமாயிருந்தது.

**இலக்குகளை நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் பெறுபேறுகளும்**

01. தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்களைக் கொள்வனவு செய்கின்றபோது முதலில் நிதிக் குத்தகைக் கம்பனிகளின் ஊடாக கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்திருந்த போதிலும், பின்னர் மாவட்ட ஒருங்கிணைந்த நிதியத்தின் நிதியை அதற்காகப் பயன்படுத்த முடியுமாயிருந்தது. இதன் மூலம் பின்வரும் நன்மைகள் நிறுவனத்திற்கு/ஊழியர்களுக்கு கிடைத்தது.

i. மேலதிக வரித் தொகைகள்/ வட்டி செலுத்த நேரிடாமை

ii. நிறுவனம் மேற்கொண்ட இத் தீர்மானத்தின் மூலம் எதிர்கால முதலீடும் அதேபோன்று ஊழியர் நலனோம்புகையும் நடைபெறல்.

iii. அதிகாரசபைக்குரிய பிணைப் பணத் தொகைகளை திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்கின்றபோது கிடைக்கின்ற 6% வட்டி வீதத்திற்கு சமமான தொகையொன்று நிறுவனத்திற்குக் கிடைத்தல்.

iv. வாகனங்களை, மோட்டார் சைக்கிள்கள் நாம் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலிருந்து பெற்றிருந்த கூட்டு வாகனக் காப்புறுதியினுள் காப்புறுதி செய்யப்பட்டதன் மூலம் அதற்காக நிறுவனத்திற்கு செலவான செலவினம் குறைவடைந்தமை.

மாவட்ட முகாமையாளர்களுக்கு டபிள் கெப் வண்டிகளைக் கொள்வனவு செய்கின்றபோது முதலாவதாக கருத்திட்ட அறிக்கையொன்றைத் தயாரித்தல். அதனை தவிசாளரின் மூலம் அமைச்சுக்கு ஆற்றுப்படுத்தல். இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி நிதிக் குத்தகை அடிப்படையில் கிடைத்த டபிள் கெப் வண்டிகளின் மூலம் பத்து இலட்சம் வீடுகள் குடியேற்ற அபிவிருத்தித் தொழிற்பாடுகளின் நடவடிக்கைகளுக்கு அதிக பங்களிப்புக் கிடைத்தது. மேற்படி கெப் வண்டிகளும் கூட்டு வாகனக் காப்புறுதியின் கீழ் காப்புறுதி செய்யப்பட்டதன் மூலம் அதற்காக நிறுவனத்தினால் ஏற்க நேரிட்ட செலவு குறைவடைந்தது.

v. கராஜ் அமைக்கப்பட்டதன் பின்னர் வாகனங்களின் திருத்த நடவடிக்கைகள் அதன் மூலம் மேற்கொள்ளப்படல். நாளொன்றுக்கு அண்ணளவாக ரூபா 50,000.∵- பெறுமதியான திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

vi. ஊழியர்களின் தேவையின் பேரில் நலனோம்புகை அடிப்படையில் வான் வண்டிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டதன் மூலம் ரூபா 212,395.∵- தொகை அதிகாரசபைக்கு கிடைத்தது.

vii. எரிபொருளுக்கான மதிப்பீட்டுத் தொகையை விட குறைவாக நிதி செலவிடப்பட்ட போதிலும் ஆண்டினுள் இரண்டு தடவைகள் எரிபொருள் விலை அதிகரித்தது. அதற்கும் முகம்கொடுத்து, எரிபொருள் கட்டுப்பாடு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் பேரில் இவ்வாறு எரிபொருளுக்கான செலவுகளைக் குறைத்துக்கொள்ள இயலுமாயிருந்தது.

viii. திருத்தங்கள், பராமரிப்பு மற்றும் தவணைச் சீர்செய்தல்களுக்காக ரூபா 8,000,000.∵- மதிப்பிடப்பட்டிருந்ததோடு, திருத்தங்கள் மற்றும் பராமரிப்புக்கு காசு உள்ளடங்களாக செலவாகிய தொகை ரூபா 4,944,833.49 ஆகும். இதில் வெளிவாரி கராஜ்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட திருத்த வேலைகள் நிறுவனத்தின் கராஜ் மூலம் மேற்கொள்ளப்பட்டமையினால் இந் நிலைமையை அடைய முடியுமாயிருந்தது.

பயிற்சிப்
பிரிவு

**03. ஆண்டினுள் பெறப்பட்ட வெற்றிகள்**

I நிறுவனத்தின் கராஜின் மூலம் திருத்த வேலைகள் செய்யப்படுகின்றமையால் செலவினம் குறைவடைதல்.

ii. ஓட்டத்தில் விட முடியாதுள்ள வாகனங்களை விற்பனை செய்வதற்கு நடவடிக்கையெடுத்தல்.

iii. விடுமுறை நாட்களில் கடமைகளுக்கு மாற்று முறையில் சாரதிகள் கடமையில் ஈடுபடுத்தப்படுவதன் மூலம் தப்பான எண்ணங்கள் நீங்கியமை.

iv. தவணை சீர்செய்தல்களுக்காக ரூபா 2,005,385.99 தொகை செலவாகியது. இவ்வாறு தவணை சீர்செய்தல் செலவுகள் மட்டுப்படுத்தப்பட்டமை தொடர்பில் விலை கூடிய வடிகளுக்குப் பதிலாக விலை குறைந்த வடிகள் இடப்பட்டமை, லங்கா உராய்வு நீக்கி எண்ணெய் இடப்பட்டமை, தவணை சீர்செய்தல் தூரம் 3000 கி.மீற்றரில் இருந்து 4000 கி.மீற்றர் வரை அதிகரிக்கப்பட்டமை ஆகிய முறைகள் பின்பற்றப்பட்டமை காரணமாக அமைந்தது.

## பயிற்சிப் பிரிவு

**1. வகுக்கப்பட்ட இலக்குகள்**

| | நிகழ்ச்சித்திட்ட எண்ணிக்கை | பங்குபற்றுதல் | |
|---|---|---|---|
| 1. உள்ளக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 10 | 454 | தலைமை அலுவலகம் உள்ளிட்ட மாவட்ட பணியாளர்கள் |
| 2. வெளிவாரிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 33 | 87 | |
| 3. வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 05 | 06 | |
| தன்விருப்புப் பயிற்சி கடன் திட்டங்கள் | 09 | 38 | - அதே - |
| கற்கை லீவு | 275 | 316 | - அதே - |

**2. இலக்குகளை நிறைவேற்றிக்கொள்ள மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**

2.1 பயிற்சித் தேவைப்பாடுகளுக்கு பணியாட்டொகுதியினரை ஆற்றுப்படுத்தல்.

2.2 பயனுறுதியானதும் வினைத்திறன்மிக்கதுமான விதத்தில் நிறுவனத்தின் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு பணியாட்டொகுதி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்து 2013 பயிற்சி நாட்காட்டியின் ஊடாக நிறுவனத்தின் குறிக்கோள்களை அடையப்பெறுவதற்கான தகுந்த இலக்குகளை நிறைவேற்றல்.

**3. ஆண்டினுள் பெற்றுள்ள வெற்றிகள்**

3.1 பயிற்சி அறிவைப் பெற்றுக்கொடுத்ததன் ஊடாக பொதுமக்கள் சேவைக்கு அர்ப்பணிக்கப்பட்ட குழுவொன்றை (விருந்தினர் உபசரிப்பு) பெற்றுக்கொடுத்து எமது நிறுவனத்திற்குச் சொந்தமான சுற்றுலாத்துறை விடுதிகளில் வருமான சாதனைகளை அதிகரிக்கச் செய்யும் பொருட்டான சுற்றுலா விடுதிப் பயிற்சி.

3.2 வினைத்திறன்மிக்க ஊழியர்களை உருவாக்குதல்

3.3 தமிழ் மொழிமூலமும் (வடக்கு,கிழக்கு) பணியாட்டொகுதிப் பயிற்சியின் ஊடாக மறுமலர்ச்சியினை ஏற்படுத்துதல்

3.4 சிற்றூழியர் முதல் உயர் முகாமைத்துவம் வரை வழங்கப்படுகின்ற மாநாடுகள்∵. செயலமர்வுகள்/ பாடநெறிகள் ஊழியர் பங்களிப்பின் மூலம் அவர்கள் பெறுகின்ற அறிவு, மகிழ்ச்சி, வினைத்திறன் நிறுவனத்தின் குறிக்கோளை பயனுறுதியான விதத்தில் அடையச் செய்தல்.

3.5 மாவட்ட அலுவலகம் மற்றும் தலைமை அலுவலகத்தின் சிற்றூழியர்களை "திறமைச் சேவை ஊக்குவிப்பு செயலமர்வு" ஊடாக மிகவும் வினைத்திறன்மிக்கவர்களாக மாற்றுவதன் ஊடாக தமது சகோதர பணியாளர்களுடன் சேவையாற்றுகின்றபோது இலகுவான செயல் முறைகளை புரியவைத்து அதனூடாக வெற்றிகரமான குழுவினராக மாற்றுதல்.

3.6 கடந்த ஆண்டை விட 2012 ஆம் ஆண்டில் பயிற்சியளிப்புகளின் எண்ணிக்கை அதிகரித்தல்.

சட்டப் பிரிவு

### வழங்கல் பிரிவு

இவ்வதிகாரசபையின் 2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளிலிருந்து பண்டங்களைக் கொள்வனவு செய்கின்ற நடவடிக்கைகள் வழங்கல் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டன.

இதைத் தவிர கட்டு நிதியிலிருந்து பணடங்களைக் கொள்வனவு செய்கின்ற நடவடிக்கைகளும் மாதாந்த மாவட்ட மீளாய்வுக் கூட்டங்கள் உள்ளிட்ட ஒப்படைக்கப்பட்ட வேறு வைபவங்களுக்காக உணவு பானங்களைக் கொள்வனவு செய்கின்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

பண்டங்களைக் கொள்வனவு செய்கின்றபோது சாதாரண கொள்வனவு மூலமும் கேள்விப்பத்திரம் கோரல் ஊடாக கொள்வனவு செய்தலும் நடைபெற்றுள்ளன.

### சட்டப் பிரிவு

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்கின்றபோது ஏனைய பிரிவுகளைப் போன்றே சட்டப் பிரிவினாலும் அதற்குத் தேவையான உதவிகள் வழங்கப்படுகின்றன.

- காணிகள் மற்றும் வீடுகளுக்கான அறுதி உறுதிகளை வழங்குதல்.
- மாடி வீடுகளின் உறுதிகளை வழங்குவதற்குத் தேவையான கூட்டாட்சிக் கூற்றுக்களைத் தயாரித்தல்.
- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குரிய ஆதனங்கள் தொடர்பில் பொதுவாக சமூகத்திற்கு பாதிப்புகள் ஏற்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பில் செயலாற்றுதல்.
- தேவையான சந்தர்ப்பங்களில் ஆட்களுக்கும் நிறுவனங்களுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல்
- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் வீடுகளை அனுமதியின்றி அனுபவிக்கின்றவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து நிர்ணய உரித்தைப் பெற்றுக்கொள்ளல்.
- வெளித் தரப்பினர்களுக்கும் இவ்வதிகாரசபைக்கும் இடையிலான அலுவல்களின்போது ஒப்பந்த உடன்படிக்கைகளை தயாரித்தல் மற்றும் ஏனைய உடன்படிக்கைகளை தயாரித்தல்.
- அனைத்து மாவட்ட அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தின் அனைத்துப் பிரிவுகளும் உள்ளடங்குகின்றவாறு தேவையான சட்ட ஆலோசனைகளைப் பெறுதல்.
- கடன் மற்றும் வாடகைத் தவணைத் தொகைகளை செலுத்தாதிருக்கின்ற நிலுவை கடன், வாடகைத் தவணை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொண்டு அதிகார சபைக்கு வருமானத்தைப் பெற்றுக்கொள்ளல்.
- நொத்தாரிசுக் கட்டணம், சட்ட அறிவித்தல் மற்றும் வெளியேற்றல் கட்டளைகளை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் அறவீடுகளுக்கு பங்களிப்பை வழங்குதல்.

ஆகிய பல்வேறான கடமைகள் சட்டப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றன.

### உறுதிகளை வழங்கல்

மொத்தப் பணத்தையும் செலுத்தியுள்ள வீடமைப்புத் திட்டங்களின் வீடு பெறுனர்களுக்கு அறுதி உறுதிகளை வழங்குதல் பிரதானமாக நடைபெறுகின்ற ஒரு கடமையாகும். இதில் கூட்டாட்சி ஆதனங்கள் மற்றும் கூட்டாட்சி ஆதனங்களல்லாத வீடமைப்புத் திட்டங்களின் வீடுகளுக்கும் அதேபோன்று காணிகளுக்கும் அறுதி உறுதிகள் வழங்கப்படுகின்றன.

| | |
|---|---|
| 2012 ஆம் ஆண்டினுள் உறுதிகள் வழங்குகின்ற இலக்கு | - 3000 |
| 2012 ஆம் ஆண்டினுள் தயாரிக்கப்பட்ட உறுதிகளின் எண்ணிக்கை | - 3119 |

இதன்போது வருடாந்த இலக்கிடப்பட்ட உறுதிகளின் எண்ணிக்கையை தாண்டுகின்ற விதத்தில் உறுதிகளை வழங்குவதற்கு சட்டப் பிரிவுக்கு இயலுமாயிருந்தது.

## ஜனசெவன உறுதிகள் வழங்கும்
## நிகழ்ச்சித்திட்டம் - 2012
## 2012 திசெம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறு முன்னேற்றம்

| | மாவட்டம் | வருடாந்த உறுதிகளின் இலக்கு | வழங்கப்பட்ட உறுதிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | அம்பாறை | 200 | 166 |
| 2 | அனுராதபுரம் | 100 | 158 |
| 3 | பதுளை | 50 | 162 |
| 4 | மட்டக்களப்பு | 50 | 9 |
| 5 | கொழும்பு மாவட்டம் | 150 | 303 |
| 6 | கொழுமபு நகரம் தெற்கு | 200 | 231 |
| 7 | கொழும்பு நகரம் வடக்கு | 200 | 107 |
| 8 | காலி | 150 | 154 |
| 9 | கம்பஹா | 250 | 261 |
| 10 | அம்பாந்தோட்டை | 125 | 99 |
| 11 | யாழ்ப்பாணம் | 150 | 33 |
| 12 | களுத்துறை | 100 | 210 |
| 13 | கண்டி | 250 | 214 |
| 14 | கேகாலை | 100 | 111 |
| 15 | குருணாகல் | 170 | 166 |
| 16 | மன்னார் | 25 | 2 |
| 17 | மாத்தளை | 75 | 76 |
| 18 | மாத்தறை | 100 | 147 |
| 19 | மொனறாகல | 100 | 83 |
| 20 | நுவரெலியா | 75 | 47 |
| 21 | பொலனறுவை | 75 | 109 |
| 22 | புத்தளம் | 100 | 53 |
| 23 | இரத்தினபுரி | 75 | 91 |
| 24 | திருகோணமலை | 30 | 19 |
| 25 | வவுனியா | 40 | 34 |
| 26 | சொய்சாபுர | 50 | 74 |
| 27 | கிளிநொச்சி | 10 | - |
| | **மொத்தம்** | **3000** | **3119** |

### தலைமை அலுவலகத்தினால் நெறிப்படுத்தப்படுகின்ற வழக்குகள்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கட்டளைச் சட்டங்களுக்கு இணங்க நிலுவை வாடகையை உரியவர்கள் மற்றும் அத்துமீறிய நிர்மாணிப்புகளைச் செய்துள்ளவர்களுக்கு, அத்துமீறிய குடியிருப்பாளர்களுக்கு எதிராக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் தாக்கல் செய்யப்படுகின்ற வழக்குகள் மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு எதிராக ஏனைய தரப்பினர்களால் தாக்கல் செய்யப்படுகின்ற வழக்கு நடவடிக்கைகளை நெறிப்படுத்தல், சட்ட ஆலோசனைகளை வழங்கல், மனித உரிமை முறைப்பாடுகள் தொடர்பில் செயலாற்றுதல், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான ஆதனங்களை முறைகேடான விதத்தில் பயன்படுத்துகின்றவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் ஆகியவற்றின்போது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சட்டப் பிரிவு உதவி வழங்குகின்றது.

இதன்போது தலைமை அலுவலகத்தினால் நெறிப்படுத்தப்பட்ட வழக்குகள் பின்வருமாறு.

| நீதிமன்றம் | வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| உயர் நீதிமன்றம் | 09 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | 24 |
| மேல் நீதிமன்றம் | 08 |
| மாவட்ட நீதிமன்றம் | 37 |
| நீதவான் நீதிமன்றம் | 38 |
| தொழில் நியாய சபை | 05 |

திட்டமிடல் மற்றும் முன்னேற்றப் பிரிவு

## திட்டமிடல் மற்றும் முன்னேற்றப் பிரிவு

மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை வீடு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தியது. 2012 ஆம் ஆண்டில் 39493 வீடமைப்பு அலகுகளுக்கான இலக்கை அடைவதற்குத் திட்டமிடப்பட்டது. இந்த இலக்கை அடையப்பெறும் பொருட்டு பிரதானமான வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் சில திட்டமிடப்பட்டன. அதற்கிணங்க ஆண்டின் செயலாற்றுகை பின்வருமாறு.

| | இலக்கு | | முன்னேற்றம் | | செயலாற்றுகை | |
|---|---|---|---|---|---|---|
| | பௌதீக | நிதியியல் | பௌதீக | நிதியியல் | பௌதீக | நிதியியல் |
| வீடமைப்பு அபிவிருத்தி | 39493 | 9900.00 | 30630 | 4904.15 | 77.5% | 50% |
| காணித் துண்டுகளை வழங்கல் | 1000 | - | 152 | - | 15.2% | - |
| உறுதிகளை வழங்கல் | 3000 | - | 3119 | - | 104% | - |
| நகமு புரவர | - | 161.57 | - | 175.48 | - | 108% |
| காணி நட்டஈடு | - | 50 | - | 50.8 | - | 101% |
| தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டம் வீடமைப்பு அபிவிருத்தி | 15390 | 1208 | 14083 | 934.99 | 91.5% | 77.4% |
| நகமு புரவர (தொடர்ச்சி) | - | 170.0 | - | 143.357 | - | 84.32% |

### வெற்றிகள்

இவ்வாண்டினுள் பெற்ற விசேட வெற்றிகள் பின்வருமாறு

1. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் அண்மைக்கால வரலாற்றில் மிகக் கூடுதலான வீடுகளை வீடமைப்பு ஒதுக்கத்தில் சேர்க்க முடியுமாயிருந்தமை
2. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வரலாற்றில் மிகக் கூடுதலான நிதி முதலீடு.
3. அரச வங்கிகளின் மூலம் ரூபா 3695 மில்லியனை வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு பங்களிப்புச் செய்ய இயலுமாயிருந்தமை.
4. வீடமைப்புக் கடன்களுக்கான முதலீடு அதிகரிக்கச் செய்யப்பட்டமை மற்றும் உள்ளக நிதி உருவாக்கம் அதிகரிக்கப்பட்டமை
5. அதிகாரசபையின் வினைத்திறனை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு கடமை அலுவல்களில் ஈடுபடுத்தும் பொருட்டு 18 புதிய கெப் வண்டிகள் திறைசேரியின் மூலம் வழங்கப்பட்டமை.
6. நகமு புரவர நிகழ்ச்சித்திட்டத்தின் பொருட்டு அரச கவனம் செலுத்தப்பட்டதன் மூலம் 2013 ஆம் ஆண்டுக்காக ரூபா 1000 மில்லியன் நிதி ஏற்பாட்டை பெற இயலுமாயிருந்தமை.

## <u>அறவீட்டுப் பிரிவு</u>

அறவீட்டுப் பிரிவின் அலுவல்கள் 2012 சனவரி முதல் ஜூலை வரை திட்டமிடல் மற்றும் முன்னேற்றப் பிரிவின் கீழேயே செயற்பட்டு வந்ததோடு இப் பிரிவு 2012 ஜூலை மாதம் முதல் தனியானதொரு பிரிவாக நிதிப் பிரிவின் கீழ் செயற்பட்டு வருகின்றது. அறவீட்டு நிகழ்சிதிட்டம் பணிப்பாளர் சபை அங்கத்தவர் ஒருவரின் கீழ் கண்காணிக்கப்பட்டு வரப்படுகின்றது. அறவீட்டு நிகழ்ச்சிட்டம் தொடர்பாக மாவட்ட அலுவலக பணியாட்டொகுதியினரும் அறவீட்டு முகவர்களும் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளனர்.

2012 சனவரி முதல் திசெம்பர் வரை அறவீட்டு இலக்கு ரூபா 1787 மில்லியனாகும் என்பதோடு, அது ஜூலை மாதத்தினுள் மேலதிக ரூபா 1000 மில்லியன் இலக்கு வழங்கப்பட்டதன் ஊடாக மொத்த அறவீட்டு இலக்கு ரூபா 2787 வரை அதிகரிக்கப்பட்டது. இது 2011 ஆம் ஆண்டின் இறுதியில் கடன்பட்டோர்களில் அண்ணளவாக 95% ஆகும். இந்த இலக்கின் ஊடாக 2012 ஆம் ஆண்டில் கடன் அறவீடு ரூபா 1731.243 மில்லியன் நிறைவு செய்யப்பட்டுள்ளது. 2012 வாடகையுடன் மொத்த அறவீடு ரூபா 1958.172 மில்லிய் ஆகும். 2012 ஆம் ஆண்டினுள் கடன் பகுப்பாய்வுக்காக மாவட்ட அலுவலகங்கள் விழிப்புணர்வூட்டப்பட்டதோடு அதனூடாக இறந்த கடன்பட்டோர், பிரதேசத்தை விட்டுச் சென்ற கடன்பட்டோர், வலது குறைந்த நீண்டகால சுகயீனம் மற்றும் இயற்கை அனர்த்தம் (சுனாமி) பற்றிய விபரங்களை பெற்றுக்கொள்ளல். இதற்கான ஆலோசனைகள் மற்றும் மாதிரிப் படிவங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

## தொழிற்பாட்டு பெறுபேறுகளின் மீளாய்வு

### கிராமிய வீடமைப்புக் கடன் அறவிடுதலைகளின் செயலாற்றுகை - 2012

ரூ. மில்.

| தொடர் இலக்கம் | மாவட்டம் | தொகை | | % |
|---|---|---|---|---|
| | | வரவு செலவு | அறவீடு | |
| 1 | முல்லைத்தீவு | 7.217 | 17.408 | 241 |
| 2 | கிளிநொச்சி | 8.750 | 19.654 | 225 |
| 3 | வவுனியா | 45.134 | 46.792 | 104 |
| 4 | திருகோணமலை | 39.045 | 40.018 | 102 |
| 5 | யாழ்ப்பாணம் | 58.888 | 58.538 | 99 |
| 6 | குருணாகல் | 109.006 | 99.417 | 91 |
| 7 | கேகாலை | 119.01 | 107.605 | 90 |
| 8 | அனுராதபுரம் | 100.513 | 79.448 | 79 |
| 9 | மாத்தளை | 64.116 | 50.442 | 79 |
| 10 | களுத்துறை | 125.275 | 93.417 | 75 |
| 11 | மன்னார் | 21.398 | 15.248 | 71 |
| 12 | புத்தளம் | 111.186 | 76.429 | 69 |
| 13 | மட்டக்களப்பு | 83.275 | 57.197 | 69 |
| 14 | மாத்தறை | 138.176 | 93.301 | 68 |
| 15 | இரத்தினபுரி | 70.819 | 46.260 | 65 |
| 16 | காலி | 144.685 | 92.660 | 64 |
| 17 | பதுளை | 145.162 | 89.335 | 62 |
| 18 | பொலனறுவை | 64.838 | 39.373 | 61 |
| 19 | அம்பாறை | 109.959 | 65.81 | 60 |
| 20 | கொழும்பு மாவட்ட அலுவலகம் | 227.853 | 125.848 | 55 |
| 21 | நுவரெலியா | 133.959 | 71.717 | 54 |
| 22 | கண்டி | 247.676 | 122.467 | 49 |
| 23 | அம்பாந்தோட்டை | 116.648 | 49.656 | 43 |
| 24 | மொனறாகல | 196.307 | 74.799 | 38 |
| 25 | கொழுமபு நகரம் (தெற்கு) | 15.599 | 5.813 | 37 |
| 26 | கம்பஹா | 263.087 | 88.605 | 34 |
| 27 | கொழும்பு நகரம் (வடக்கு) | 17.066 | 3.986 | 23 |
| | முழு மொத்தம் | 2784.647 | 1731.243 | 62 |




ஆண்டு

நகர வீடுகள், சாப்புகள் / தவணைத் தொகை வாடகை அறவிடுதல்
செயலாற்றுகை – 2012

| தொடர் இல. | மாவட்டம் | தொகை | | % | ரூபா மில். 2012.12.31 திகதிக்கு நிலுவை |
|---|---|---|---|---|---|
| | | வரவு செலவுத் திட்டம் | அறவிடுதல் | | |
| 1 | தலைமை அலுவலகம் | 20.409 | 16.817 | 82 | 4.385 |
| 2 | கொழும்பு நகரம் (வடக்கு) மாளிகாவத்தை | 36.250 | 21.962 | 60 | 41.917 |
| 3 | கொழும்பு நகரம் (தெற்கு) மனிங் டவுன் | 31.400 | 42.016 | 133.8 | 27.389 |
| 4 | கம்பஹா | 30.800 | 26.955 | 87 | 27.683 |
| 5 | கண்டி | 6.220 | 7.598 | 122 | 6.989 |
| 6 | மாத்தறை | 5.000 | 1.775 | 35 | 14.211 |
| 7 | கொழும்பு மாவட்டம் | 26.950 | 20.597 | 76 | 30.763 |
| 8 | கல்முனை/அம்பாறை வர்த்தக கட்டடம் | 2.575 | 1.133 | 44 | 1.707 |
| | மொத்தம் | 159.604 | 138.853 | | 155.044 |

### தகவல் மற்றும் பிரசாரப் பிரிவு

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வீடமைப்பு வேலைத்திட்டத்தில் பங்கேற்கின்ற வீட்டு உரிமையாளர்களின் தொடர்பூட்டல் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு தகவல் பிரசாரப் பிரிவு 2012 ஆம் ஆண்டில் பல்வேறு அச்சு மற்றும் மின்னியல் ஊடக நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது.

தகவல் பிரசாரப் பிரிவு பின்வரும் அலகுகளுடன் சேர்ந்துசெயற்படுகின்றது.

- தகவல் பிரசார அலகு
- செவன ஊடக சேவை
- அச்சிடல் அலகு

### தகவல், பிரசார அலகு

2012 ஆம் ஆண்டில் தகவல் பிரசார அலகு பின்வரும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது.

- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஜனசெவன வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்தித் தொழிற்பாட்டுக்கு ஏற்புடையதான ஊடக பிரசாரப் பணிகள் மற்றும் அச்சு, மின்னியல் ஊடகங்களின் ஊடாக பொது மக்களை விழிப்புணர்வூட்டல்.
- ஜனசெவன தேசிய வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்தித் தொழிற்பாட்டுக்கு ஏற்புடையதாக அதிகாரசபையினால் 25 மாவட்டங்களிலும் வீடமைப்புக் கருத்திட்டங்களின் நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, அதில் சில திறந்துவைக்கப்பட்டதோடு, அந்த அனைத்து வைபவங்களுக்கும் தேவையான பின்வரும் சேவைகளும் வசதிகளும் வழங்கப்பட்டன.

(i) விளம்பரம் மற்றும் வைபவங்களை திட்டமிடல்

(ii) அனைத்து வித கலை ஆக்கங்களின் அச்சிடல்கள் (Art Works)

(iii) பெயர்ப் பலகைகள், விளம்பரப் பலகைகள், மேடைகளின் பின்னணிப் பந்தல், பதாகைகள், கொடிகள், கொடிக் கம்பங்கள்

(iv) மேடைகள், பொதுசன மண்டபங்கள், கதிரைகள், ஒலி பெருக்கி இயந்திரங்கள், மல்டி மீடியா புரொஜெக்டர்கள், திரைகள்

(v) பத்திரிகை அறிவித்தல்கள் மற்றும் சுவரொட்டிகள்

(vi) அழைப்பிதழ்கள், உரிமை கையளிப்புப் பத்திரங்கள், உரிமைச் சான்றிதழ்கள், உறுதி கோப்பு அட்டைகள்

(vii) ஞாபகார்த்த விருதுகள் மற்றும் நினைவுப் பலகைகள்

- 2012 உலக குடியிருப்புகள் தின விழா கொழும்பு மாநகர சபைத் திடலில் 2012.10.01 ஆம் திகதி நடத்தப்பட்டது. அதன் கீழ் பின்வரும் பணிகள் ஆற்றப்பட்டன.

(i) பாடசாலை மாணவர்களுக்காக நாடளாவிய ரீதியில் ஓவியம், கட்டுரை மற்றும் சுவரொட்டிகள் போட்டிகளை ஒழுங்குசெய்தல்

(ii) பாடசாலை மாணவர்களின் ஓவியக் கண்காட்சியை கலா பவனவில் நடத்துதல்

(iii) ஓவியம், கட்டுரை மற்றும் சுவரொட்டி போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான விருதுகள் மற்றும் சான்றிதழ்களை தயாரித்தல்

(iv) உலக குடியிருப்பு தின பிரதான விழாவை ஒழுங்குசெய்தல்

(v) பிரதான வைபவத்தின் மேடை, மேடைப் பின்னணி, நுழைவுப் பந்தலை நிர்மாணித்தல் மற்றும் அலங்காரப் பணிகள்

- 2012 “தயட்ட கிருள” உள்ளிட்ட தேசிய மட்டத்திலான கண்காட்சிகளில் பங்கேற்றல் மற்றும் அதற்குத் தேவையான பிரசார நடவடிக்கைகளை நிறைவேற்றல்.
- மேலே குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றியதன் பின்னர் 2012 ஆம் ஆண்டினுள் தகவல் மற்றும் பிரசாரப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட பணத் தொகையில் ரூபா 11,872 மில்லியனை சேமிப்பதற்கு எமது பிரிவினால் இயலுமாயிருந்தது.

**செவன ஊடக அலகு**

- 2012 ஆம் ஆண்டில் செவன ஊடக சேவை நிர்மாண, பொறியில் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சு, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, இலங்கை காணி மீட்பு, அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், கட்டிடத் திணைக்களம் உள்ளிட்ட நிறுவனங்களின் பல்வேறு பத்திரிகை அறிவித்தல்கள் வெளியிடுதலை மேற்கொண்டது.
- 2012 ஆம் ஆண்டில் செவன ஊடகச் சேவையின் வருடாந்த மதிப்பிடப்பட்ட இலாபம் ரூபா 3.0 மில்லியனாகும். 2012 திசெம்பர் வரை பெறப்பட்ட வருமானம் ரூபா 12.47 மில்லியனாக இருந்ததோடு இலாபம் ரூபா 1.68 மில்லியனாகும்.
- செவன ஊடக சேவையின் அனைத்து வருவாய்களும் “தலைவர், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை” எனும் பெயரிலான தனியானதொரு கணக்குக்கு வரவு வைக்கப்படுவதோடு, இந் நிதியம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு பயன்படுத்தப்படுகின்றது.

**செவன ஊடக சேவை**

பத்திரிகை அறிவித்தல்கள்

2012 சனவரி முதல் திசெம்பர் வரை வருமானம் மற்றும் இலாபம்

| மாதம் | வருமானம் ரூபா | இலாபம் ரூபா |
|---|---|---|
| சனவரி | 2,780,057.53 | 377,910.42 |
| பெப்ருவரி | 509,646.60 | 68,485.50 |
| மார்ச் | 316,064.00 | 42,330.00 |
| ஏப்பிரல் | 624,383,20 | 83,562.75 |
| மே | 1,175,918.29 | 158,437.92 |
| ஜுன் | 1,224,630.32 | 165,414.00 |
| ஜுலை | 573,171.60 | 77,130.00 |
| ஆகஸ்ட் | 1,040,291.52 | 140,161.50 |
| செம்தெம்பர் | 580,417.60 | 77,172.00 |
| ஒக்றோபர் | 1,420,860.82 | 189,418.50 |
| நவெம்பர் | 824,436.40 | 110,715.00 |
| திசெம்பர் | 1,406,100.64 | 189,393.00 |
| மொத்தம் | 12,475,978.52 | 1,680,130.59 |

2012 ஆம் ஆணடுக்கான வருமான இலக்கு- ரூபா 3.0 மில்.

2012 சனவரி முதல் திசெம்பர் வரை வருமானம் மற்றும் இலாபம்




**அச்சிடல் அலகு**

- யப்பான் அரசாங்கத்திலிருந்து நன்கொடையாகக் கிடைத்த மேற்படி அச்சிடல் அலகு பலப்பிட்டி, பியகம மாதிரிக் கிராமத்தில் 1987 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. 1994 ஆம் ஆண்டில் இது மாளிகாவத்தை வீடமைப்புத் திட்டத்திற்கு எடுத்துவரப்பட்டது.

- 2002 ஜூன் மாதத்தில் மேற்படி அச்சிடல் அலகு தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைமை அலுவலகத்திற்கு இடமாற்றப்பட்டதோடு, தகவல், பிரசாரப் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்டது.

- தற்போது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அனைத்து அச்சிடல் நடவடிக்கைகளும் இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. ஆயினும், அனைத்து அச்சிடல் தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு மேற்படி அச்சிடல் அலகின் இயலளவு போதியதாயில்லை.

## தகவல் தொழில்நுட்பம்

அரச நிறுவனங்களின் செயற்பாடுகளை தகவல் தொழில்நுட்பத்துடன் இணைத்து பொதுமக்களுக்கு துல்லியமானதும் வினைத்திறன் மிக்கதுமான சேவையொன்றைப் பெற்றுக்கொடுக்கின்ற ஈ-அரசு எண்ணக்கருவுக்கு அமைவாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையும் தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பத்துடன் இணைத்து வருகின்றது. இப் பணியின் பொருட்டு எமது அதிகாரசபையின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு முழுமையான தொழில்நுட்ப மற்றும் கோட்பாட்டு ரீதியிலான அறிவை வழங்குகின்றது.

ஏற்கனவே தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைமை அலுவலகம் மற்றும் அனைத்து மாவட்ட அலுவலகங்களுக்கும் கனணிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்கி இணையச் சேவை மற்றும் மின்னஞ்சல் போன்ற தொடர்பூட்டல் முறைகளை அறிமுகப்படுத்தியுள்ளதன் ஊடாக அவ்வலுவலகங்களின் பணிகளை வினைத்திறன்மிக்க வகையில் பேணி வருவதற்கு வசதிகளை ஏற்பாடு செய்துள்ளது. முகாமைத்துவத்திற்குத் தேவையான தகவல்கள் மற்றும் தரவுகளை உடனடியாகப் பெற்றுக்கொள்வதற்கும் அவர்களுக்கு உயர் முகாமைத்துவத்தின் மூலம் மேற்கொள்கின்ற தீர்மானங்கள் மற்றும் ஆலோசனைகளை அறிவிப்பதற்கு 26 மாவட்ட அலுவலகங்களுக்கும் தலைமை அலுவலகத்திற்கும் இடையே சிறந்ததொரு இணைப்பாக்கம் தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக தொழில்நுட்பப் பிரிவின் மூலம் பின்வரும் சேவைகள் பேணிவரப்படுகின்றன.

### 01. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் இணையத் தளத்தை அபிவிருத்தி செய்து இற்றைப்படுத்தல்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் இணையத் தளம் என்பது அதன் தொலைநோக்கு மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக ஊழியர்களுக்கும், இலங்கை மக்களுக்கும் அதேபோன்று வீடமைப்பு அபிவிருத்தி தொடர்பில் ஆர்வம் காட்டுகின்ற உலக மக்களுக்கும் சிறந்ததொரு புரிந்துணர்வை வழங்குகின்றதும் கனணித் துறையின் மூலம் செயற்படுத்தப்படுகின்றதுமான பலம் பொருந்தியதொரு ஊடகமாகும்.

கடந்த ஆண்டினுள் கனணித் துறையின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற இணையத் தளத்தின் மூலம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைமை அலுவலகம், மாவட்ட அலுவலகங்கள் மற்றும் உப அலுவலகங்கள் பற்றிய தகவல்கள், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சேவைகள் பற்றிய தகவல்கள், வீடமைப்புக் கடன் நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய தகவல்கள், வீடமைப்புக் கடன்கள் கிடைக்க வேண்டிய பிரசைகள் பற்றிய தகவல்கள், நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற வீடமைப்புத் திட்டங்கள் பற்றிய தகவல்கள், விற்பனைக்குத் தயாராயுள்ள வீடுகள் பற்றிய தகவல்கள் மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் செய்திகள் உள்ளடங்கிய மிக முக்கியமான தகவல்களை சிங்களம் மற்றும் ஆங்கில மொழி மூலம் ஒழுங்கான விதத்தில் நாளாந்தம் இற்றைப்படுத்தி வழங்குவதற்குத் தேவையான பணிகள் கனணிப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளமையைக் குறிப்பிடலாம்.

எதிர்வரும் ஆண்டினுள் மேற்படி இணையத் தளத்தின் ஊடாக வழங்கப்படும் சேவைகளை விரிவாக்கவும், அதேபோன்று தமிழ் மொழி மூலம் அத்தகவல்களை வெளியிடுவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

### 02. கனணிகள் மற்றும் வன்பொருட்களின் பராமரிப்பு

அதிகார சபையின் தலைமை அலுவலகத்திலும் மாவட்ட அலுவலகங்களிலும் கனணி வலையமைப்பாக்கல் அண்ணளவாக 80% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமாக 252 கனணிகளும், 100 அச்சு இயந்திரங்களும் 150 UPS களும் தற்போது பயன்பாட்டில் உள்ளன. உத்தரவாதக் காலத்தைக் கடந்துள்ள கனணி இயந்திரங்கள், அச்சு இயந்திரங்கள், UPS கள் மற்றும் ஏனைய துணைப் பாகங்கள் மற்றும் வலையமைப்பாக்கல் தவறுகளைத் திருத்துதல் தொழில்நுட்பப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுவதோடு, உத்தரவாதக் காலத்தைத் தாண்டாத கனணிகள் மற்றும் உபகரணங்களைப் பராமரிக்கும் பொருட்டு ஏற்புடைய நிறுவனத்துடன் இணைப்பாக்கம் செய்யப்படுகின்றது.

இவற்றைத் தவிர கனணிகளின் தொழிற்பாட்டு முறைமையினதும் மென்பொருள்களினதும் பராமரிப்பு மற்றும் வைரஸ்களிலிருந்து கனணிகளையும் தரவுகளையும் பாதுகாப்பதற்கான வசதிகள் இப் பிரிவின் மூலம் வழங்கப்படுவதோடு, இச் சேவைகளை வெளிவாரி நிறுவனங்களிலிருந்து பெறுவதாயிருப்பின் அதற்காக ஏற்க நேரிடுகின்ற பெரும் செலவைக் குறைப்பதற்கு தகவல் தொழில்நுட்பப் பிரிவின் மூலம் வழங்கப்படுகின்ற சேவைகளின் காரணமாக இயலுமாயுள்ளது.

03. புதிய கணனி நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல் மற்றும் பராமரித்தல்

தலைமை அலுவலகத்தின் இடர் கடன் நிகழ்ச்சித்திட்டம், மேலதிக நேரக் கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம், தலைவரின் அலுவலகத்திற்குரிய பொதுமக்களின் வேண்டுகோள்கள் பற்றிய தகவல்களை கணனிமயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம், வட்டியின்றி ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற சிறு கடன்கள், அதிகாரசபைக்குச் சொந்தமான ஆதனங்களின் முகாமைத்துவத்தை ஒழுங்கான விதத்தில் பேணிவரும் பொருட்டு செயற்படுத்தப்பட்ட காணித் தொழிற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான கணனி செய்நிரல்கள் உருவாக்கப்பட்டு அதன் மூலம் அதிகாரசபைக்கு சொந்தமான ஒட்டுமொத்த வீடுகள் மற்றும் காணிகளின் தரவுகளை உட்படுத்தி துல்லியமான தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு கணனி செய்நிரல்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

சந்தைப்படுத்தல் பிரிவுக்குச் சொந்தமான முன்கூட்டிய விற்பனை வீடமைப்புத் திட்டங்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியவாறும் அனைத்துத் தரவுகளையும் உட்புகுத்தக் கூடியவாறும் தயாரிக்கப்பட்டுள்ள கணனி செய்நிரலின் மூலம் விண்ணப்பதாரர்களின் அனைத்து விபரங்களையும் கணனிமயப்படுத்தி தேவையான தெரிவு செய்தல்களைத் துரிதமாக மேற்கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

செவன ஊடகப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற அறிவித்தல்களை வெளியிடுதலுடன் தொடர்புடைய கணனி செய்நிரலை உருவாக்குதல் மற்றும் அதன் பணப் பெறுகைகளை கணக்குப் பிரிவுடன் இணைந்து பேணிவருவதற்கு இயலுமானவாறு இச்செய்நிரல் உருவாக்கப்பட்டுள்ளது.

மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்திற்குத் தேவையான அனைத்துத் தரவுகளையும் மாவட்ட அலுவலகங்களிலிருந்து பெற்று தேவைக்கு ஏற்ப அந்தந்தத் தரவுகளைப் பயன்படுத்தி முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அதன் பொருட்டு பல்வேறு துறைகளிலும் உள்ள தகவல் தொழில்நுட்பச் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களை நெறிப்படுத்தல் மற்றும் தேவையான இணைப்பாக்க நடவடிக்கைகள் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

04. வீடமைப்புக் கடன் கணனி செய்நிரல்

வடக்கு கிழக்கு உள்ளடங்குகின்றவாறு அனைத்து மாவட்ட அலுவலகங்களின் மூலமும் 1984 முதல் வழங்கப்பட்டுள்ள வீடமைப்புக் கடன்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற உபஹார கடன்கள் பற்றிய தகவல்களை கணனிமயப்படுத்தலும் தகவல்களை இற்றைப்படுத்தும் பணிகளும் நாளாந்தம் மேற்கொள்ளப்படுகின்றது.

**கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணங்காமை**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கணக்கீட்டுக் கொள்கை இல. 8.1.2 இன் பிரகாரம், நிர்மாணிக்கப்பட்ட வீட்டுப் பெறுமதி, இருப்பிற்கு மாற்றப்படுகையில் பொதுச் செயற்பாட்டுச் செலவினத்தைப் போன்று ஒப்பந்தக் கிரயத்தில் இலாப சதவீதத்துடன் வீட்டு இருப்புக் கணக்கிற்கு மாற்றப்பட வேண்டிய போதிலும் ஒப்பந்தக் கிரயம் மாத்திரம் இருப்புக் கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் வீட்டு விற்பனையின் விற்பனை விலை தீர்மானிக்கப்படுகையில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியைப் போன்று பொதுச் செயற்பாட்டுச் செலவினம் மற்றும் இலாபப் பங்காக நிர்மாணிப்புக் கிரயத்தில் 30 சதவீதம் விற்பனை விலை கணிப்பிடப்படுகையில் சேர்க்கப்படுவதால் கணிப்பிடப்படும் வீட்டு விற்பனை இலாபம் மிகை மதிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) கணக்குக் குறிப்பு இல 10 இன் பிரகாரம், இழப்பீடு செலுத்தப்படாது வீடமைப்பு நிதியத்திற்காக காணி சுவீகரிக்கப்படுகையில் அக் காணியில் சந்தைப் பெறுமதி மற்றும் அதற்காக ஏற்கப்பட்ட செலவினத்தொகை காணிக் சுவீகரிப்பு ஒதுக்கற் கணக்கிற்கு உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெரும்பாலான வீடமைப்பு திட்டங்களில் தற்போதும் எஞ்சியுள்ள காணித்துண்டுகள் மற்றும் வீடமைப்பு திட்ட முறைகளுக்காகப் சுவீகரிக்கப்பட்ட∴ பெறப்பட்டிருந்த 943 ஹெக்டேயர் காணி மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது வேலை பூர்த்திசெய்யப்பட்டிருந்த 02 செயற்திட்டங்களுக்கு உரிய கிரயமான ரூபா 20.79 மில்லியன் பெறுமதி தொடர்ந்தும் நடைபெறும் வேலைக் கணக்கில் முன்கொண்டு செல்லப்பட்டிருந்தது.

(இ) வீட்டு நிர்மாணிப்புக் கிரயத்தை மேற்கொள்வதற்காக கால்நடை வள அதிகாரசபையின் 2000 ஆம் ஆண்டின் போது பெறப்பட்ட ரூபா 10.84 மில்லியன் தொகை உரிய செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்டிராமையால் வைப்புக் கணக்கில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் ஒதுக்க மீதியாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஒப்பந்தக்காரர்கள் 06 பேருக்கு உரிய பிடித்து வைத்தல் பணம் ரூபா 1.92 மில்லியன் தொகை தீர்க்கப்படுவது உரிய பொறுப்பிலிருந்து கழிக்கப்பட்டு காண்பிக்கப்படுவதற்குப் பதிலாக வீட்டு தீர்மானத்திட்டம் பராமரிப்புச் செலவினமாக கணக்கிடப்பட்டிருந்தது.

### 2.3.3 பொருத்தமற்ற வெளிப்படுத்தல்கள்

பின்வரும் பொருத்தமற்ற வெளிப்படுத்தல்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) குத்தகை வீடமைப்புத்திட்டத்தினதும் நகர வீடமைப்புத் திட்டத்தினதும் உறுதி வழங்கிய வீடுகளின் பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்குகளிலிருந்து அகற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது காணி கட்டிடக் கணக்கின் கீழ் 2006 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை ஒரே மீதி கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு காணி விற்பனை வைப்பாகவும் வீட்டு விற்பனை வைப்பாகவும் முறையே ரூபா 1,101.43 மில்லியன் தொகையும் ரூபா 141.40 மில்லியன் தொகையும் வைப்புகளில் காணப்பட்டதுடன் விற்பனைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்த காணிகளின் விற்பனைப் பெறுமதியும் வீடுகளின் விற்பனைப் பெறுமதியும் வைப்புக் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டு வருமானமாக எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையிலிருந்து அறவிடப்பட வேண்டிய முற்பணப் பெறுமதியாக ரூபா 6.59 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதும் அப் பெறுமதி கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் மொத்தக் கடன்பட்டோர் மீதி ரூபா 4,104.04 மில்லியன் தொகையால் 05 ஆண்டுகளுக்கு மேலான காலம் முதல் முன்கொண்டுவரப்பட்ட பெறவேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,396.81 மில்லியன் தொகையானதுடன் இது மொத்தக் கடன்பட்டோரின் பெறுமதியில் 58 சதவீதமாகக் காணப்பட்டது. இக் கடன் தொகை அறவிடப்படுவதற்காக அதிகாரசபையால் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணம், களஞ்சிய முற்பணம் மற்றும் ஏனைய முற்பணங்களின் கூட்டுத்தொகையான ரூபா 153.67 மில்லியன் தொகை 02 ஆண்டுகளுக்கு மேலான காலமாக முன்கொண்டுவரப்படும் ரூபா 80.24 மில்லியன் தொகை தீர்க்கப்படுவதற்கு அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரசபை ஊழியர்களும் உத்தியோகத்தர்களும் வேறு அரச நிறுவகங்களில் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவதற்காக அதிகாரசபையால் சம்பளம் வழங்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், உரிய நிறுவகங்களிலிருந்து அதிகாரசபைக்கு 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 72.60 மில்லியன் அறவிட வேண்டியதாகக் காணப்பட்டது. இதில் ரூபா 19.20 மில்லியன் தொகை 02 ஆண்டுகளுக்கு மேலான காலம் கடந்திருந்ததுடன் ரூபா 43.12 மில்லியன் 05 ஆண்டுகளுக்கும் மேலான காலம் முதல் அறவிடப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 1260.54 மில்லியன் தொகையானதுடன் இதில் 02 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடையிலான கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 24.98 மில்லியன் தொகையாகியது. 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன்கொடுத்தோரின் பெறுமதியான ரூபா 964.90 மில்லியன் தொகையும் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) வேறு 4 நிறுவகனங்களில் இருந்து செயற்திட்டத்திற்காகப் பெறப்பட்டிருந்த கடனுக்காக செலுத்தப்பட வேண்டிய நிலுவைக் கடன் தவணை ரூபா 713.16 தொகையும் நிலுவையாகக் காணப்பட்ட கடன் வட்டியுமான ரூபா 478.66 மில்லியன் நீண்டகாலமாக தீர்க்கப்படாதிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பிடித்துவைக்கப்பட்ட பணத் தொகையான ரூபா 106.90 மில்லியன் தொகையானதுடன் இதில் ரூபா 84.62 மில்லியன் தொகை 02 ஆண்டுகள் அல்லது இதற்கு மேலான காலம் கடந்திருந்த போதிலும் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய காணி நட்டஈட்டுப் பெறுமதி ரூபா 153.34 மில்லியன் தொகையானதுடன் அதிகாரசபை உரித்தைப் பொறுப்பேற்ற நாளுக்கு காலப்பகுப்பாய்வைக் கருத்திற்கொள்கையில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் நட்டஈட்டுக் கொடுப்பனவு தீர்க்கப்பட்டிருக்கவில்லை. காணிக்காக நட்டஈட்டுக் கொடுப்பனவு செலுத்தி முடிக்கப்படுவதற்கு அதிகாரசபைக்கு கிடைக்கப்பெற்ற திறைசேரி நிதி ஏற்பாடு போதாதிருந்தமையால் நட்டஈட்டுக் கொடுப்பனவு தீர்க்கப்படுவதற்கான காலம் கடப்பதாக பொது முகாமையாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஏ) வீடமைப்பு செயற்திட்டங்களின் நிர்மாணிப்புகள் பூர்த்திசெய்யப்பட்டு உரிய செலவினங்கள் கணக்கிடப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டங்கள் வெற்றிகரமாக பூர்த்திசெய்யப்பட்டமைக்கு பொறியியலாளரின் இறுதி அறிக்கை பெறப்பட்டு பிடித்து வைத்தல் தொகை தீர்க்கப்பட்டிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. இவ்வாறு பிடித்துவைக்கப்பட்ட தொகை ரூபா 4.62 மில்லியன் தொகை 02 ஆண்டுகள் முதல் 16 ஆண்டுகள் வரையான காலவீச்சில் தீர்க்கப்படாது காணப்பட்டது.

### 2.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங் களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு வருமான அதிகாரச்சட்டத்தின் xiv ஆம் அத்தியாயத்தின் 114 ஆம் பிரிவு | உழைக்கும் போதே செலுத்தும் வரி உரிய உத்தியோகத்தர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்டு செலுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாது அதிகாரசபையால் செலுத்தப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் போது ரூபா 158,897 தொகை இதற்காக செலவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) | நிதிப் பிரமாணம் நி.பி. 570 | வைப்புச் செய்யப்பட்ட நாள் முதல் 02 ஆண்டு காலம் கடந்த கோரப்படாத ரூபா 150 மில்லியன் தொகையான மீளச் செலுத்த வேண்டிய வைப்பு வருமானத்திற்கு சீராக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | பொது நிர்வாகச் சுற்றறிக்கை 2007 மே 11 ஆம் திகதிய பொது நிர்வாகச் நிர்வாகச் சுற்றறிக்கை இல. 9/2007(02) ஆம் பந்தி | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் அரசாங்க மற்றும் கூட்டுத்தாபன சேவையிலிருந்து ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படுகையில் இறுதியாகப் பெறப்பட்ட சம்பளத்தில் 50 சதவீதம் அல்லது உரிய மாதாந்தக் கொடுப்பனவு எனும் இரண்டில் கூடிய சம்பளத்தைச் செலுத்த வேண்டிய போதிலும், மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படும் ஓய்வுபெற்ற 31 உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டின் போது சம்பளங்கள் மற்றும் படிப்பணமாக ரூபா 2,683,430 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2007 ஒக்டோபர் 17 ஆம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 9/2007 (III)(iii) ஆம் பந்தி | உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வு பெற்றதன் பின்னர் ஒப்பந்த அடிப்படையில் 12 மாதங்களுக்கு மேலான காலமாக சேவையில் ஈடுபடுத்தப்படுவதற்காக உரிய நிறுவகத்தால் மேற்கொள்ளப்பட்ட கோரலில் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் அப் பதவிக்கு உரிய நியமன அதிகாரியால் அவ்வெற்றிடம் நிரந்தர சேவையில் உள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து குறித்த தினத்திற்கு நிரப்பப்பட முடியாதென எழுத்து மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தவிர்ந்த அவ் உத்தியோகத்தர்கள் மீள சேவையில் ஈடுபடுத்தப்படலாகாத போதிலும் அதிகாரசபையால் இதற்கு முரணான வகையில் மீளாய்வாண்டின் போது 110 ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களுக்கு 13 மாதங்கள் முதல் 36 மாதங்கள் வரையான காலப்பகுதியில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். |
| (ஈ) | தாபனவிதிக் கோவையின் xii ஆம் அத்தியாயத்தின் 22 ஆம் பந்தி | தாபனவிதிக் கோவையின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக 57 வயதைப் பூர்த்திசெய்து ஓய்வுபெற்ற எனினும் மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் சேவைக்குச் சேர்க்கப்பட்டிருந்த 35 ஊழியர்களின் நியமனம் சேவை நீடிப்பாக திருத்தப்படுகையில் அவர்கள் ஓய்வுபெற்று சேவைக்கு சமூகமளித்திராது 02 நாட்கள் முதல் 15 நாட்கள் வரையான அக்காலப்பகுதி சம்பளமற்ற லீவாகக் கருதப்பட்டு மீண்டும் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| (உ) | 2004 சனவரி 08 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இல. 21 | பொது முயற்சிகளின் வளங்கள், அமைச்சால் பயன்படுத்தப்படலாகாது என சுட்டிக் காட்டப்பட்டுள்ள போதும் ரூபா 6,554,919 தொகையான அமைச்சுச் செலவினங்கள், அதிகாரசபையால் மீளாய்வாண்டின் போது ஏற்கப்பட்டிருந்தது. |
| (ஊ) | 1998 பெப்ரவரி 11 ஆம் திகதிய உள்ளகச் சுற்றறிக்கை இல. 98 இன் 04 ஆம் பிரிவு | மாளிகாவத்தை மாவட்டச் செயலகத்தில் 2010 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான குத்தகை வீட்டை விடுவித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது தற்போதை மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்ளாது 1998 இன் மதிப்பீட்டில் ரூபா 3,724,000 பெறுமதியான 8 குத்தகை வீடுகள் விடுவிக்கப்பட்டிருந்தன. |
| (எ) | 2002 சனவரி 16 ஆம் திகதிய உள்ளகச் சுற்றறிக்கை இல. 2002/தே.கல/01 | மாளிகாவத்தை மாவட்டச் செயலகத்தில் குத்தகை வீடுகளை விடுவிக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது குடியிருந்த காலத்திற்காக கழிவுச் சலுகை வழங்கப்படுகையில் 75 சதவீத கழிவிற்கு உரித்துடைய நபர்களுக்கு 95 சதவீத கழிவு வழங்கப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவு ரூபா 303,405,460 தொகையான பற்றாக்குறையாக ஏற்பட்டிருந்ததுடன் இதற்கொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 518,293,152 ஆனமையால் பற்றாக்குறை ரூபா 214,887,692 ஆல் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டின் போது கூட்டாதன ஆதன திருத்தவேலைகளுக்காக வழங்கப்பட்ட திறைசேரி மானியம் நிதிசார் விளைவுகளின் வளர்ச்சிக்காக நேரடியாகத் தாக்கமளித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

கடந்த 05 ஆண்டுகளின் போது அதிகாரசபை தொடர்ந்து பாரியளவில் நட்டமடைந்துள்ளது. இந் நிலையில் அதிகாரசபையின் தொடர்ந்து நிலைத்திருத்தல் திறைசேரி மானியத்தில் தங்கியுள்ளமை அவதானிக்கப்பட்டது.

| | 2012 | 2011 | 2010 | 2009 | 2008 |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| வருமானம் | 1,431.00 | 786.28 | 455.71 | 538.85 | 511.16 |
| செலவினம் | 1,734.40 | 1,304.57 | 1,122.44 | 1,041.51 | 1,157.90 |
| அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் பற்றாக்குறை | (303.40) | (518.29) | (666.73) | (502.66) | (646.74) |

(ஆ) மீளாய்வாண்டு தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(ை) மீளாய்வாண்டிற்கான தேறிய நட்டம் மொத்த வருமானத்தின் சதவீதமாக மறை 21.17 ஆகக் காணப்பட்டது.

(ை) மீளாய்வாண்டிற்கான வாடகை வருமானம் 14.48 சதவீதத்தால் குறைவடைந்திருந்து.

(ை) வீடு மற்றும் விற்பனை இலாபம் 76 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ை) கூட்டு ஆதனங்களின் ஆதனங்களைப் பழுதுபார்ப்பதற்காக திறைசேரியில் இருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 228.67 மில்லியனில் இருந்தான வருமானம் 16 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(எ) அதிகாரசபையால் வங்கி கடனுக்கான வட்க் கொடுப்பனவில் நிதிச் செலவினம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 344 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(எ) 100 வீடுகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கும் செலவினம் மற்றும் விழா செலவினங்கள் அதிகரித்ததன் காரணமாக நேரில் செலவினம் 144 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 3.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் போது அதிகாரசபையின் நடைமுறை விகிதம் 1:0.74 ஆகவும் திரவச் சொத்துக்கள் விகிதம் 1:0.72 ஆகவும் காணப்பட்டது. ஆகையால் திரவ விகிதம் கடந்த ஆண்டிற்கு ஒப்பாக வீழ்ச்சியடைந்திருந்ததுடன் இது அதிகாரசபையின் நிதி நிலைமை வீழ்ச்சியடைவதற்கு நேரடியாகத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சனசெவன பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 1000 காணித்துண்டுகள் ஒப்படைக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் 152 காணித்துண்டுகள் மாத்திரமே ஒப்படைக்கப்பட்டிருந்தன. இது திட்டமிடப்பட்ட அளவின் 15 சதவீதமாகும்.

(ஆ) ஆண்டின் போது எதிர்பார்க்கப்பட்ட திறைசேரி மானியம் ரூபா 1336.6 மில்லியன் தொகையானதுடன் கிடைத்த மானியத்தின் பெறுமதி ரூபா 957.4 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. இதன் பிரகாரம், கிடைக்கப்பெற்ற மானியத்தின் பெறுமதி ரூபா 379.2 மில்லியனால் குறைவடைந்திருந்ததுடன் இந்த அளவு இலக்கிடப்பட்ட தொகையின் 28 சதவீதமாகக் காணப்பட்டது.

(இ) "சகஸ்ர லங்கா" (முதலீட்டுச் செயற்திட்டம், அரசாங்க மற்றும் தனியார் பங்களிப்பு வீடுகள்) செயற்திட்டத்தின் கீழ் 10 வீடமைப்புத் திட்டங்களில் ரூபா 1,820 மில்லியன் பெறுமதியான 669 வீடுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டங்களின் எண்ணிக்கை 03 ஆகக் காணப்பட்டதுடன் வேலை முடிவடைந்த வீட்டு அலகுகளின் எண்ணிக்கை 05 ஆகும். இதன் பிரகாரம், வீட்டு நிர்மாணிப்பு 0.8 சதவீதமான குறைவான சதவீதத்தில் காணப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டின் போது "ஜனசெவன விரு" கிராம வீடமைப்புச் செயற்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 40 சதவீதமாகவும் 21 சதவீதமுமான குறைவான பெறுமானத்தைக் கொண்டிருந்தது.

## 4.2 முகாமைத்துவத் திறமையீனங்கள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

### (அ) காணி கையேற்பு செயற்பாட்டின் நலிவுகள்

(ட) நட்டஈடு செலுத்தப்பட வேண்டிய காணிகள் கையேற்கும் அதிகாரச்சட்டத்தின் 38(அ) பிரிவின் பிரகாரம், அதிகாரசபையால் பெரும்பாலான காணிகளின் உரித்துப் பொறுப்பேற்கப்பட்டிருந்த போதிலும் எழுந்துள்ள சிக்கல் நிலை நிலை காரணமாக இக் காணியின் உரித்தைப் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம், உரிய காணிகள் கையேற்கப்படுவது தொடர்பில் பல்வேறு தரப்பினரால் அதிகாரசபைக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்தது. இவ் வழக்கு நடவடிக்கைகளுக்காக ஏறத்தாழ 10 முதல் 35 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்ததுடன் இந் நிலையில் உரிய காணி அதிகாரசபைக்கு பொறுப்பேற்கப்படுவதில் நீண்ட காலம் கடந்திருந்தது. அதிகாரசபையால் முன்னர் உரித்து பொறுப்பேற்கப்பட்டிருந்த போதிலும் இத்தகைய நிலையில் உண்மையாக காணியைப் பொறுப்பேற்பதற்கு நீண்ட காலம் எடுக்கப்பட்டிருந்ததுடன் காணிக்குரிய நட்டஈடு மீதான வட்டித் தொகை செலுத்துகையில் அமுலாக்கற் திகதி காணி கையேற்கப்பட்ட திகதிக்குப் பதிலாக காணியின் உரித்து ஒப்படைக்கப்பட்ட திகதியாகக் கருதி வட்டித் தொகை கணிப்பிடப்படுவதிலிருந்து நட்டஈட்டுத்தொகைக்கு மேலதிகமாக வட்டித் தொகை செலுத்தப்படுவதற்கு அதிகாரசபைக்கு நேர்ந்தது.

(டை) 1979 - 2010 காலப்பகுதியின் போது கையேற்கப்பட்ட காணிகளுக்கு உரிய நட்டஈட்டுத் தொகை உரிய காலத்தில் செலுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராத காரணத்தால் தனியார் காணிகளுக்காக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டிய நட்டஈட்டுப் பெறுமதி ரூபா 122.72 மில்லியன் தொகையானதுடன் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் மூலம் கையேற்கப்பட்ட காணிகளுக்காக ரூபா 33.60 மில்லியன் தொகை மேலும் செலுத்தப்பட வேண்டியதாகக் காணப்பட்டது.

(ஆ) டாலி வீதியில் உள்ள 01 ஏக்கர் 26.5 பேர்ச் காணி தனியார் பிரிவினரின் பங்கேற்புடனான ஒன்றிணைந்த செயற்திட்டத்தின் மூலம் மறுசீரமைப்புச் செயற்திட்டத்திற்காக சிறந்த முகாமைத்துவ நடைமுறை பின்பற்றப்பட்டிராமையால் ரூபா 1,000 மில்லியன் அளவிலான மதிப்பீட்டு நட்டம் அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக கடந்த கணக்காய்வு அறிக்கையின் மூலமும் சுட்டிக்காட்டப்பட்டது. சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனை பெறப்பட்டு 03 மாத காலத்திற்குள் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு செயற்திட்டம் மீள ஆரம்பிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அதிகாரசபையின் பொது முகாமையாளர் 2012 பெப்ரவரி 13 ஆம் திகதி அறிவித்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வீடமைப்புத் திட்ட நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் உரிய உள்ளூராட்சி நிறுவனங்களின் மூலம் வீட்டுத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாது நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 26 வீட்டுத்திட்டங்களுக்கான 1,986 வீடுகளிற்குரிய உறுதிப்பாட்டுச் சான்றிதழ்கள் பெறப்படுவதில் சிக்கல்கள் ஏற்பட்டிருந்த காரணத்தால் உரிய வீடுகள், வீட்டு உரிமையாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டு முகாமைத்துவ கூட்டுத்தாபனங்கள் ஸ்தாபிக்கப்படுவதற்கு முடியாதிருந்தது. அவ் வீடமைப்புத்திட்டங்களின் பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகளுக்காக ரூபா 253.35 மில்லியன் தொகை அதிகாரசபையால் மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) நாட்டின் 19 மாவட்டங்களின் அதிகாரசபைக்குரிய ஆதனங்களின் அத்துமீறிய குடியிருப்பாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணிப்புகளுடனான 229.4 ஏக்கர் காணி மீளாய்வாண்டின் இறுதியில் இனங்காணப்பட்டிருந்ததுடன் அந்த அளவில் 10 பேர்ச் இலும் கூடிய அளவு பயன்பெறும் காணியின் அளவு 187.7 ஏக்கராகக் காணப்பட்டது. 10 பேர்ச்சிற்குக் குறைவான பிரமாணப்படுத்தல் கூடிய காணியின் அளவு 22.6 ஏக்கராக இருந்ததுடன் 19.07 ஏக்கர் பயிர்ச் செய்கைக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் இவ் அத்துமீறிய குடியிருப்பாளர்களை வெளியேற்ற உரிய ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுப்பதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. எவ்வாறாயினும், அதிகாரசபையால் 06 பேர்சஸ்களுக்கு குறைவான காணித்துண்டுகள் அத்துமீறி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களின் போது அந்த அளவிற்கு அண்மித்த காணிகளாக விற்பனை செய்யப்படுவதற்கு பயிர் செய்யப்பட்டுள்ள காணிகளில் வீடுகளை நிர்மாணிப்பதற்கு ஏற்ற காணிகள் இனங்காணப்பட்டு அவற்றை வீடுகளை நிர்மாணிப்பதற்காகவும் அவற்றிற்கு பொருத்தமற்ற காணிகளை குத்தகை அடிப்படையில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்காக வழங்கப்படுவதற்கும் தேவையான மெய்மையாய்வு நடவடிக்கைகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதாக பொது முகாமையாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(உ) குருநாகல் மாவட்டத்தின் 526 குடும்பங்களுக்காக சூரிய சக்தி முறைமையைப் பெற்றுக்கொள்வதற்காக 1989 - 1994 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்டிருந்த கடன் தொகையின் மீதி 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,124,731 ஆகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது எவ்வித தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. இக் கடனை அறவிடுவதற்காக குறிப்பான நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அதிகாரசபைக்கு சொந்தமான லிபர்டி பிளாஸா சுற்றுலா விடுதி ஓவீடீசீ நிறுவகத்திற்கு விற்பனை செய்யப்படுகையில் அரசாங்க மதிப்பீட்டாளரின் பெறுமதி பெறப்பட்டிராததுடன் அதிகாரசபை மதிப்பீட்டாளரின் மதிப்பீடு மாத்திரம் பெறப்பட்டிருந்தது. எனினும், இவ் ஆதனத்திற்காக பின்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட அரசாங்க மதிப்பீட்டாளரின் மதிப்பீடு ரூபா 11,520,000 ஆன போதிலும் ஓவீடீசீ நிறுவகத்தினால் செலுத்தப்பட்ட தொகை ரூபா 9,000,000 ஆகக் காணப்பட்டது. இது தொடர்பாக 2012 நவம்பர் 23 ஆம் திகதி நடாத்தப்பட்ட பொது முயற்சிகள் குழு கலந்துரையாடல்களுக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அச் செயற்பாட்டுக் குழுக் கூட்ட கட்டளைகளின் பிரகாரம் முறையற்ற கொடுக்கல்வாங்கலுக்குத் தொடர்பான பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2013 ஒக்டோபர் 31 இல் உள்ளவாறும் அக் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) நாராஹென்பிட்டி கிரிமண்டல மாவத்தையில் உள்ள அதிகாரசபைக்கு சொந்தமான காணி அரசாங்க மதிப்பீடின்றி ரூபா 75 மில்லியன் தொகைக்கு எகோ வீடமைப்பு செயற்திட்டத்திற்கு 2003 ஆம் ஆண்டின் போது விற்பனை செய்யப்பட்டிருந்தது. இதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிராததுடன் அரசாங்க பிரதம மதிப்பீட்டாளரின் 2007 பெப்ரவரி 10 ஆம் திகதிய மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 121.5 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. இது தொடர்பாக ஆய்வு நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதியிலும் நிறைவேறியிருக்கவில்லை.

(ஏ) கண்டி மாநகரசபைக்குரிய காணியில் அதிகாரசபையால் நிர்மாணிக்கப்பட்டிருந்த 32 வீடுகளைக் கொண்ட மஹையாவ வீடமைப்புச் செயற்திட்டத்திற்காக ரூபா 20 மில்லியன் தொகையான நிர்மாணிப்புக் கிரயம் உறப்பட்டிருந்த போதிலும் இதற்குரித்தான நிதி கண்டி மாநகரசபையிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டு திறமையீனங்கள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

### (அ) "ஜனசெவன" உதவிக் கடன் நிகழ்ச்சித்திட்டம்

மீளாய்வாண்டின் போது அதிகாரசபையால் 04 அரசாங்க வங்கிகளின் கீழ் 10 சதவீத வட்டி வீதத்தில் கடன் பெறப்பட்டு உதவிக் கடன் நிகழ்ச்சித்திட்டத்திற்காக கடன் தொகை விடுவிக்கப்பட்டிருந்தது.

மாவட்ட அலுவலகத்தில் "ஜனசெவன" உதவிக் கடன் விடுவிக்கப்படுகையில் நிலவும் நலிவான கட்டுப்பாட்டினால் அவதானிக்கப்பட்டதுடன் இதன் காரணமாக எதிர்காலத்தில் இக் கடன் தொகை மீள அறவிடப்படும் இடர் நிலை காண்பிக்கப்பட்டது.

உதாரணம் - அங்கீகரிக்கப்பட்ட கடன் எல்லைக்கும் மேலாக கடன் வழங்கப்பட்டிருந்தது.

- கடன் கோவை நாளதுவரையாக்கப்படல், களஞ்சியப்படுத்தல் மற்றும் பயன்பாடு முறைப்படி மேற்கொள்ளப்பட்டிராமை.
- கடன் கணக்குகள் கணனிமயமாக்கலிலான நலிவுகள்
- கடனாளிகளினதும் பிணையாளிகளினதும் போதிய வருமானம்/ விபரம் இன்றி கடன் வழங்கல்
- கடன் பிணைகளில் இரு தரப்பு கையொப்பமிடப்படாது கடன் வழங்கப்படல்.

(ஆ) 93 தோட்ட வீடமைப்பு செயற்திட்டத்திற்குரித்தான ரூபா 6,195,522 பெறுமதியான வீடுகளுக்காக 2005 சனவரி 19 ஆம் திகதி ரூபா 1,000,000 முற்பணத்தொகை பெறப்பட்டிருந்த போதிலும் இதற்கான விற்பனை உடன்படிக்கையொன்று ஏற்படுத்தப்பட்டு எஞ்சிய பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரசபைக்கு உரித்தான ஹோமகம சல்தர, தியவன்னா கார்டின்ஸ் போன்ற வீடமைப்பு திட்டங்களின் 03 வீடுகள், வீடுகளை அகற்றும் முறைமைகளுக்கு அப்பால் எவ்வித உடன்படிக்கையும் இன்றி மூன்று நபர்களுக்கு எவ்வித முற்பணத் தொகையும் பெற்றுக்கொள்ளப்படாது குடியிருப்பிற்காக விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) கண்டி மாவட்ட அலுவலகத்தால் கலஹா வீடமைப்புத் திட்டத்திற்காக 1998 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை ரூபா 2.67 மில்லியன் தொகை செலவிடப்பட்டு 16 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறும் அவ்வீடுகளின் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. 2009 ஆம் ஆண்டு முதல் அத்துமீறிய குடியிருப்பாளர்களுக்கு இவ்வீடுகளில் குடியிருந்தமை கண்டறியப்பட்டது.

(உ) மீளாய்வாண்டின் போது பல்வேறு செயற்திட்டங்கள் அமுலாக்கப்படுவதற்காக ரூபா 1001.74 மில்லியன் கூட்டுத்தொகையான மூலதன மானியங்கள் அதிகாரசபைக்கு கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் இதிலிருந்து செலவிடப்பட்ட அளவு ரூபா 984.16 மில்லியன் தொகையானமையால் ஆண்டின் இறுதியில் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது எஞ்சியிருந்த மூலதன மானியங்களின் மீதி ரூபா 17.58 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது.

(ஊ) அதிகாரசபையால் உதவி அடிப்படையில் வழங்கப்பட்ட குத்தகை வீடுகளின் குத்தகை வீட்டு உரிமையாளர்கள் வீடுகளில் சட்டபூர்வமான உரித்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் வெளித்தரப்பினருக்கு அவ்வீடுகள் விற்பனை செய்யப்பட்டு பாரியளவு இலாபம் உழைக்கப்பட்டிருந்ததுடன் அதிகாரசபையால் அந் நடவடிக்கைகள் தடுக்கப்படுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக தேசத்தைக் கட்டியெழுப்பும் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சினால் 2008 ஆம் ஆண்டின் போது பெறப்பட்ட ரூபா 1.35 மில்லியன் தொகை, மில்லகந்த மற்றும் பிரோஸெஸ்டர் போன்ற தோட்ட வீடமைப்புச் செயற்திட்டங்களுக்காக பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அப் பிரிவால் உரிய செயற்திட்டம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) முற்பணம் தீர்க்கப்படுவதில் பாரிய தாமதம் உள்ளமை கண்டறியப்பட்டதுடன் தீர்க்கப்படாத முற்பணத்தின் விபரம் பின்வருமாறாகக் காணப்பட்டது.

| | 1 ஆண்டிற்குக் குறைவானவை ரூபா | 1 – 2 ஆண்டுகள் ரூபா | 2 – 3 ஆண்டுகள் ரூபா | 3 இற்கு மேற்பட்ட ஆண்டுகள் ரூபா |
|---|---|---|---|---|
| நானாவித முற்பணம் | 14,450,087 | 6,935,559 | 233,486 | 889,728 |
| ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணம் | 52,041,909 | - | 6,521,251 | 72,394,309 |
| களஞ்சிய முற்பணம் | - | - | - | 200,000 |

4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2013 பெப்ரவரி 06 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட முற்றரப்பு உடன்படிக்கையின் பிரகாரம், ஜல்தர வீட்டுச் செயற்திட்டத்தின் 400 வீடுகள் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் வீட்டைப் பெற்றவர்களின் கடன் தவணைகளை அறவிட்டு வீடுகளை நிர்மாணிப்பதற்காக திறைசேரியால் அதிகாரசபை பெற்றிருந்த ரூபா 721.75 மில்லியன் தொகையான கடன் தொகையை மீளச் செலுத்துவதற்கு வங்கிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் இக் கொடுக்கல்வாங்கலின் கீழ் மேலும் திறைசேரி செலுத்த வேண்டியதாக ரூபா 3.42 மில்லியன் தொகையான பெறுமதி கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) அதிகாரசபையின் 52 பேர் அடங்கிய பொறியியல் பிரிவு இருக்கையிலும் அப் பிரிவின் கீழ் உரிய நிர்மாணிப்பு வேலைகள் துணை ஒப்பந்தக்காரர்களின் மூலம் மேற்கொள்ளப்படுவதற்கான சந்தர்ப்பம் இருக்கையில் மீளாய்வாண்டின் போதும் ரூபா 228.67 மில்லியன் தொகையான பெறுமதி கூட்டு ஆதன ஆதனங்களின் பழுதுபார்ப்பு நடவடிக்கைகளுக்காக அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் இரு உத்தியோகத்தர்கள் சேவையைவிட்டுச் சென்றிருந்ததுடன் இவ் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 749,975 கூட்டுத்தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஐக்கிய அரபு இராச்சியத்தின் ரெடிகிரசன்ட் கம்பனிக்கு 1998 ஆம் ஆண்டின் போது 60 வீடுகளிலான வீட்டுச் செயற்திட்டம் நிர்மாணிக்கப்படுவதற்காக அதிகாரசபையால் அத்நாவல தோட்டத்திலிருந்து வழங்கப்பட்டிருந்த 726.35 பேர்ச்சிற்காக அதிகாரசபைக்கு வழங்கப்பட வேண்டிய தொகை ரூபா 5,297,604 ஆகக் காணப்பட்டதுடன் 2012 திசெம்பர் 31 வரையிலும் ரூபா 3,415,000 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. எஞ்சிய தொகையான ரூபா 1,882,604 தொகையை அறவிடுவதற்காக அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அதிகாரசபையால் “100 வீடுகள் நிர்மாணிக்கப்படும் நிகழ்ச்சித்திட்டத்தில்” செயற்பாடற்ற சமூக நிலைய நிர்மாணிப்பு மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 6.76 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஊ) 117 தோட்டம், எல்விடிகல மாவத்தை, (ஐஏ) ஆம் கட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட 08 வீடுகளில் 04 வீடுகள் 2011 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டு அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் இதற்காக இதுவரையிலும் ரூபா 4.97 மில்லியன் தொகை பெறப்படுவதற்கிருந்தது. அதிகாரசபையின் வீடுகளை வழங்கும் நடைமுறையிலிருந்தும் உடன்படிக்கையும் இன்றி எஞ்சிய 04 வீடுகளில் 02 வீடுகள் முறையே ரூபா 50,000 தொகையும் ரூபா 1,000,000 உம் பெறப்பட்டு 2008 ஆம் ஆண்டு முதல் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எஞ்சிய தொகை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ரூபா 50,000 ஆன முற்பணத் தொகை பெறப்பட்ட ஏ/1/1 ஆம் இலக்க வீட்டிற்காக அடிப்படைத் தொகையாக ரூபா 455,000 தொகை அறவிடப்பட்டு விற்பனை அடிப்படையின் கீழ் வழங்கப்பட்டுள்ளதாகவும் ரூபா 1,000,000 தொகையான முற்பணத் தொகை பெறப்பட்டு ஒதுக்கப்பட்ட ஏ/3/1 ஆம் இலக்க வீடு ஒதுக்கல் இரத்துச்செய்யப்பட்டு வேறு கொள்வனவாளர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒதுக்கப்படுவதற்காக பணம் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் பொது முகாமையாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(எ) பீஈடீ/ஜீஈஎன்/2004 ஆம் இலக்க மற்றும் 2005 யூலை 13 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி 2010 ஆம் ஆண்டில் அதிகாரசபைக்குரித்தான மிகையான பணப் பெறுமதியான ரூபா 47.46 மில்லியன் தொகை அதிகாரசபையின் பத்து இலட்சம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வீட்டுக் கடன் மற்றும் வீடமைப்பின் எதிர்வரும் நடவடிக்கைகளுக்காக மீளப் பெற்றுக்கொள்ளப்படும் எதிர்பார்ப்புடன் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதிகாரசபை மீளாய்வாண்டின் போது அத் தொகை திறைசேரியிலிருந்து மீளப் பெறப்பட்டிருந்த போதிலும் அதனை வழங்க முடியாதென பொது முயற்சிகள் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அதிகாரசபையால் இத் தொகை திரண்ட நிதியத்திலிருந்து பெறவேண்டிய தொகையாக நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 4.5 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மாளிகாவத்தை மாவட்ட அலுவலகத்திற்கு உரித்தான குத்தகைக்குப் பெறப்படுவதற்கு உயர் கேள்வியுள்ள 02 கட்டிடங்கள் 1 1/2 ஆண்டுகள் முதல் 06 ஆண்டுகள் வரையான கால எல்லைக்குள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்தது. இதில் ஒரு கட்டிடம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாததன் காரணமாக திருத்தப்பட முடியாத நிலைக்கு உட்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரசபைக்குரிய ரூபா 6,653,000 மதிப்பீட்டுப் பெறுமதியான பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட 09 மோட்டார் வாகனங்கள் 2006 ஆம் ஆண்டு முதல் கைதவிர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையானது துணைக்கம்பனியில் ரூபா 120 மில்லியன் தொகை முதலீடு செய்யப்பட்டு 17 ஆண்டுகளும், ஒன்றிணைக்கப்பட்ட கம்பனி ஒன்றில் ரூபா 5 மில்லியன் தொகையும் முதலீடு செய்யப்பட்டு 11 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அம் முதலீடுகளிலிருந்து 2011 ஆம் ஆண்டு தவிர்ந்த ஏனைய ஆண்டுகளின் போது பங்கிலாபங்கள் வழங்கப்பட்டிராமையால் எவ்வித நலனும் அதிகாரசபைக்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ஆ) சனாதிபதி நிதியத்தினால் 1991 ஆம் ஆண்டின் போது ரூபா 250 மில்லியன் தொகையான கடன் தொகை வருடாந்தம் 15 சதவீத வட்டியுடன் மீளச் செலுத்துவதற்கு உடன்பட்டு பெறப்பட்டிருந்தது. இதற்கு உரித்தான தவணைப்பணமும் வட்டியும் முறையாகச் செலுத்தப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செலுத்தப்பட்டிருந்த மூலதன மீதி ரூபா 55 மில்லியன் மாத்திரமேயாகும். இதன் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் தொகைக்காக ரூபா 195 மில்லியன் தொகையான மூலதன மீதி செலுத்தப்பட வேண்டியிருந்ததுடன் செலுத்தப்பட வேண்டிய கடன் வட்டி ரூபா 257.41 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. ஆகையால் சனாதிபதி நிதியத்தால் பெறப்பட்ட கடனுக்காக மிகக் கூடிய வட்டி வீதம் செலுத்தப்பட்ட போதிலும் அவ்வட்டி வீதம் குறைக்கப்படுவதற்கு போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான காணியில் ஒருகொடவத்த கட்டிடத் தொகுதி நிர்மாணிப்பிற்காக 2005 ஆம் ஆண்டின் போது அதிகாரசபையால் ரூபா 39.9 மில்லியன் தொகை செலவிடப்பட்டதை அடுத்து நிர்மாண வேலைகள் கைவிடப்பட்டிருந்ததுடன் இக் காணி 2006 மார்ச் மாதமளவில் ஓர் தனியார் கம்பனியால் வீட்டுத் தொகுதி நிர்மாணிப்பதற்கு தேவையான அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அக் கம்பனியும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தன. இக் கட்டிடத்தொகுதிக்காக அதிகாரசபையால் ஏற்கப்பட்ட மேற்குறித்த தொகையை மீளப் பெற்றுக்கொள்ளப்படுவதற்காக உரிய கம்பனி நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் கலந்துரையாடி 2011 ஆம் ஆண்டின் போது உடன்பாட்டிற்கு வந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதிகாரசபைக்கு இப் பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கையேற்கப்பட்ட 05 காணிகளுக்கு உரித்தாக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட்டிருந்த நட்டஈடு ரூபா 7.46 மில்லியன் தொகையானதுடன் குறித்த காலப்பகுதியின் போது காணிக்கான நட்டஈட்டைச் செலுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையால் அக் காணிக்காக அதிகாரசபைக்கு செலுத்தப்பட நேர்ந்த நட்டஈட்டு வட்டி ரூபா 10.70 ஆகக் காணப்பட்டது.

(உ) 2012 தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் வரிசை அமைச்சிலிருந்து கண்காட்சிக்கூடம் நிர்மாணிக்கப்படுவதற்காக ரூபா 5,143,550 தொகையான செலவினமும் அதிகாரசபையால் ஏற்கப்பட்டிருந்தது.

## 4.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) யாழ்ப்பாண மாவட்டக் காரியத்தினால் கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள் வீடமைப்புக்கடன் திட்டத்தின் (ரீசீசீஎஸ்) கீழ் வழங்கப்பட்ட ரூபா 5,965,000 பெறுமதியான 1,468 வீடமைப்புக் கடன்களை கோவைகள் காணாமற் போன காரணத்தினால் அக் கடன் தொகையை அறவிட்டுக்கொள்வதற்கு அதிகாரசபைக்கு முடியாதிருந்தது. இது தொடர்பாக அதிகாரசபை போதிய சட்ட பூர்வ நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(ஆ) வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக் கட்டிடத்தின் சில மாடிகள் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2007 மார்ச் 02 ஆம் திகதி தயாரிக்கப்பட்டிருந்த குத்தகை வாடகைத்தொகை மதிப்பீட்டின் பிரகாரமான இறைகள் எக் காரணமும் குறிப்பிடாது 2008 சனவரி 01 ஆம் திகதி தயாரிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டின் மூலம் குறைக்கப்படுவதனால் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 22,874,800 தொகையான திருண்ட குத்தகை வாடகை வருமானம் கிடைக்கப்பெறாது போயிற்று.

(இ) அவிஸ்ஸாவலை மாணிக்கவத்த வீடமைப்புச் செயற்திட்டத்திற்காக 2007 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 76.07 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் வேலை பூர்த்திசெய்யப்பட்டிராத 75 வீடுகளின் நிர்மாணிப்புகள் பூர்த்திசெய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதற்காக வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக வங்கியுடன் உடன்படிக்கை ஏற்படுத்தப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிதிக்கூட்டுத்தாபன வங்கியால் ரூபா 43.925 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. ஆகையால் இவ் வீட்டுச் செயற்திட்டத்தால் ரூபா 32.145 மில்லியன் தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

### 4.8 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 6.40 மில்லியன் பெறுமதியான கிளிநொச்சி மாவட்டக் காரியாலய நிர்மாணிப்பு நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டு 2010 ஒக்டோபர் 30 ஆம் திகதி அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அந் நிர்மாணிப்பு நடவடிக்கைகளுக்காகச் செலுத்தப்பட வேண்டிய எஞ்சிய ரூபா 4.61 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதிகாரசபையால் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மாளிகாவத்தை வீடமைப்புத் திட்டத்தின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம் 56 சதவீதமாகக் காணப்பட்டதுடன் நிதி முன்னேற்றம் 136 சதவீதமாகக் காணப்பட்டது.

### 4.9 ஏனைய அரச நிறுவகங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரசபை வளங்கள்

பீஈடீ.ஃ.12 ஆம் இலக்க 2003 யூன் 2 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வாண்டின் இறுதியில் வரிசை அமைச்சிற்கும் கல்வி அமைச்சிற்கும் விடுவிக்கப்பட்ட 19 உத்தியோகத்தர்கள்.ஃ. ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த சம்பளம் ரூபா 6.67 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது.

### 4.10 பதவியணி நிர்வாகம்

| பதவியின் பெயர் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | |
|---|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | மிகையான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
| சிரேஷ்ட நிறைவேற்றுனர் | 17 | 17 | - | - |
| மத்திய நிலை முகாமைத்துவம் | 97 | 81 | - | 16 |
| கனிஷ்ட நிலை முகாமைத்துவம் | 143 | 142 | - | 01 |
| முகாமைத்துவ உதவியாளர்கள் | 913 | 1489 | 576 | - |
| ஆரம்ப மட்டம் | 205 | 458 | 253 | - |
| மொத்தம் | **1,375** | **1,848** | **829** | **17** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அதிகாரசபையின் மனித வளத் திட்டத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 2493 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் 2010 யூலை 01 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணி 1375 ஆகக் காணப்பட்டது.

(ஆ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளபடியான பதவியணி எண்ணிக்கை 2,187 ஆனமையால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலாக ஒட்டுமொத்த ஊழியர்கள் 829 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இம் மிகையான பதவியணியில் நாளாந்தக் கொடுப்பனவு அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட 325 உத்தியோகத்தர்களும் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட 71 உத்தியோகத்தர்களும் காணப்பட்டனர்.

(இ) அதிகாரசபையால் அங்கீகரிக்கப்பட்டிராத 23 பதவிகளுக்காக 73 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் இவர்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 12,571,511 மாத்திரம் சம்பளங்கள் மற்றும் படிப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) பீஈடீ/12 ஆம் இலக்க 2003 யூன் 02 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பிரிவிற்கு முரணாக இரு உத்தியோகத்தர்கள் பதில் கடமைப் பதவிகளிலும் 16 உத்தியோகத்தர்கள் கடமை மேவுகை நடவடிக்கைகளுக்காகவும் 01 மாதம் முதல் 10 ஆண்டுகள் வரையான காலம் அமர்த்தப்பட்டிருந்தனர்.

(உ) 2012 ஆம் ஆண்டிற்காக அதிகாரசபையால் பதவியணி பாதீடு தயாரிக்கப்படுகையில் தீர்மானிக்கப்பட்ட காலப்பகுதியில் எதிர்பார்க்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் கேட்டு விலகல்கள் தொடர்பான எதிர்வுகூறல் மற்றும் ஒப்பந்த நியமனங்கள் ஆகிய எடுகோள்கள் கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.11 வரி முகாமைத்துவ நலிவுகள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 யூன் 03 ஆம் திகதியதும் 2012 செப்தெம்பர் 24 ஆம் திகதிய உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டகடிதங்களின் பிரகாரம் 2003, 2008, 2009 ஆம் 2010 ஆம் ஆண்டுகளிற்குரிய நிலுவையான பெறுமதிசேர் வரித் தொகை ரூபா 37.51 ஆகவும் இதற்கு உரித்தான தண்டப்பணம் ரூபா 5.23 மில்லியன் தொகையாகவும் காணப்பட்டது. இந் நிலுவையான வரித் தொகையைச் செலுத்துவதற்கோ அல்லது தீர்த்துவைக்கப்படுவதற்கோ 2013 ஒக்டோபர் 31 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2003, 2004 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளுக்கு உரித்தாக அதிகாரசபையால் மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 14.38 மில்லியன் தொகையான பெறுமதிசேர் வரித் தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மீண்டும் அறவிடப்படுவதற்கோ அல்லது தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பாக ரூபா 20.86 மில்லியன் தொகை நிலவியதுடன் ஆண்டின் இறுதியில் இப் பெறுமதி ரூபா 22.72 ஆகக் காணப்பட்டதுடன் இது தீர்க்கப்படுவதற்காகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.12 கடன் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் இறுதியில் கணக்குகளின் பிரகாரம் வீடமைப்புக் கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் ரூபா 2,412.31 மில்லியன் தொகையான கடன்பட்டோர் மீதியும் ரூபா 8,223.61 மில்லியன் தொகையான மூலதன மீதியும் நிலவியதுடன் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இறுதியில் முறையே ரூபா 2,479.58 மில்லியன் தொகையும் ரூபா 4,734.8 மில்லியன் தொகையுமான மீதி நிலவியது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போதான உள்ளபடியான அறவீடுகள் ரூபா 1,733.14 ஆகக் காணப்பட்டதுடன் இது பாதீடப்பட்ட அறவீட்டின் அளவில் 61 சதவீதம் மாத்திரமேயாகும். இவ்வாறே உள்ளபடியான அறவீடுகள் மொத்த கடன்பட்டோர் மீதியில் 40 சதவீதமான குறைந்த அளவைக் கொண்டிருந்தது.

(ஆ) அதிகாரசபையால் பாதீடப்பட்ட அறவீடுகளின் அளவு தீர்மானிக்கப்படுகையில் மொத்த கடன்பட்டோர் மீதியின் 65 சதவீதமான கடன்பட்டோரே கருத்திற்கொள்ளப்பட்டிருந்தமையால் இது கடன் முகாமைத்துவத்தின் நலிவென்பது அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் போது செயற்பாடற்ற கடன்பட்டோரின் மொத்த கடன்பட்டோர் எண்ணிக்கை 80 சதவீதமாகக் காணப்பட்டது.

(ஈ) ரூபா 100 கடனைச் சேகரிப்பதற்காக ரூபா 3.50 அளவிலான கிரயத்தைச் செலவிட்டிருந்த போதிலும் மொத்த கடன்பட்டோர் மீதியில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மொத்த கடன்பட்டோர் எண்ணிக்கை 85 சதவீதமாகக் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் மீளாய்வாண்டின் போது இக் கடன் அறவீட்டின் அளவு 5.5 சதவீதமளமாகக் காணப்பட்டது. இக் கடனை அறவிடும் முகாமைத்துவ முறைமை நலிவென்பது அவதானிக்கப்பட்டது.

உதவிக் கடன் நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக அதிகாரசபை அரச வங்கிகளிலிருந்து கடனுக்குப் பெறப்பட்டிருந்ததுடன் வட்டியுடனான மாதாந்த கடன் தவணைப்பணம், அதிகாரசபைக்கு முறைப்படி அறவிடப்பட்டிராத போதிலும் அதிகாரசபையால் குறித்த தினத்தில் வங்கிக்குச் செலுத்தப்படுவதற்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆகையால் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட கடன் தொகைக்கு உரித்தான நிலுவைக் கடன் தொகையான ரூபா 44.17 மில்லியன் வங்கிக்குச் செலுத்தப்படுவதற்கு நேர்ந்ததுடன் இதற்காக அதிகாரசபையின் நாளாந்த நடவடிக்கைகளுக்காக உள்ள பணமும் இதற்காக ஈடுபடுத்தப்படுவதற்கு நேர்ந்தது.

(ஊ) உதவிக் கடன் நிகழ்ச்சித்திட்டத்திற்காக அரச வங்கிகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் மீதியில் வங்கி மீதி உறுதிப்படுத்தப்படுவதுடன் உடன்படாத பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. ஊ

| வங்கி | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்கின் பிரகாரம் | வங்கி மீதிகளின் உறுதிப்படுத்தலின் பிரகாரம் | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| தேசிய சேமிப்பு வங்கி | 1,282.70 | 1,284.95 | 2.25 |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | 84.89 | 94.89 | 10.00 |
| இலங்கை வங்கி | 1,241.64 | 1,242.84 | 1.20 |

மீளாய்வாண்டின் மார்ச் மாதத்திலும் இறுதி 06 மாதங்களின் போதும் உள்ளபடியான கடன் அறவீடுகளை இலக்கிடப்பட்ட நிலையிலும் பார்க்க குறைவான நிலையைக் கொண்டிருந்தது. ஒரு வருடத்திற்கு உரித்தான உள்ளபடியான அறவீடுகளின் அளவு இலக்கிடப்பட்ட அறவீடுகளின் அளவைப் பார்க்கிலும் ரூபா 1,056.86 மில்லியனான குறைந்த அளவைக் கொண்டிருந்தது.

(ஏ) உடன்படிக்கையின் பிரகாரம், உதவிக் கடன்தவணைப்பணம் கடன்பெறுனரின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்டுக்கொள்வதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அதிகாரசபைக்கு கடன் மீளச் செலுத்தப்பட்ட கடன்பெறுனர்களின் எண்ணிக்கை 20 சதவீத அளவிலான குறைந்த அளவைக் கொண்டிருந்தமை கண்டறியப்பட்டது.

(எ) மீளாய்வாண்டின் மார்ச் மாதத்திலும் இறுதி 06 மாதங்களின் போதும் உள்ளபடியான கடன் அறவீடுகளை இலக்கிடப்பட்ட நிலையிலும் பார்க்க குறைவான நிலையைக் கொண்டிருந்தது. ஒரு வருடத்திற்கு உரித்தான உள்ளபடியான அறவீடுகளின் அளவு இலக்கிடப்பட்ட அறவீடுகளின் அளவைப் பார்க்கிலும் ரூபா 1,056.86 மில்லியனான குறைந்த அளவைக் கொண்டிருந்தது.

(ஏ) உடன்படிக்கையின் பிரகாரம், உதவிக் கடன்தவணைப்பணம் கடன்பெறுனரின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்டுக்கொள்வதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அதிகாரசபைக்கு கடன் மீளச் செலுத்தப்பட்ட கடன்பெறுனர்களின் எண்ணிக்கை 20 சதவீத அளவிலான குறைந்த அளவைக் கொண்டிருந்தமை கண்டறியப்பட்டது.

## 5. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டுத்திட்டம்

அதிகாரசபையால் 2012 - 2016 காலப்பகுதிக்காகத் தயாரிக்கப்பட்ட கூட்டுத்திட்டத்தில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கூட்டுத்திட்டச் செயற்பாடுகள், செயற்பாட்டுத் திட்டம் மற்றும் பாதீட்டிற்கு இடையே தொடர்பைக் கட்டியெழுப்பும் தொடர்பை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

ஆ) குறித்த ஆண்டுகளின் இறுதியில் கூட்டுத்திட்டச் செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பான முன்னேற்றமும் செயற்படாத மற்றும் மந்த நிலையில் இயங்கும் பிரிவுகள் தொடர்பாக மதிப்பிட்டு எதிர்வரும் நடவடிக்கைகள் தொடர்பான ஓர் அறிக்கை தயாரிக்கப்பட்டிராததுடன் பணிப்பாளர் சபையின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

5.2 **செயற்பாட்டுத் திட்டம் - 2012**

வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் 39,493 வீடுகள் நிர்மாணிக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 10,851 வீடுகள் மாத்திரமே வேலை பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. இது திட்டமிடப்பட்ட அளவைப் பார்க்கிலும் 27 சதவீதமாகக் காணப்பட்டது.

5.3 **உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வு தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சில மாவட்ட காரியாலய நடவடிக்கைகள் பல ஆண்டுகளாக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த செயற்பாடுகள் செயலாற்றல் கணக்காய்விற்கு போதிய கவனம் கோரப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 48 ஆன போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த ஊழியர்களின் எண்ணிக்கை 22 ஆகக் காணப்பட்டது.

5.4 **கொள்வனவுத் திட்டம்**

(அ) 2012 ஆம் ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் இதற்காக அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் செயற்பாடுகள் 2012 ஆம் ஆண்டிற்கு உரித்தான கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

- ஆகக் குறைந்தது 03 ஆண்டு காலத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட கொள்வனவு நடவடிக்கைகள் பிரதான கொள்வனவு திட்டத்தில் பட்டியற்படுத்தப்பட்டிருத்தல்.
- பிரதான கொள்வனவு திட்டம் 06 மாதங்களுக்கு மேற்படாத காலத்திற்குள் தினமும் நாளதுவரையாக்கல்.
- விபரமான கொள்வனவுத் திட்டம் ஒன்று சமர்ப்பித்தல்.

5.5 **பாதீட்டுக் கட்டுப்பாடு**

அதிகாரசபையால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், முறையே ரூபா 1,431 மில்லியன் மற்றும் ரூபா 1,734.41 மில்லியன் தொகைகளான உள்ளபடியான வருமான மற்றும் செலவினம் ரூபா 1,529.07 மில்லியன் மற்றும் ரூபா 1,453 மில்லியன் தொகையான பாதீடிடப்பட்ட தரவுகளும் ஒப்பிடுகையில் ரூபா 98.07 மில்லியன் தொகையால் வருமானத்திலும் ரூபா 281.41 மில்லியன் தொகையால் செலவினத்திலும் வேறுபாடும் அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம், பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாக பயன்படுத்தப்பட்டமையை அவதானிக்க முடியாதிருந்தது.

5.6 **ஆண்டறிக்கை சபையில் சமர்ப்பித்தல்**

அதிகாரசபையால் 2011 ஆம் ஆண்டிற்கு உரித்தான ஆண்டறிக்கை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

5.7. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஒப்பந்தக் கட்டுப்பாடு

(ஆ) முற்பணக் கட்டுப்பாடு

(இ) பதிவுப் பொருள் கட்டுப்பாடு

**ஒப்பம்: எச்.ஏ.எஸ் சமரவீர**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி